THAYAGAM

75¢

14 . 1 . 94

உண்மை:5
தேடல்:28

# தாயகம்

## மாத்தயா, யோகி இயக்கத்திலிருந்து வெளியேற்றம்

### தொண்டமான் செல்லசாமி மோதலில் லாபம் தேட முனையும் ஜனாதிபதி

### தேர்தலில் போட்டியிடுமாறு இராணுவம் பலவந்தம் போட்டியிட்டால் புலிகள் கொலை

இருண்ட என் தேசத்தில்
அருணன் ஒளி பரவட்டும்
அவனது கதிர்த் தூரிகைகள்
இருளை விரட்டட்டும்

வரண்ட வயல்களில்
மனித உயிர்களின்
அறுவடை வேண்டாம்

சுமை தாங்கிய நெற்கதிர்களே
பூமித்தாயை முத்தமிடட்டும்

துப்பாக்கிகள் மௌனித்து
துயரங்கள் விலகிப் போய்..

நாளெல்லாம் இன்பம் பொங்கட்டும்

மௌனிக்கா

தாயகம் வாசகர்களுக்கு
எங்கள் மனம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்



Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
Tel:(416) 299-4202

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

R. Gunaratnarajah.

Second class mail Registration No:8435




# மாத்தயா, யோகி இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டனர்

நெதர்லாந்து வானொலி நிருபர் சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பியதை அடுத்து மாத்தயா பற்றிய மேலும் சில தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பிரபாகரனுக்கு எதிரான இந்தியச் சதியில் பங்கு கொண்டதாகக் கூறி மாத்தயா, யோகியும் வேறு சிலரும் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக பாலசிங்கம் கூறியுள்ளார். இயக்க கொள்கைகளுக்கு முரணாக அவர்கள் நடந்து கொண்டதால் விலக்கப்பட்டதாகவும் இவர்கள் மீது விசாரணை நடத்தப்படுவதாகவும் பாலசிங்கம் அந்த வானொலி நிருபருக்கு தெரிவித்திருக்கிறார்.

மாத்தயாவுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு தயக்கம் காட்டும் புலிகளின் தலைமை தற்போது இதற்கு ஆதரவு திரட்டி வருகிறது. இதற்காக மாத்தயா பற்றிய விபரங்கள் இயக்கத்தினருக்கு வெளியிடப்பட்டு அவர்களின் கருத்துக்களை தலைமைப்பீடம் கேட்டு வருகிறது. மாத்தயாவுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு பரவலான உடன்பாடு புலிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் இல்லை என்பதாலேயே இந்த தயக்கம் காட்டப்படுவதாக கருதப்படுகிறது.

# தேர்தலில் போட்டியிட பலவந்தம்

வடக்கிலும் கிழக்கிலும் புலிகளின் கொலை மிரட்டல்களையும் மீறி சுமார் இரண்டாயிரம் பேர் வரை தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர். சுமார் நாற்பது உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை மார்ச் முதலாம் திகதி வரை தாக்கல் செய்ய முடியும்.

மட்டக்களப்பில் வேட்பாளர் ஒருவர் புலிகளால் கொல்லப்பட்டது தெரிந்ததே. மட்டக்களப்பில் பாதுகாப்பு படைகள் சாதாரண பிரஜைகளை போட்டியிடுமாறு வற்புறுத்துவதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் தெரிவித்திருக்கிறது. இராணுவத்திடம் சரணடைந்த புலிகளின் ஆதரவாளர்கள் பன்னிரு பேர் இராணுவத்தினரால் பலவந்தமாக வேட்பு மனுக்களில் கையொப்பமிடும்படி வற்புறுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்கும்படி தேர்தல் ஆணையாளர் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியிருக்கிறார்.

ஐ.தே.க, சு.க, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், டெலோ, புளொட் முதலிய கட்சிகள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றன.

# மேன்முறையீட்டில் நிராகரிக்கப்பட்ட அகதிகளை சுவிஸ் வெளியேற்றுகிறது

சுவிஸ் தற்போது நிராகரிக்கப்பட்ட அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முயன்று வருகிறது. சுவிஸில் அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் மேன்முறையீடு செய்த பின்னரும் நிராகரிக்கப்பட்ட ஐம்பது தமிழ் அகதிகளை அனுப்புவது குறித்து இலங்கை அரசும் சுவிஸ் அரசும் ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்துள்ளன.

1992 செப்டம்பர் 1ம் திகதிக்கு பின்னர் அகதி மனுக் கோரியவர்களே இந்த ஒப்பந்தப்படி திருப்பி அனுப்பப்படுவார்கள். இந்த திகதிக்கு முன்னர் அகதி மனுக்கோரி, நிராகரிக்கப்பட்டு மேன்முறையீடு செய்த பின்பும் நிராகரிக்கப்பட்டவர்கள் வேறு வசதிகள் செய்யப்படும்வரை சுவிஸில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

அத்துடன் ஒப்பந்தப்படி திருப்பி அனுப்பப்படும் அகதிகள் யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்கு போகுமாறு நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள். இவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினாலும் இலங்கை அரசினாலும் அமைக்கப்படும் அகதி முகாம்களில் நிரந்தர வசிப்பிடங்களைத் தேடிக் கொள்ளும்வரை வசிக்க முடியும்.

சுவிட்சலாந்தில் சுமார் 14 ஆயிரம் பேரின் அகதி மனுக்கள் நிராகரிக்கப்பட்டு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளன. தங்கள் மேன்முறையீட்டுக் காலங்களில் முறைகேடாக நடந்து கொள்பவர்கள் குறித்து எழுந்த எதிர்ப்புகள் காரணமாக அவர்களை சிறையில் இடுவதாக சுவிஸ் அரசு கடந்த செப்டம்பர் மாதம் உறுதியளித்திருந்தது.

# தொண்டமான் செல்லசாமி மோதலில் லாபம் தேட முனைகிறார் ஜனாதிபதி

தொண்டமானுக்கும் செல்ல சாமிக்குமான மோதல் மீண்டும் தொடர்கிறது. இந்த மோதலை தனக்கு சாதமாக்கிக் கொள்வதில் ஜனாதிபதி விஜேதுங்க முனைந்து நிற்கிறார். தொண்டமானைச் சந்திக்க மாட்டேன் என்ற ஜனாதிபதி உடனடியாக செல்லசாமியை சந்தித்து அவருக்கு அடுத்த அமைச்சரவை மாற்றத்தில் முழுமையான அமைச்சர் பதவி தரவுள்ளதாக கூறியுள்ளார் என்று கூறப்படுகிறது. செல்லசாமியை ஆதரிப்பதன் மூலம் தொண்டமானை மட்டம் தட்டுவதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

அத்துடன் தொண்டமானின் விசுவாசியான சதாசிவத்தை மத்திய மாகாண கல்வி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி செல்லசாமியின் ஆதரவாளரான கதிரேசன் தற்போது அமைச்சராக்கப் பட்டுள்ளார். இதற்கான உத்தரவு ஜனாதிபதியிடமிருந்தே மாகாண முதலவர் திசநாயக்கவிற்கு சென்றிருக்கிறது. புதிதாக கதிரேசன் நியமிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சி செயலாளர் சிறிசேன கூரேயிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துடன் செல்லசாமிக்கு அதிரடிப் படையினரின் பாதுகாப்பும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருக்கிறது.

முதலில் மத்திய மாகாண சபையை கவிழ்க்க ஒத்துழைக்காத எட்டுப்பேரும் பதவியை ராஜினாமா செய்தால் தான் செல்லசாமியுடன் சமரசம் என்று தொண்டமான் நிபந்தனை விதித்திருந்தார். பின்னர் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று தொண்டா விதித்த நிபந்தனையை அவர்கள் ஏற்காததால் பேச்சுவார்த்தைகள் முறிந்தன. இதன் பின்பே ஜனாதிபதியின் தலையீடு ஆரம்பமானது.

செல்லசாமியின் அலுவலகத்தை தாக்கியதாக தொண்டாவின் பேரன், சதாசிவம் போன்றோர் மீது பொலிஸ் நடவடிக்கை எடுக்க செல்லசாமி முயன்ற போது தொண்டா பிரதமர் ரணிலுக்கு ஆட்சேபித்ததன் பின்னர் அது நிறுத்தப்பட்டது. அவர்கள் பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் அளித்தனர்.

ஒரு புறத்தில் ஜனாதிபதியும் செல்லசாமியும் பேசும் போது மறுபுறத்தில் தொண்டாவும் காமினி திசநாயக்கவும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தற்போது ஐ.தே.க மாகாண அரசுடன் சேர்ந்து செல்லசாமி அணியினர் பொதுக்கூட்டம் நடத்த உள்ளதுடன் உட்பகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தி ஆதரவு தேடும் முயற்சியில் ஈடுபட உள்ளனர். அடுத்த தேர்தலில் தனக்கு தொண்டமானின் ஆதரவு கிடைக்காது என்ற எண்ணத்தில் ஜனாதிபதி செல்லசாமியின் கரத்தைப் பலப்படுத்த முனைகிறார்.

## புத்தளத்தில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம் அகதிகள் மீது பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்ததில் ஏழு பேர் காயமடைந்தனர். வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் அகதிகள் நானூறு பேர் வரை புத்தளத்தில் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். தங்களுக்கு உணவுப் பங்கீடு வழங்கும்படி கோரி இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாக முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த முகமது இலியாஸ் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்திடம் பல தடவை கோரியும் நிவாரணப் பணமோ உணவுப்பங்கீடோ கடந்த ஆறு மாதங்களாக கிடைக்கவில்லை.

## மீனவர்கள் கொலை

புத்தளப் பகுதியில் மூன்று மீன்பிடி வள்ளங்களை புலிகள் தாக்கி நான்கு மீனவர்களைக் கொன்றதாக செய்திகள் கூறுகின்றன. அத்துடன் ஆறு மீனவர்கள் காயமடைந்துள்ளனர். புத்தளத்திலிருந்து ஐம்பது மைல் தொலைவில் உள்ள கதிரமலைப் பகுதியில் பதினெட்டுப் பேரைக் கொண்டு சென்ற படகுகள் புலிகளால் மறித்துதாக்கப்பட்டன. காயமடைந்தவர்களில் ஒருவர் கடுமையான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதற்குள் பருத்தித்துறைக் கடலில் ஒன்பது மீனவர்கள் கடற்படையினரால் சுடப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. காலை வேளையில் கரையோரமாக இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள் என்று கூறப்படுகிறது.

## மேலும் அகதிகள் வருகிறார்கள்

தமிழகத்திலிருந்து இந்த மாதம் நான்காயிரம் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐ.நா அகதிகள் ஸ்தானிகராலயம் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளதுடன் இவர்களுக்கான தங்குமிட வசதிகள் மன்னார் அரசாங்க அதிபரால்

6ம் பக்கம் பார்க்க..

# கண்டுபிடிக்கப்பட்ட உடல்கள் அடையாளம் காணப்படுகின்றன

புதைகுழியில் காணப்பட்ட உடல்கள் குறித்து அரசாங்கம் விசாரணையில் ஈடுபட வேண்டும் என்று அமெரிக்க அரசு கோரியுள்ளது. இலங்கை அரசு மனித உரிமைகள் பற்றிய தனது பங்களிப்பைக் காட்ட இதுகுறித்து விசாரணையில் ஈடுபட வேண்டும் என்று பிரதமர் ரணிலிடம் அமெரிக்க தூதுவர் தெரிவித்திருக்கிறார். இது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தங்கள் தூதுவர் கேட்டதாக வெளிநாட்டமைச்சு தெரிவித்திருக்கிறது.

கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழியில் உள்ள உடல்களில் இரண்டை பெற்றோர்கள் அடையாளம் காட்டினர். இந்த உடல்கள் காணமல் போன பாடசாலை மாணவர்களுடையவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட உடல்களை நீதிமன்றத்தில் வைத்து பெற்றோர் அடையாளம் காட்டினர். இன்னொரு பெண் கண்டு பிடிக்கப்பட்ட சாரத்திலிருந்து காணமல் போன தனது கணவனுடையது என்று அடையாளம் காட்டினார்.

சுமார் அறுநூறு பேர் எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர். எம்பிலிப் பிட்டியவில் காணமல் போன 31 மாணவர்களில் இந்த இரு மாணவர்களும் அடங்குவர். ஒரு மாணவர் பற்களுக்கு கிளிப் போட்டிருந்தார். இன்னொரு மாணவருக்கு மேலதிகமான பல் ஒன்று இருந்தது. இவற்றை வைத்தே இவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டன.

இந்த விசாரணை குறித்து ஆஜராகும் சட்டத்தரணி மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. விசாரணைகள் முடிந்து கொழும்புக்கு திரும்பிக் கொண்டிருந்த சட்டத்தரணி மீதும் அவரது சாரதி மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. சட்டத்தரணி பிரேமரத்தின துப்பாக்கிச் சூட்டில் தப்பித்துக் கொண்ட போதும் அவரது கார் குண்டுகளால் துளைக்கப்பட்டது. வான் ஒன்றில் வந்தவர்களே இந்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கடந்த வாரம் சூரியக்கந்தையில் நான்கு கிடங்குகளில் 26 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் சனிக்கிழமை மேலும் ஒன்பது பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த குழிகள் நாற்பது அடி வரை ஆழம் கொண்டன என்றும் சுமார் 300 பேரின் உடல்கள் வரை கிடக்கலாம் என்றும் சுதந்திரக்கட்சி உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்தார்.

இது குறித்த தகவல்களை அரசாங்கம் மறைப்பதாகவும் திரிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சிறிமா பண்டாரநாயக்க தெரிவித்திருக்கிறார். அரசாங்கமும் சில பொலிஸ் அதிகாரிகளும் இதில் ஈடுபட்டிருப்பதாக அவர் கூறினார். கொல்லப்பட்டவர்கள் ஜே.வி. பியினரால் அல்லது 71 ல் சிறிமா அரசினால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அரசாங்கப் பத்திரிகைகள் தெரிவித்ததையும் அவர் நிராகரித்தார். 71ல கொல்லப்பட்டிருந்தால் சிதையாத நிலையில் உடைகள் இருக்கவும் முடியாது, உடல் அழுகியும் காணப்படாது என்று குழந்தைக்கு கூட தெரியும் என்றார் அவர். அரசுக்கு தொடர்பு இருப்பதால் தான் அரச பத்திரிகைகள் செய்திகளைத் திரிக்கின்றன என்றும் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காணப்பட்ட பொருட்களின் பிக்குவின் உடை ஒன்றும் பாடசாலை மாணவரின் நீலக் காற்சட்டையும் உள்ளது. அத்துடன் பல உடல்களில் கண்கள் வாய்கள், கைகள் கட்டப்பட்டும் உள்ளன.

காணமல் போன மாணவர்கள் 31 பேர் இராணுவத்தினால் கடத்திச் செல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. உண்மையில் பாடசாலை அதிபரின் மகனின் காதல் கடிதம் ஒன்றை இவர்கள் கண்டுபிடித்து கேலி செய்ததாலேயே இவர்களுக்கும் ஜே.வி.பிக்கும் தொடர்பு உண்டு என அதிபர் இராணுவத்தினருக்கு தகவல் கொடுத்தார் என்றும் அதன் பின்பே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் உறவினர்கள் கூறுகின்றனர். அந்த அதிபர் தனது பதவியை விட்டு விலகி தற்போது வேறிடத்தில் கற்பிக்கிறார். தனக்கும் இந்த கடத்தல்களுக்கும் சம்பந்தம் இல்லை என்கிறார் அவர். ஆனால் ஒரு மாணவர் காணமல் போனது குறித்து பெற்றோர் அதிபருடன் தொடர்பு கொண்ட போது அதிபர் முகாமுடன் தொடர்பு கொண்டு மகன் அங்கிருப்பதாகவும் அவர் சில நாட்களில் விடுவிக்கப்படுவார் என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் மகன் விடுவிக்கப்படவில்லை.

# புதிய ஏவுகணையுடன் இந்தியா

இந்தியா தற்போது தனது புதிய ரக ஆயுத தயாரிப்புகளை கண்காட்சிக்கு வைத்துள்ளது. இதில் விமானி இல்லாமல் பயணம் செய்யும் விமானம் ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டது. இந்த விமானம் ரேடார் கருவிகளுக்கு தப்பி தாக்கக் கூடிய ஏவுகணையாகவும் செயற்படக் கூடியது. குறாய்ஸ் ஏவுகணை

7ம் பக்கம் பார்க்க..

# தாய்லாந்து தூதுவராக தளபதி

பூனகரித் தாக்குதலை அடுத்து பதவியிலிருந்து இளைப்பாறிக் கொண்ட இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்தின தற்போது தூதுவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். லெப்டினனட் ஜெனரல் தரத்திலிருந்து இளைப்பாறிய இவர் இளைப்பாறும் போது ஜெனரலாக கௌரவம் பெற்றிருந்தார். தற்போது இவர் தாய்லாந்திற்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் நியமனத்தை தாய்லாந்து உத்தியோகபூர்வமாக அங்கீகரித் ததும் இவர் பதவியேற்பார்.

இந்த மாத இறுதியில் இவர் தாய்லாந்து செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இராணுவ அதிகாரிக்கு விசாரணை

வடக்கிற்கு தடை செய்யப்பட்ட பொருட்களை அனுப்பி பணம் சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக இளைப்பாறிய இராணுவ அதிகாரி ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. கூட்டுப்படைத் தலைமையகத்தில் பணிபுரிந்த போதே இவர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார். மேஜர் தரத்திலான இந்த அதிகாரி மீது தற்போது இராணுவ நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இவர் சாட்சியங்களை மிரட்ட முயன்றது குறித்தும் விசாரணைகள் நடக்கின்றன.

இவருடன் ஒத்துழைத்ததாக சந்தேகிக்கப்பட்ட அனுரத புரத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் விடுவிக்கப் பட்டுள்ளார். போதிய சாட்சியங்களின்றியே இவர் விடுவிக்கப்பட்டார்.

# ஜெயலலிதா வேந்தரானார்

தமிழ் நாட்டில் உள்ள 13 பல்கலைக் கழகங்களிற்கும் ஜெயலலிதா தன்னையே வேந்தராக நியமித்துள்ளார். முன்பு ஆளுனரே வேந்தராவும் இருந்தார். தற்போது சட்ட வரம்புக்குள்ளேயே இந்த நடவடிக்கை இருப்பதாக கல்வி அமைச்சர் பொன்னுசாமி தெரிவித்திருக்கிறார். மற்ற எதிர்க்கட்சிகள் இதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. ஆளுனரை அவமதிப்பதாகவும் சமஷ்டி கொள்கைகளை மீறுவதாகவும் இது உள்ளதாக அவை தெரிவித்திருக்கின்றன. திமுக, ஜனதா, காங்கிரஸ், மார்க்ஸிஸ்ட் கட்சி என்பன கண்டித்திருக்கின்றன. பல்கலைக்கழகங்களின் அன்றாட செயற்பாடுகளை இவை குழப்பும் என்றும் அவை தெரிவித்திருக்கின்றன.

# காஞ்சிப் பெரியவர் காலமானார்

காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி காலமாகிவிட்டார். இவரது உடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருக்களின் மந்திரம் ஓதல்களுக்கு மத்தியில் புதைக்கப்பட்டது.

காஞ்சி புரத்தில் உள்ள மடத்தில் புதன்கிழமை நோய் வாய்ப்பட்ட இவர் கடந்த சனிக்கிழமை காலமானார். வருகின்ற மே மாதம் 28ம் திகதி இவர் தனது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடவிருந்தார். ஆதி சங்கரரால் எட்டாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட மடத்தில் 68 வது வாரிசாக இவர் செயற்பட்டு வந்தார். பிரப்பம் கூடையில் உப்பின் மத்தியில் வைக்கப்பட்ட இவரது உடல் பன்னிரண்டு அடி ஆழ குழியில் புதைக்கப்பட்டது.

நரசிம்மராவ், ஆளுனர்கள், கட்சித் தலைவர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டனர்.

ஆன்மீக உலகு தனது ஒளியை இழந்து விட்டது என்று நரசிம்மராவும் இவரது மரணம் முழு இந்து உலகுக்குமே இழப்பு என்று நேபாள மன்னரும் தெரிவித்திருக்கின்றனர்.

13 வயதில் ஆச்சிரமவாழ்க்கைக்கு இவர் தெரிவு செய்யப்பட்டார். இவர் ஆங்கிலம், பிரெஞ்சு, சுவீடிஷ் உட்பட பன்னிரண்டு இந்திய மொழிகள் வரை பாண்டித்தியம் பெற்றவர்.

மதங்களுக்கு இடையில் புரிந்துணர்வு வேண்டும் என்று இவர் வலியுறுத்தி வந்தார். இதனால் முஸ்லிம்கள் மத்தியிலும் இவர் செல்வாக்குப்பெற்றிருந்தார். பாபர் மசூதி உடைக்கப்பட்ட போதும் விரக்தியினால் ஒரு மாதம் மௌனம் அனுட்டித்தார்.

# வடபகுதி உணவு வினியோகம் ரத்து

செஞ்சிலுவைச் சங்கம் தற்போது வடக்கிற்கு உணவு கொண்டுசெல்லும் வாகன சேவையை ரத்துச் செய்திருக்கிறது. சமீபத்தில் கொண்டு செல்லப்பட்ட பொருட்களுடன் பட்டரிகள் கடத்தப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டதில் செஞ்சிலுவைச் சங்கம் குற்றம் சாட்டப்பட்டதால் வடக்கிற்கு உணவு கொண்டு செல்வதை செஞ்சிலுவைச் சங்கம் ரத்துச் செய்திருக்கிறது. ஆயினும் பருத்தித்துறை, காங்கேசன்துறைப் பகுதிகளுக்கு உணவு கொண்டு செல்லும் கப்பல்களுக்கு வழிகாட்ட தொடர்ந்தும் இயங்குவதாகவும் சங்கம் மேலும் தெரிவித்திருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம் 90ம் ஆண்டு முதல் உணவு கொண்டு சென்று வருகிறது. செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடத்தப்படும் உணவு வினியோக போக்குவரத்தையே புலிகள் அனுமதித்தும் வருகின்றனர். தற்போது அரசாங்க அதிபர்களே இந்த வினியோகங்களுக்கு பொறுப்பாக இருந்து வருகிறார்கள்.

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள் அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

## Tel:297 9444

## விசேட மலிவு விற்பனை

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.99 | 1.49 |
| குத்தரிசி | 6.99 | 1.49 |
| அரிசிமா | 6.99 | 1.49 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
**1 கிலோ $ 1.59**
**2 கிலோ $ 2.99**

## THURKAS SUPERMARKET

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

சீனி 1.39/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றோசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி, கோழிக்கால், ஈரல், கிட்னி, மரக்கறி வகைகள், பழவகைகள் அனைத்தும் மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST

**Car Certification**
**29.99**

## 755 8550

**CALL**
**MIKE or RAJAN**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio.Transmission.Air Conditon,
General Repair
**பல வருட அனுபவம் மிக்கவர்கள்**

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
**திருத்துவதில் பல வருடம் அனுபவம் உள்ளவர்கள்**

**We use Quaker State Oil**



# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 12

### சின்னத்தம்பி வேலாயுதம்

இவ்வாரம் உள்ளிட்ட கடந்த எட்டுத் தொடர்களிலும் "தமிழ் ஈழமும் இடதுசாரிகளும்" எனும் அத்தியாயத்தில் இலங்கை இடதுசாரிகளின் வரலாற்றுடன் தமிழ் இடதுசாரிகள் வரலாற்றையும்தமிழ் சமூகத்தினைப் பிடித்துள்ள சாதி, சமயம், சீதனம், வட்டி, சீட்டு போன்றவை பற்றி மேலோட்டமாகவும் பார்த்தோம். ஏனைய நோக்கங்களான பிரதேச வாதம், சிங்கள மக்களைப்பொறுத்த மேலாதிக்க விருப்பு, தாழ்வு மனப்பான்மைபோன்றவற்றுக்கும் இடதுசாரித்துவத்தில் இருக்கக் கூடிய தீர்வுகள் தேசியவாதத்தில் இல்லை என்பதை இவ்விடத்தில் வலியுறுத்திக் கூற முடியும்.

1983 ஆடிக் கலவரம் தமிழ் இடது சாரிகளைச் செயலிழக்கச் செய்தது. தீவிர இனவாதம்வெற்றி பெற 83 கலவரம் மிக முக்கியமான காரணமாகும். ஆயுதக் கிளர்ச்சிக்கான ஆரவாரங்களில் மழைக்கு முளைத்த காளான்கள் போல் கிசு கிசு வென இயக்கங்கள் தோன்றின. சகல இயக்கங்களும் இடதுசாரிச் சிந்தாந்தங்களை தங்கள் கொள்கைகளாகப் பிரகடனம் செய்து கொண்டன. இது ஒரு மிக மோசமான தந்திரோபாயமாகும். இதன் பின்னணி பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வழி வழி வந்த தமிழ்த்தேசிய வாதிகளின் ஆதரவு எப்படியோ நூறுவீதம் ஏதாவது ஒரு அல்லது பல இயக்கங்களுக்குக் கிடைக்குமென்பதில் பிரச்சனை யில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இடதுசாரித் துவத்தை நம்பிய ஒடுக்கப்பட்ட மக்கள், மற்றும் உயர் குல முற்போக்குச் சக்திகளை தேசிய வாதத்தை அதிகரிக்கச்செய்யவென வென்றெடுப்பதற்கு எல்லா இயக்கங்களும் இடதுசாரி முலாம் பூசிக் கொண்டார்கள். ஆனால் பல இயக்கங்களின் குணம்சங்கள் அமைப்பு முறை எல்லாம் தீவிர வலது சாரி வாதத்துக்குள்ள செயற்பாடுகளைக் கொண்ட வர்களே. இந்த இடதுசாரி முலாம் பூசல் மூலம் இடதுசாரித்துவத்தை ஆரம்பகட்டமாக உள்வாங்கிக் கொண்டிருந்த இளைஞர்களை எல்லாம் இயக்கத்தில் சேர்க்கக் கூடியதாகவிருந்தது. இதிலே தமிழ் தேசிய வாதம் வெற்றி பெற்றது.

இந்த இயக்கங்கள் எல்லாம் ஒருதத்துவக்குழப்பத்தின் மீதுதான் தமிழ் தேசிய வாதத்தைத் தமது முதல்வாதமாகவும் சோஸலிச நிர்மாணத்தை இரண்டாவதாகவும் வரித்துக் கொண்டன. இங்கு இது பற்றி மேலும் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

வடக்கில் நிலைமை இவ்வாறெனில் தெற்கிலும் அதே நிலைதான் ஏற்பட்டது. ல.ச.ச.க கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) என்பன செயலிழந்துபோக மக்கள் விடுதலை முன்னணி (ஜேவீபீ) இடதுசாரிகளின் பிரதான பாத்திரத்தை எடுத்துக்கொண்டது. இதுவும் தனது முதல் வாதமாகச் சிங்களப் பேரினவாதத்தையும், இரண்டாவது நிலையில் சோஸலிச நிர்மாணத்தையும் வகுத்துக் கொண்டது. இங்கு தான் இருபக்க போலி இடதுசாரி வாதம் விமர்சனத்துக்கு உரியதாகிறது.

சிங்களப் பேரினவாத த்துக்கு அனுசரணையாகப் போன என்.எம், பிலிப் பீட்டர் தமிழ் தலைவர்களாலும் மக்களாலும் கடும் விமர்சனத்துக்கு உள்ளானார்கள். இடதுசாரிகள் இனவாதத்துக்குத் துணைபோக மாட்டார்கள் என்பது பொது விதி. அப்படியாயின் இனவாதத்தை முதல் வாதமாக்கும் ஜேவீபீ மற்றும் இயக்கங்கள் தவறான தத்துவ வழியை முன் தள்ளுகிறார்கள் என்பதுடன் இது மக்களால் நிராகரிக்கப்பட வேண்டியது எனலாம். சிங்களப் பேரினவாதத்தினால் தான் தமிழ் இயக்கங்கள் தமிழ் தேசியவாதத்தை முதல் வாதமாக வைத்தார்களெனின் முஸ்லீம்களைப் பொறுத்தவரை இயக்கங்கள் சிலவின் பதில் என்ன?

இன மொழி, நிற மத பிரதேச பேதமற்ற ஒரு சமுதாயத்தை நோக்கியே ஒரு இடதுசாரி தனது செயற்பாடுகளை முன் வைக்கிறான். மேற்கூறிய ஏதாவதுதொன்றின் விடுதலையின் வளர்ச்சிக் கட்டம் ஒரு சோஸலிச நிர்மாணத்துக்கான போராட்ட மாக அமையும் என்பது தவறானது. ஒரு உதாரணம் கூறுவதாயின் இந்து மதம் அழிகிறது என்று இன்று இந்தியாவில் நடக்கும் போராட்டத்தின் பின்னால் ஒரு சோஸலிசப் போராட்டம் இருக்க முடியுமெனக் கருதுவது தவறானது. அவ்வாறே இலங்கையில் தமிழர் விடுதலை அல்லது பிரிவினை வெற்றி பெற்றால் அதனைத் தொடர்ந்து சோஸலிச நிர்மாணம் நடக்குமெனக் கருதினால் அதுவும் தவறாகும்.

தேசிய இனங்களின் போராட்டங்கள் அதன் பின்னணிகள் பற்றி பல வித ஊகங்கள் வெளிவருகின்றன. முதலாவது சர்வதேச சோஸலிச முகாமை உருக்குலைப்பது இரண்டாவதாக ஆயுத விற்பனையை தேசிய இனப் பேராட்டங்களுக்காக்குவது மூன்றாம் உலக நாடுகளில் பதட்டத்தைத் தோற்றுவிப்பது பல நோக்கங்களுக்குள்ளன. முக்கியமாக நவீன ஆயுத வினியோகம் சம்பந்தப்பட்ட இப்பகுதிக்கும் விநியோகிக்கப் படாவிடில் போரைத் தொடருவது எப்படி? சொந்த உற்பத்திக்கான

**30ம் பக்கம் பார்க்க..**

# உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் வடக்கில் தாக்குதல்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் வடக்கின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை இராணுவம் மேற்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சங்கானை, சாவகச்சேரிப் பகுதிகளில் சமீபத்தில் நடந்த விமானத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். வடக்கில் பல பகுதிகளில் விமானங்கள் தாழப் பறந்து வேவு பார்த்து வருகின்றன. புதிய இராணுவத் தளபதியின் நியமனத்தின் பின்னர் அவர் புலிகளை வென்று நாட்டைக் காப்பேன் என்று தெரிவித்திருந்தார்.

தற்போது இராணுவம் ஆயுதத் தளபாடக் கொள்வனவில் ஆர்வம் காட்டி வருகிறது. சீனவிடமிருந்து பாவித்த வை எட்டு ரக போக்குவரத்து விமானம் ஒன்றை வாங்குவதில் விமானப்படை ஈடுபட்டுள்ளது. முன்பு வை எட்டு ரக விமானம் ஒன்று ஆனையிறவில் விழுந்து நொருங்கியிருந்தது. இதே போன்ற இன்னொரு விமானத்தை இராணுவம் வாங்கியிருந்ததுடன் இன்னொன்றை குத்தகைக்கு எடுத்திருக்கிறது. தற்போது இந்த விமானம் பழமையானது என்பதில் பேச்சுவார்த்தைகள் இழுபறியில் உள்ளன. துருப்புகளையும் ஆயுதங்களையும் கொண்டு செல்லக் கூடிய ரஷ்ய ஹெலிகொப்டர்களையும் வாங்குவது பற்றி இராணுவம் ஆலோசித்து வருகிறது.

தேர்தல்கள் முடிவடைந்ததும் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக சிங்கள மக்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி வெற்றியீட்டும் நோக்குடன் அரசு முயன்று வருகிறது. புதிய தளபதி நியமிக்கப்பட்டதுடன் இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்திலும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. வடக்கு யுத்தப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு முழு அளவிலான தாக்குதல் நடத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது கிழக்கிலிருந்தும் வடக்கிற்கு துருப்புகள் நகர்த்தப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## இந்திய ஏவுகணை..

ரகத்தைச் சேர்ந்த இந்த ஏவுகணை 92ம் ஆண்டு வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது.

லக்சய என்ற இந்த விமானம் இருநூறு கிலோ வெடிமருந்தை 300 மைல் வரை கொண்டு சென்று தாக்கக் கூடியது. தாக்குதல்களுக்கு மட்டுமன்றி வேவு பார்க்கவும் இவை பயன்படுத்தப்படலாம்.

பங்களூரில் நடைபெற்ற கண்காட்சியில் இந்த ஆயுதங்கள் காண்பிக்கப்பட்டன. பாதுகாப்பு ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் இதை ஒழுங்கு செய்திருந்தது.

அத்துடன் உலகின் மிகச்சிறிய, யுத்த விமானம் ஒன்றை இந்தியா 96ம் ஆண்டு முதல் தயாரிக்க உள்ளது. இரண்டாயிரம் ஆண்டு தொடக்கம் முதல் தனி ஆசனம் கொண்ட இந்த விமானமே முன்னணியில் செயற்படும். முப்பது நிமிடங்களின் இதன் இயந்திரத்தை மாற்ற முடியும்.

## எலும்புக்கூடுகளை அடையாளம் காண ஐ.நா உதவியை கோரிக்கை

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் பற்றி விசாரிக்குமாறு மனித உரிமை அமைப்புகள் ஐ.நா சபையைக் கேட்டுள்ளன.

இலங்கையில் மனித உரிமைகளுக்கான நிறுவனம் என்ற பதினேழு அமைப்புகளின் கூட்டு அமைப்பு கடந்த வியாழக்கிழமை ஐ.நா சபையின் காணாமல் போனவர்களுக்கான செயற்குழுவிடம் இது பற்றி விசாரிக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்தும்படி கேட்டிருக்கின்றது.

அத்துடன் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண தகுந்த விஞ்ஞான வசதிகளைத் தந்துதவ வேண்டும் என்றும் ஐ.நா அமைப்புக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

## பூநகரித் தோல்வி விசாரணை முடிவு


சமீபத்திய பூநகரித் தாக்குதலில் இராணுவம் தோல்வியுற்றதற்கான காரணங்களை விசாரித்த குழு அப்போதைய வடபகுதித் தளபதி ரேகான் தலுவத்தை உட்பட பல இராணுவ உயர் அதிகாரிகளே காரணம் என்று முடிவு செய்துள்ளது. பூநகரித் தோல்வி குறித்து விசாரணைக்குழு ஒன்றை நியமித்து நடத்திய விசாரணைகளில் இவர்கள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சிசில் வைத்தியரத்தின சென்ற வருட இறுதியில் ஓய்வு பெற முன்னதாக அவரிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தன் மீது பூநகரித் தோல்விக்கான பொறுப்பு சுமத்தப்பட்டதை மறுத்த அவர் இந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றிருக்கிறார்

## மீண்டும் அகதிகள்..

செய்யப்பட்டுள்ளன. சென்ற வருடம் இறுதியாக வந்த அகதிகள் திருமலையில் இருந்து வவுனியா போன்ற இடங்களில் சென்று வாழ்கின்றனர். அத்துடன் கடந்த தடவை இவர்கள் பலவந்தமாகவே அனுப்பப்பட்டதாக குற்றச் சாட்டுக்களும் எழுந்திருந்தன.

இம்மாதம் இறுதிப் பகுதியில் இந்த அகதிகள் கப்பல் மூலமாக வந்து சேர்வார்கள். அங்கிருந்து இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்வார்கள்.

# GOOD BYE BALDNESS



முடி உதிர்பவர்களுக்கு
ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்

Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன்
அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

# Anita's Unisex

**239 Carlton St, West of Parliament**

**Tel:922 0478**

**Ladies' and Men's**
Specializing in Hair CutsPermanents, Tinting and BleachingHair Removal, Permanent Eyelashes
Nails Facial Scalp Clinic
**Cure against Hair loss**
Foam, Spiral Perm, Custom Uniperm
Who specialize in hair cutting and long hair

**Perms $30 & up**
**Try One (1) Professional Skin Care Treatment For only $20.00***

*For New Clients Only *By Appointment only



An off centre and full neckline are the main features on this conservative, short precision scissor cut. May be blown on air dried



Prestige- a short cut featuring a perm Easy-to-look after Lamp or air dried

# SIA TRIANTOS

**Income Tax & Accounting Service**
(416) 469-4906/ 922-0478

## It's Tax Time!!

We offer a professional, accurate and computerized service by competent tax planners. We help you lower your taxable income using tax plan strategies. **We know how to best handle your changing income tax situation.**

We are goverment authorized **Electronic Filing (EFILE). EFILE** is a fast, accurate and paperless new system which enable us to transmit your tax return inexpensively directly to Revenue Canada. Your Return will be processed by Revenue Canada and You will receive your refund within 3-14 days.

**Income Tax By Phone** ™ Service is available again this year. Simply call and give us all your relevant tax information. Your computerized Income Tax return will be delivered to your door- with an extra copy for yourself.

Our prices are competetive... As low as $19.99
You will be satisfied with our service, price and professionalism.
Call to arrange an appointment at our office or in your home at your convenience.

**It is time to benefit from our personalized tax service. Don't forget. We also offer free pick up and delivery service.**

## I MISS YOU

சூரியனை இழந்தும் கூட
வானம்
வெப்பத்தைதான்
தருகிறது
ஒரு மழைத்துளி கூட
விழுந்து நனைய
மறுக்கிறது
உன் கண்பார்வை
கண்டபின்தான்
ஒரு
குளிர்காலத்து கோடை நிலாவின்
வருகையுண்டு
பிறகென்ன
கொண்டாட்டம் தான்

**நிருபா (ஜேர்மனி)**

# தெளிவு

அ ரசாங்கக் காசிலே
ஆ றுபோத்தல் பியர் வாங்கி
இ ரகசியமாய்க் குடிக்க
ஈ யாதவனும் பங்கு சேர்ந்தான். அவன் சொன்னான்
உ னக்கு மட்டும் தெரியட்டும்
ஊ ருக்குத் தெரிய வேண்டாம்
எ ல்லோரும் இங்கு குடிக்கலாம்தானே
ஏ னென்று கேட்க ஆளில்லைத்தானே
ஐ யா என்னை அனுப்பினது ஏனென்று
ஒ ருவருக்கும் தெரிய நியாயமில்லைத்தானே என்றவன்...
ஓர்நான் என்னையே மறந்து விட்டேனா?
ஔ வையாரின் பொன்மொழிகளையும் மறந்தேனா? என
எஃ கு போல் நின்றான் அவன்

மணி (ரொரன்ரோ)

# பனியுலகம்

வெள்ளை நிறம்
பாரினில் படர்ந்து கிடக்கும்
பனிபாறைகள்
மரங்களும்
செடிகளும்
துன்பங்கள் வந்தது போல்
துயரத்துடன் துயில்கொள்கின்றன
வானம் தன் இதயத்தின் வேதனையை
ஈர்ந்து தள்ளுகிறது
குளிரின் கொடுமையால்
கூனிய மக்கள்
விலங்கின் தோல் போர்த்து
வீர நடை போடுகின்றன
பறவைகள் யாவும் பதுங்கி விட்டன
ஆறுகள் யாவும் அமர்ந்து விட்டன
இது என்ன புதிய உலகம்
இது ஒரு பனியுலகம்

**ப. இந்திரன்(சுவீடன்)**

நேற்றுவரை
பத்திரிகையில் மட்டுமல்ல
பத்தினியின் மேனியிலும்
பாங்கான கவியெழுதும்
முத்து மணிக் கைகள் என
கோத்திருந்த கைகளிலே
கோல மயில் நீ கொடுத்த
முத்தம் இன்னும் காயவில்லை
சத்தம் இன்னும் சாகவில்லை
பாத்திருந்த தென்றல்
அது இன்னும்
பாதி வழி தாவவில்லை
இன்று
சூரிச் மாப்பிள்ளை வீட்டிலே
விலைபேசியாயிற்று என
காற்றினிலே காதலை
தூசியென
தூவிவிட்ட காத(கி)லியே
நானென்ன
கறி வேப்பிலையோ?

**மதுரா**
**மொன்றியால்**

## மூன்றும் உலகு

அடேயப்பா
எத்தனை டொலர்கள்
இத்தனை கிடைத்தால்
எத்தனை கனவு
நனவாகிப் போகும்
மூத்தது மூக்கைத் தொட
இளையது இடுப்பதைத் தொட
இடுப்பானை தக்கத் தொடங்குது
மூன்றும் மூக்கறுக்க வந்தாளுக
வருவான் வருவானென்
நானும் பாத்தேன்
வந்ததுகளோ....
வேண்டாம் வயித்தெரிச்சல்
இவளுக்கு தெரியாது
வயிறு ஏன் எரியுதென்று
எப்படி வந்ததென்று
எமக்குள்ளே இருப்பவை
நல்லவையும் கூடாதவையும்
சந்தைக் கலாச்சாரம்
சரக்காய் புகலிடத்திலுமாம்
ஓ ஆசியனே பெண்களே
நாம் திருந்தப் போவதுமில்லை
திரும்பிப் பார்ப்பதுமில்லை
கொரியாவில் மட்டுமா அடிமையாய்
அரபுலகில் குவைத்தில்
எண்ணெய் கொழுப்பில்
எள்ளாய் பிழிவான் அராபியன்
வெள்ளையனோ எடுத்து விடுவான்
கறுப்பு நாயே என
இருக்க இடமில்லை
அடக்க அரிசியில்லை
ஆயுத அறிவில் மட்டும் முதல்
அனைத்திலும் மூன்றும் இடம்

**நந்தன் சுவீடன்**

# இவ்வாரச் சிந்தனைக்கு

படுகொலை யாட்சிக் கொடுமையை எதிர்த்து
விடுதலைப் போர்கள் வெடிப்பது மரபு

பிரச்சனை தீர்க்கும் பெருந்திற னில்லாப்
புரட்சிப் பேச்சுப் புழுகர் ஒழிக

சொல்லும் திறனும் சொல்வதைச் செய்து
வெல்லும் திறனும் தலைமைக்கு வேண்டும்.

**கவிஞர் கந்தவனம்**

# கனடாவில் கலாச்சார அவஸ்தையில் பெற்றேரும் பிள்ளைகளும்

சிவப்பிரகாசம்

**அலாஸ்காவுக்கு போகும் போதும் வெறும் வேட்டியுடன்தான் தெருவில் நடப்பேன் (அதுவும் "சண்டிக்கட்டு" உடன்) என அடம் பிடிப்பது போலத்தான் இதுவும்.**

வெளியிலே சொல்லப் பிரியப்படாத விஷயங்கள். நாலுபேருடன் கலந்தாலோசிக்கக் கூடாதென இப்போதும் ஒளித்து வைக்கும் துணுக்குகள். மனிதனின் மனத்தையும் கலாச்சாரத்தையும் தொடர்பு படுத்திப் பார்க்கவிரும்பாத "முன் தோன்றிய மூத்தகுடிகள்" பதில் காணமுடியாமல் தவிக்கும் புதுநோய் இது. இதைப் பற்றிய ஒரு பார்வையை முன்வைக்க முன்பாக ஒரு நற்செய்தி. பாதிக் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒரு பகுதித் தரிசனத்தையே தரக்கூடியதாக இருக்குமென நினைக்கிறேன். முன்பு "கணவன் மனைவிக்கு இடையில்" எழுதியபோது ஆரம்பத்திலேயே எழுந்த பல எதிர்ப்புகளால் முகவுரை எழுதிக்கொண்டிருந்த போதே முடிவுரை எழுதவேண்டிய நிர்ப்பந்தமும் சுய தணிக்கையும். எனவே இம்முறை "காலங்காலமாய் வளரவிடாது நலிவித்த கலாச்சாரத்துக்கு" அமைவாக நுனிப்புல் மட்டும் மேய்கிறேன்.

"டேய் சொன்னு கேளு இனி இப்பிடி நடந்து எண்டா..... கொப்பனைப்பற்றி தெரியும்தானே. கப்பிலே கட்டி வைச்சு காதவடி பேத்திடுவன்" இந்த மாதிரி வளர்க்கப்பட்ட நாங்கள் எமது பிள்ளைகளையும் இதே பாணியில் வளர்க்க வெளிக்கிட நாம் பெற்ற செல்வங்கள் 9-1-1 ஐச் சுழற்றி... . இதுபலர் அனுபவப்பட்டுவிட்டார்கள். பலர் இனிமேல் அனுபவப்படலாம். பலர் என்ன செய்வது (எதிர் நடவடிக்கை?) எனத் தெரியாது திணறுகிருர்கள். சிலர் அந்தப்பிள்ளைகளை கொழும்புக்கோ இந்தியாவுக்கோ அனுப்பி அங்கே வைத்துப் படிப்பிக்கிருர்கள். சில பெற்றேர் தமது வளர்ந்த பிள்ளைகளுடன் கதைப்பதை நிறுத்திக் கூட விட்டார்களாம். ஆண்பிள்ளைகள் மட்டுமா அப்படி? பெண்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிகழ்வுகள் ஊர்ஜிதம் செய்த வண்ணம் உள்ளன. சக பெற்றேருடன் கதைத்து மனேவியலுடன் கலந்த ஒரு அனுசரணையைக்க ாண தமிழ்ப்பெற்றேர் எத்தனிக்க தயங்குவதற்கு காரணம் இருக்கிறது.

"என்ர பெடியன்தான் அப்படியாக்கும் என நினேச்சன். கனகம் கேட்டியே கதையை.... எங்கடை நடேசுவின்ரை பெட்டையளின்ரை விஷயத்தை கேட்டால்..."

அட்வைஸ் கேட்ட குற்றத்துக்காக நையாண்டி பண்ணும் "தமிழ்ப்பண்பாடு" பற்றி நாம் ஏற்கனவே அனுபவப்பட்டு இருப்பதாலும் நாமே அந்த "வேலைகளை" அடிக்கடி செய்து கொண்டிருப்பதாலும் கலந்தாலோசிக்க தயங்குவது புரிந்ததே. ஆனுல் இங்குள்ள எமது இளஞ்சந்ததியினரின் சரியான எதிர்காலத்தை உருவாக்க அவர்களின் பிரச்சனைகளை திறந்த மனதுடன் ஆராயவேண்டியது மிக அவசியம். சில விஷயங்களில் கலாச்சாரத்தில் FLEXIBILITY சேர்க்கப்படவேண்டும். அதற்காக திறந்துவிட வேண்டும் என நான் கூறவில்லை. திடமான சந்ததியை உருவாக்க அவர்களுக்கு கல்வியறிவைப் புகட்டுவது மட்டும் காணுமா? மனேரீதியான தெளிவுபெற அவர்களுக்கு "உரிய" போதனையோ வழிமுறையோ கொடுக்கவேண்டியது உண்டு. ஒரு பிரச்சனைDATING. BOY GIRL FRIEND சோடியாகத்திரியாவிடில் சம மாணவர்களிடம் இருந்து பிரிந்து தனியாக இருப்பது போன்ற உணர்வு மட்டுமன்றி அவர்களால் கேலிசெய்யவும் படக்கூடிய சந்தர்ப்பத்தை கொடுப்பதாக முடிகிறது. ஆண்கள் ஒரு மாதிரி இந்த விஷயத்தைச் சமாளித்து விடுவார்கள். ஆனுல் மாணவிகள் பாடுதான் கஷ்டம்.பல மாணவிகள் ஊரோடு ஒத்துப்போனுலும் சில கட்டுப்பாடாகவளர்க்கப்பட்ட தமிழ் மாணவிகள் இப்பிரச்சனையில் இருந்து வெளிவர வழி இல்லாது இருக்கிறது. "யாராவது" ஒரு சக மாணவனுடன் சோடியாகத் திரிய எல்லாப் பெண்களும் ரெடி இல்லே. "அம்மா எல்லாருக்கும் BOY FRIEND இருக்குது. என்னே

**26ம் பக்கம் பார்க்க..**

**கிறிஸ்தவ திருமணங்களில்**
**மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,**
**அலங்காரப் பொருட்கள்**
**குறைந்த விலையில்**
**வாடகைக்கு பெற்றுக் கொள்ள**
**மாஜி 796 2672**
**Net, Colorful Flower Bouquet, Flower Basket**

# மீன்கொடியும் புலிக்கொடியும்

**பாலசுந்தரன்**

"எனக்காக வராவிட்டாலும் பரவாயில்லை, வாங்கின காசுக்கு, அதுக்கு ஒரு நன்றிக்கடனுய் எண்டாலும் போகலாம் தானே"

"என்னது?.... வாங்கின சாசோ? பெரிசா தாத்தா பாட்டன் காலத்து முதுசத்தையும், முதுகு முறிய உழைச்ச உழைப்பையும் சேர்த்து அல்லே தந்தவை....... தூ... இதுவும் ஒரு காசே."

"மனுசருக்கு கொஞ்சமாவது நன்றி இருக்க வேணும் ஐம்பதினுயிரம் டொலரை மறந்து ஒரு பகட்டு வாழ்க்கை"

"அடியே அந்த ஐம்பதிலே ஐஞ்சாவது உழைச்சதெண்டு சொல்லுவியளே. அங்க வந்து விலாசம் எழுப்பினியள் ஐம்பதை முப்பத்தியாறுல் பெருக்கி காட்டினியள் இங்க வந்த பிறகுதானே தெரியுது அவ்வளவும் வெல்பெயர் காசு எண்டு எல்லாரும் ஒருவீட்டிலே இருக்கிறியள் ஆனுல் ஆளுக்காள் தனி வெல்பெயர் உந்த அகதிப்பணத்துக்கு ஒரு எஞ்சினியர் தேவைப்பட்டது. எல்லாம் மகாராசாக்கள் பரம்பரையல்லே."

"ஏன் உந்த உப்பில்லாத கதை. அண்ணர் வந்த நாலு வருசம் வந்தநாள் தொட்டு மாடாய் உழைக்கருர். தம்பி ஊர் உலகம் எல்லாம் உழைச்சு இங்கை உழைச்சுக்கொண்டு தான் இருக்கிருன்."

"உழைக்கினம் எண்டுருய், அப்ப என்னெண்டு வெல்பெயர் எடுக்கினம் இங்க வந்த பிறகுதானே உந்த சுத்துமாத்து எல்லாம்எனக்கு பிடிபட்டது. தம்பி இனி பிரென்ஸ்சுக்கு போக ஏலாது. அவ்வளவு சுத்து. உந்த சுத்துக்கு ஐம்பது என்ன ஐஞ்சு லச்சமும் கொடுக்கலாம். உனக்கு ஏன் என்னைப்போல ஒரு எஞ்சினியர், ஒரு சுத்துக்கார மாப்பிள்ளையை பாராதையன். பத்தோடை ஒன்று பதினென்ருய் சேர்ந்து கொள்ளை அடிக்கலாம்"

"ஒரு செத்த வீட்டுக்கு வரச் சொன்னதுக்குதான் இந்த கதையெல்லாம்."

"ஒரு செத்தவீடு என்ன பத்துக்கு நான் வருவன். ஆனுல் இந்த சாவுக்கு மட்டும்நான் வர இயலாது. செத்ததால துக்கமில்லை ஆனுல் இது எனக்கும் ஒரு சா வீடு மாதிரி"

"நான் அக்காவை கெஞ்சிக் கேட்டுட்டன். அவ அடியோட மறுக்கிரு. உங்கடை விருப்பப்படிதானே தெரிந்து எடுத்தனீங்களாம். இது எங்கடை விதிதானே. இல்லயெண்டால் இப்படி நடக்குமே"

"என்னது எங்கடை விதியே, இது உன்ரை தலைவிதி உன்ரை முழுவியளம் நான் ஒண்டுமட்டும் உறுதியாய் செல்லுறன், நான் சொன்னபடி எல்லாம் நடக்காவிட்டால் நான் உன்ரை கொம்மாவின்ரை சா வீட்டுக்கு வருவன் என்று கனவும் காணுதையுங்கோ. ஒரு எஞ்சினியர் மாப்பிள்ளைக்கு இண்டைக்கு இதைவிட எவ்வளவோ மேலாலை கொடுக்கினம் ஊரிலே சும்மா திரியிறதுகளுக்கே லச்சமாய் கொடுத்து அப்பப்ப சீவியத்திற்கும் ஆயிரமாய் அனுப்புகினம் நீங்கள்மட்டும் கள்ளக் காசிலை ஐம்பதை வீசி ஒரு எஞ்சினியரை மடக்கிவிட்டதாய் கனவு காணுதையுங்கோ."

"நாளைக்கு நீங்களோ நானே சீலை உடுத்துக் கொண்டு நாலுபேருக்கு முன்னுலை போறதில்லையே. இது உங்களுக்கு நல்லாய் இருக்குதே. வீட்டுக்குள்ள நடந்த சாவுக்கு வரமறுக்கிறியள்."

"உங்களுக்கு மானம் எண்டு ஒண்டும் இருக்குதோ தலைமாத்தி நாட்டுக்கு நாடு ஓடி திரியேக்கை மானம் கெடேல்லை, கள்ள காசிலை சீவிச்சுக்கொண்டு கள்ளமாய் வேலையும் செய்யேக்கை மானம் போகேல்லை. இப்பமட்டும் போட்டுது. இதுதான் இங்கத்தையில் சுத்து தங்களுக்கு ஏற்ப மானமும் அவமானமும். களவெடுத்தால் தியாகம் கொள்ளையடிச்சால் தீரம், மொத்தமாய் சுத்திஞல் மாவீரம் தூ. ....."

"அசல் போக்கிரிதனமாய் பேசாதையுங்கோ. அவனவை கேட்டால் கொலை விழும்"

"என்னடி கொலையே... என்ன நான் இங்க தனிய எண்டு குடும்பமாய் பயமுறுத்தியளோ. தம்பி முன்ன இயக்கம் எண்டால் இப்பவும் மிடுக்கோ. இனியொருக்கா மட்டும் அப்படி பேசாதை. சுருக்கமா சொல்லியிட்டன் நீமட்டும் போ நான் வர இயலாது"

"சரி ....... நான் எப்பிடி உழைச்செண்டாலும் மாசம் ஐநூறு அறுநூறு தாரன். வெளிக்கிடுங்கோ"

"எனக்கெண்டால் ஒண்டும் விளங்கேல்லை. நீ உழைச்சு எனக்கு தரப்போருய்? இப்பிடியொண்டு நடந்திரா விட்டால் மட்டும் நீ உழைச்சு அவங்களிட்டை குடுத்திடுவாய். இதெல்லாம்எங்கை போய் படிச்சனியோ. பெரிய கனடாகாரர். உங்களுக்கும் கனடியர் ஆனதிலை ஒரு பெருமை தான்."

"நீங்கள் நினைக்கலாம் ஏதோ இராசதந்திரம் செய்யிறதாய். இது பெரிய பிரச்சினையில முடியும். இதுக்கு மேலையும் இந்த உறவு தேவையே எண்ட நிலை வந்தால் நீங்கள் தான் நடுக்கடலிலை. குழந்தைப்பொடியாட்டம் எசகுபிசகாய் ஒண்டும் செய்யாமல் செத்தவீட்டுக்கு வாங்கோ. நான் இதுவரை ஒண்டும் அவவைவைக்கு செல்லேல்லை. ஏதோ துக்கம் தலையிடி யெண்டு சொல்லி சமாளிச்சுட்டன். பேசாமல் அங்க வந்து மூலையிலை படுத்திருந்தால் போதும்."

"ஓமோம்... இப்ப அங்க

**26ம் பக்கம் பார்க்க..**

# தீயினில் தூசு



## செ.யோகநாதன்

மல்லிகா தனியாக உட்கார்ந்திருந்தாள். மழை சோவென்று பெய்து கொண்டிருந்தது. தொலேவில் கிழக்குப் பக்கமாக மலையை அச்சுறுத்திக் கொண்டு இடி இடித்து முழங்கிற்று. குடிசையைத் தூக்கி எறிகிருற்போல வீசிற்று சீற்றங் கொண்ட முரட்டுக் காற்று. அச்சம் கொண்ட குருவியொன்றின் தீனமான வீரிடல் அந்தக் குழம்பிய ஒலிகளினூடே நெஞ்சை அறைந்தது. அறிவழகன் தூக்கத்தில் முனகிக் கொண்டே 'ம்மா' என்ருன். ஐந்து வயதான ஒரே குழந்தை.

அடுப்பங்கரையோரமாக மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்த சின்ன லாந்தர் விளக்கை சட்டென்று பாய்ந்த காற்றுக் கற்றை ஒன்று அப்படியே விழுங்கி அணைத்தது.

மல்லிகா அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

வாழ்க்கையை நினைத்தபோது அவளுக்கு கசப்பாக இருந்தது. பெரிதாக எந்தக் கனவுகளும் அவளுக்கு இருக்கவில்லை. சந்தோசமாக இருக்க வேண்டும். யாருக்கும் சுமையில்லாமல் பட்டினியில்லாமல் மதிப்பு மரியாதையோடு வாழ்க்கை அமைய வேண்டும். இவ்வளவு தான்.

நிச்சயதார்த்தத்திற்கு வந்த போதுதான் மல்லிகா அவனை ஒரக்கண்ணுல் பார்த்தாள். கருமையாக, திடகாத்திர மானவனுக, பளிச்சென்ற சிரிப்புடன் இருந்த அவனது தோற்றம் பார்த்த கணத்தில் அவளது மனதில் பதிந்து விட்டது.

"பாரம்மா, உங்க அப்பா நோயாளி அம்மா சம்பாத்தியத்தில தான் குடும்பமே ஓடுது. .. அண்ணன் தறுதலே இதை விட்டே அப்புறம் உன்பாடு ரொம்பக் கஷ்டமாயிரும்' கன்னியம்மாவின் வார்த்தைகளில் எதுவுமே பொய்யில்லே. அனுபவப்பட்ட புத்திமதி. மல்லிகா, செந்திலேக் கலியாணம் செய்வதற்குச் சம்மதித்தாள்.

கலியாணமாகி இரண்டு வாரங்களிலேயே செந்திலின் சுயரூபம் ஒவ்வொன்ருக வெளிப்பட்டது.

அவன் எந்த வேலேயிலும் ஒருவாரத்துக்கு மேல் நிலேத்து நிற்பதில்லே. அவனது சுதந்திரத்தை யாரிடமும் அடமானம் வைக்கமாட்டானும்.

மல்லிகா தனியே இருந்து அழுதாள். பிறகு யோசனே செய்தாள். மீண்டும் அழுதாள். செந்தில் எதையும் கவனிக்க மாட்டான். கன்னியம்மாவிடம் மல்லிகா எல்லாவற்றையும் சொன்ஞள். கன்னியம்மா எல்லாவற்றையும் நிதானமாகக் கேட்குக் கொண்டிருந்தாள். பரிவோடு அவனேப்பார்த்தாள்.

"நீ என்கூட வேலேக்கு வந்திடு...."

ஆச்சரியமாக அவளேப் பார்த்தாள் மல்லிகா.

"வேலேக்கா? என்ன வேலே? எனக்கு என்ன தெரியும்?" பரபரத்தாள் மல்லிகா.

"நமக்கு கைகால் இருக்குதல்ல.. அப்புறமென்ன? "

கன்னியம்மா பெருமூச்சோடு, "ஏழைபாழைங்க வாழ்வு இப்படித்தான் ஆயிடுது நீ எங்கூட 'எக்ஸ்போர்ட் கார் மெண்ட்சுக்கு வந்திடு....' என்ருள்.

அப்பாவித்தனமாக அவளேப பார்த்தாள் மல்லிகா.

"அதெல்லாம் ஒண்ணும் பெரிஸ்ஸா வித்தையில்லே. கத்துக்கலாம். 'எல்பராய்' சேர்த்துக்கிடுவாங்க..."

மல்லிகா இதைச் சொன்னபோது செந்தில் ஒன்றுமே பேசவில்லே, மறுநாள் அவள் வேலேக்குப் புறப்பட்டபோது அழுத்தமான குரலிலே அவன் சொன்ஞன்.

"தோ பாரம்மா... நீ வேலேக்குப் போறதைப் பத்தி ஒண்ணுமில்லே. ஆஞ கலியாணமானவ ஆரோடும்

கதை பேச்சு இருந்திச்சு, கொன்னுடுவேன்..."
"என்ன சொல்றீங்க?"
அவளின் குரல் கலங்கிற்று.
"நமக்குத்தெரியாதாபொட்டச்சிங்க குணம்.. அதெல்லாம் எதுக்கு? சொல்றபடி நட. ஜெண்ட்ஸ்ஸோட எதுக்கும் பேச்சு வேணும்... சரி, புறப்படு..."
ஐந்து வருஷங்கள் இதே பேச்சுக்களோடேயே நகர்ந்து போய்விட்டன. இதை வைத்தே அடிக்கடி சண்டைகள் கசப்பான வார்த்தைகள். மிருகத்தனமான வதைகள் வழக்கமே பழக்கமாகி அவளின் மனம் மரத்துப்போய் விட்டது.
செந்தில் இப்போது ஒரு 'மெக்கானிக்கல் ஷாப்பில் சேர்ந்து வேலை செய்கிறான். அங்கே சேர்ந்ததின் பிறகு கையில் கொஞ்சம் காசும், குடிப்பழக்கமும் அவனுக்கு வந்தன.
இன்று சாயந்திரம் வேலையில் இருந்து அவள் திரும்பியபோது செந்தில் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தான்.
மல்லிகாவைக் கண்டதும் அவன் கத்தினான்.
"ஏண்டி ரொம்ப சிங்காரிச்சிட்டு எங்கேடி போய் வர்ரே..."
மல்லிகா அவனை வெறுமையாகப் பார்த்தாள்.
"என்னடி பார்க்கிறே?"
"என்ன பேச்சுப் பேசுறீங்க...சீ"
அவன் காலை எட்டி உதைத்தான். காலடியிலிருந்த தட்டு எகிறி சுழன்று சத்தத்துடன் சுவரில் மோதிற்று.
"ஏண்டி.. நாலுகாசு கையில கிடைச்சுதன்னு நீ பெரிய ஆளுன்னு நினைக்கிறே... உன்கிட்ட சாப்பிட எனக்கு அசிங்கமாயிருக்கு.. நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேண்டி.. பாரு... இந்த டின்னைப்பாரு. இதில என்ன இருக்கு? பெட்ரல். இதை ஊத்தி.."
மல்லிகா விசும்பினாள்.
"உத்துங்க. எம்மேல ஊத்துங்க எத்தனை வாட்டி சொல்லிட்டீங்க... ஊத்தி என்னைக் கொழுத்திடுங்க..."
அவன் 'ஓஹ்ஹொஹ்ஹோ..' என்று சத்தமாகச் சிரித்தான். வெறிபிடித்தாற்போலச்சிரித்தான். பிறகு மௌனமாக சில கணங்கள் அவளைப் பார்த்தான்.
"பாரம்மா உனக்கு அதெல்லாம் பண்ண மாட்டேன். நானே பத்திக்கப் போறேன். அப்படிப்பண்ணினா வாழ்க்கை பூரா நீ இந்தப் பழியை அனுபவிச்சாகணும்..."
மல்லிகா திகைத்து திக்கித்துப் போனாள். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்த 'பெற்றோல் டின்'னை எடுத்தாள்.
மறுகணமே அவளின் முகம் ஏமாற்றத்தால சுருங்கிற்று.
வெறுமையாயிருந்த 'பெற்றோல் டின்'னை 'டங்'கென நிலத்தில் வைத்தாள்.
"பொய் சொல்றேன்னு நினைக்கிறே. பாரு எங்க தாத்தா தன்னோட தலைவர் கைதானப்போ தீக்குளிச்சாரு. என்னோட தாய் மாமன் குமரேசு தன்னோட தலைவர் கைதானபோது தீக்குளிச்சாரு.. தியாக பரம்பரைடி நாங்க.. பாரு, நான் தீக்குளிக்கிறேனா இல்லையா பாரு..."
அவன் 'பெற்றோல் டின்'னைக் கையில் எடுத்துக் கொண்டான். விறு விறு வென்று வெளியேபோனான்.
மல்லிகா அசையாமலே நின்றாள். எத்தனை தடவைகள் இப்படி. ஒவ்வொருமுறையும் இப்படி நடக்கிறபோது பதட்டமான மனதோடு இப்படித்தான் அவள் உட்கார்ந்திருப்பாள். போதையில தள்ளாடியபடி நடுச்சாமத்தில் அவன் வீடு திரும்புவான் எதையெதையோ புலம்புவான். அழுவான். வாந்தியெடுப்பான். அவன் தலையில் அடித்து சத்தியம் செய்வான். அவளை இறுக அணைப்பான். அவளுக்கு எரிச்சலாயிருக்கும். வயிற்றைக் குமட்டும் ஒன்றும் பேசாமல் அவனைப் பார்த்தபடி அழுகையின்றி உட்கார்ந்திருப்பாள். அழுவதற்கே வெட்கப்படுவாள் அவள்.
வெளியே மழை இன்னும் ஓயவில்லை.
அறிவழகன் நித்திரைக் கலக்கத்தில் 'ம்மா' என்று முனகினான். தொலைவில் எங்கோ இடி இடித்தது. அதிர்ந்தது.
மெக்கானிக்கல ஷாப் உரிமையாளர் வில்லவன் மிகுந்த கவலையோடிருந்தார். அவரது கட்சித்தலைவர், முறைகேடான விதத்தில் தேர்தலில் வெற்றி பெற்றதாக குற்றம் சாட்டி எதிர்க்கட்சியினர் வைத்த வழக்கின் தீர்ப்பு சற்று முன்னர்தான் வெளியாகிற்று. அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிருபணமாகி தீர்ப்பு வெளியாகிவிட்டது. அவர் தமது எம்.எல்.ஏ. பதவியை இழந்தது மட்டுமல்ல, சிறைக்கும் போக வேண்டிய நிலைமை. நீதிமன்றத்தில் தலைவர், வில்லவனின் கைகளைப் பற்றிக் கொண்டார்.
"வில்லவன், நான் அரசியலுக்கு வந்து ஐம்பது வருஷம்.. என்னை இந்த மக்களுக்காகவே அர்ப்பணம் செய்திருக்கிறேன். எதிரிகள் விரித்த வலையில் நீதித்துறை அகப்பட்டு திண்டாடுது. எனக்கு ஒண்ணுமில்லை. அப்பீல் கூட பண்ண வேணும். ஜெயிலுக்கே போயிடறேன். ஆனால் ஒன்று இந்த மக்கள் நன்றி மறந்தவர்கள் என்ற அவச் சொல்லுக்கு ஆளாகக் கூடாதென்பது என் பேராசை. தலைவருக்கு அவமானம் ஏற்பட்டால் தொண்டன் சும்மாயிருக்கமாட்டான். தமிழ் நாடே கொந்தளிக்கணும். கொந்தளிக்கும். கொந்தளிக்க வைக்கணும். தலைவருக்காக தன்னோட உயிரைவிடக் கூட தொண்டன் தயாராயிருக்கணும், தயாராயிருக்கணும்" தலைவரின் கண்கள் கலங்கின.,
சுற்றி நின்ற தொண்டர்கள் தமது கண்களைத் துடைத்தவாறு மௌனமாக நின்றனர்.
வெளியே கேட்ட சத்தத்தில் வில்லவன் சிந்தனை கலைந்து எழுந்தார்.
தள்ளாடியபடி கையில் 'டின்'னோடு நிற்கும் செந்தில்... வில்லவன் பரபரத்தார்.
"செந்தில் உனக்கு என்ன ஆச்சு?"
**15ம் பக்கம் பார்க்க..**

# மாத்தயாவும் ஒப்புதல் வாக்குமூலமும்;

## சரித்திரம் மீண்டும் சுழல்கிறது

**எழிலோன்**

***ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் தண்டனை குறைக்கப்படும் என்ற பொய்யான உறுதி மொழிகளை நம்பியும் குடும்பத்தினரைப் பாதுகாக்கவும் சதி முயற்சிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் இவ்வாறான ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பது வழமையான நிகழ்வு. தொலைக்காட்சியில் கைகள் முறிக்கப்பட்ட நிலையில் பேட்டி கொடுத்த விஜேவீர சுட்டுக் கொல்லப்பட்டு உடனடியாக எரிக்கப்பட்டது இவ்வாறு தான். இது வீடியோவில் எடுப்பது என்பது மட்டும் அதற்கு நம்பகத்தன்மையை அளித்து விடாது. குடும்பத்தினரைப் பார்க்க அனுமதித்திருப்பது கூட உளவியல் ரீதியான ஒரு மிரட்டலே. குழந்தைகளைப் பார்க்கும் போது அவர்களைப் பாதுகாக்க வேண்டி, இயக்கத்தின் மிரட்டல்களுக்கு பணிய வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவர்களுக்கு பங்கம் விளைவிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் மாத்தயா ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கக் கூடும்.***

மாத்தயா பற்றிய விடயங்கள் இப்போது புலிகளால் உத்தியோக பூர்வமாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. புலிகளின் பத்திரிகைகள், சஞ்சிகைகளான களத்தில், உலகத்தமிழர், விடுதலைப் புலிகள் என்பன மாத்தயா பற்றிய விசாரணைகள் முடியுமுன்பே அவரது குற்றங்கள், மரண தண்டனை பற்றி எழுதியிருக்கின்றன. பதவி நீக்கப்பட்டதும் மாத்தயா ஒதுங்கிக் கொண்டார் என்றும் காயமுற்ற போராளிகளின் புனர்வாழ்வுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட போது அதை கவனிக்காமல் இருந்தார் என்றும் இந்திய சதிக்கு ஆளானர் என்றும் குறிப்பிட்டதுடன் இவ்வாறான தேசத்துரோக தண்டனைக்கு மரண தண்டனை தான் என்று முடிவும் கூறியுள்ளன. முன்பு புலிகளுக்குள் உள்முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன, மாத்தயா ஒதுக்கப்பட்டார் என்றெல்லாம் செய்தி வந்த போது அவற்றை மறுத்த புலிகளின் பத்திரிகைகள் தற்போது மாத்தயாவுக்கு மரண தண்டனை தான் என்று தீர்ப்பு வழங்கியுள்ளன.

விசாரணை நடக்கின்ற போதே இதற்கு மரண தண்டனை தான் தீர்ப்பு என்று எழுத வேண்டிய தேவை என்ன? Not guilty until proven என்று நிருபிக்கப்படும் வரையில் சுற்றவாளி என்ற நிலையை புலிகளின் ஆதரவுப் பத்திரிகைகள் இன்னமும் கைக்கொள்ளவில்லை. தாங்களே விசாரணையை முடித்துக் கொண்டு மாத்தயாவை character assassination செய்கின்றன இப்பத்திரிகைகள். மாத்தயா நிரபராதி என்பதோ அப்பாவி என்பதோ அல்ல எங்கள் வாதம். குற்றவாளியாக இருந்தால் கூட அதற்கான விசாரணைகள் பொதுநடைமுறைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

புலிகளின் ஆதரவுப் பத்திரிகைகளின் செய்திப்படி மக்கள் முன்னணி கலைக்கப்பட்டு அதன் தலைவர் பதவியில் இல்லாது போனது மாத்தயாவுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது என்றும் மாத்தயாவுக்கு 'முக்கிய பல பொறுப்புகள், கடமைகள்' ஒப்படைக்கப்பட்டும் அக்கறை காட்டாமல் தான் போன போக்கில் நடந்து கொண்டதும், அது குறித்து தலைவர் உரையாட அழைத்தும் அவற்றை அலட்சியம் செய்ததும் அவரின் வெறுப்பை வெளிப்படுத்துவதாக அமைந்ததாம். இந்த நுண்ணிய மனவெறுப்பை வளர்த்து தன் சதிக்கு பயன்படுத்த இந்திய உளவுத்துறை எடுத்த முன்னெடுப்பில் மாத்தயா பிரதான பாத்திரத்தை வகித்தார் என்ற குற்றச்சாட்டில் விசாரணைகள் நடைபெறுவதாகவும் உலகத தமிழரில் வளவன் என்பவர் எழுதியிருக்கிறார். புலிகளின் சார்புப் பத்திரிகைகளின்படி முதலில் மாத்தயா ஒதுக்கப்பட்ட பின்பே றோவின் சதி இடம் பெற்றது. இந்த விசாரணைகள் யாவும் மாத்தயா ஒதுக்கப்பட்டதற்கான காரணத்தை முதலில் ஆராயவில்லை.

கட்சிக் கலைப்பை கட்சியின் தலைவரின் ஒப்புதல் இன்றி இயக்கத்தலைவர் கலைத்து தலைவரை ஒதுக்குகிறார் என்றால், அதற்கான காரணம் என்ன? இந்த ஒதுக்குதல் தான் றோவின் தலையீட்டுக்கு வழி வகுத்ததே தவிர, றோவின் தலையீடு காரணமாக மாத்தயா ஒதுக்கப்படவில்லை. தற்போதைய புலிகளின் பிரசாரங்கள் எல்லாம் றோ மாத்தயா மூலம் சதி செய்கிறது என்பதை தலைவர் தீர்க்கதரிசனமாக உணர்ந்தே மாத்தயாவை

***கட்சிக் கலைப்பை கட்சியின் தலைவரின் ஒப்புதல் இன்றி இயக்கத்தலைவர் கலைத்து தலைவரை ஒதுக்குகிறார் என்றால், அதற்கான காரணம் என்ன? இந்த ஒதுக்குதல் தான் றோவின் தலையீட்டுக்கு வழி வகுத்ததே தவிர, றோவின் தலையீடு காரணமாக மாத்தயா ஒதுக்கப்படவில்லை. தற்போதைய புலிகளின் பிரசாரங்கள் எல்லாம் றோ மாத்தயா மூலம் சதி செய்கிறது என்பதை தலைவர் தீர்க்கதரிசனமாக உணர்ந்தே மாத்தயாவை ஒதுக்கினர் என்ற பிரமையை ஏற்படுத்தத் தான் முயல்கின்றன.***

ABCDEFGHIJK/L_MN01

**பத்திரிகையாளர்கள், கவிஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட போது அதைப் பற்றி புலிகளின் ஆதரவாளர்கள் எதுவுமே பேசவில்லை. இன்று மாத்தயா விடயத்தை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. தலைமை செய்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் இவர்கள் இன்று அதில் சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அதை நிவர்த்திக்கத் தான் புலிகளும் வீடியோவில் பதிவு செய்யும் நிலை வந்திருக்கிறது. முன்பு எந்த தண்டனை, விசாரணைகளுக்கு புலிகள் வீடியோவில் பதிவு செய்து உலகம் பூராவும் அனுப்ப முயன்றார்கள்? இது கூட புலிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் இடையிலான விரிசலின் முதல் கட்டம் தான். புலிகளின் நடவடிக்கைகளை அவர்களின் ஆதரவாளர்களே ஏற்றுக் கொள்ள முடியாமல் குமுற ஆரம்பித்து விட்டார்கள்.**

ஒதுக்கினர் என்ற பிரமையை ஏற்படுத்தத் தான் முயல்கின்றன. எனவே, மாத்தயா திட்டமிட்டு ஒதுக்கப்பட காரணம் என்ன? என்பது ஆராயப்பட வேண்டும். பிரதித்தலைவர், இராணுவத் தளபதி, அரசியல் கட்சித் தலைவர் என்ற முக்கியமான பதவிகளை வகித்தவர் என்ன காரணங்களின் அடிப்படைகளில் ஒதுக்கப்பட்டார் என்பதை புலிகள் பகிரங்கப்படுத்த முடியுமா?

கட்சியைக் கலைப்பது தொடர்பாக தலைவர் எடுத்த ஒரு தலைப்பட்சமான முடிவுக்கான காரணங்கள் என்ன? மீண்டும் யாழ்ப்பாணம் பிடிக்கப்பட்டால் இந்தக் கட்சிக்காரர்கள் 'கட்சி தாவ' கூடும் என்ற தலைவரின் தீர்க்கதரிசனம் என்று சிலர் விதந்துரைக்கின்றனர். புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளவென அமைக்கப்பட்ட கட்சி அடிப்படையிலேயே தேவையற்றது. ஜனநாயகம் பல கட்சி ஆட்சி முறையை மையமாகக் கொண்டது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் புலிகள், மற்ற அமைப்புகள் வடக்கில் இயங்குவதைத் தடை செய்தனர். இந்த நிலையில் புலிகள் பிரேமதாசாவுடன் பேசும் போது உருவாக்கிய கட்சி இது. ஒரு பேச்சுக்கு தேர்தல் வருகின்றது என்று வைத்துக் கொண்டாலும், மற்றக் கட்சிகள் போட்டியிடுவதை புலிகள் அனுமதிப்பார்களா? ஒரு கட்சி ஆட்சி முறை என்ற நிலையில் இயக்கம் வேறு, கட்சி வேறு என்ற வேறுபாட்டை கண்டுபிடிக்க முடியாத நிலை புலிகளைப் பொறுத்தவரையில்.

திடீரென்று புலிகளின் விசா வழங்கல் மற்றும் செயற்பாடுகள் கட்சியிலிருந்து பறிக்கப்பட்டு, இயக்கப்பிரிவுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் முக்கியமானது, கட்சியிடம் இருந்த போது புல வெளியார்களும் இச்செயற்பாட்டில் பங்கு கொண்டிருந்தனர். பின்னர் இயக்கம் பொறுப்பேற்றுக் கொண்டதும் இயக்கப் போராளிகளிடமே முழுமையான கட்டுப்பாடும் சென்றது. இது நிர்வாகத்தில் பொதுமக்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச பங்களிப்பையும் இல்லா தொழித்தது. அத்துடன் கட்சியும் கலைக்கப்பட்டது. இவை மாத்தயாவின் ஆதிக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் என்றே கருத வேண்டியுள்ளது.

இரு மனிதர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் இருவராலும் பேசித் தீர்க்கப்படா விட்டால், இடையில் உள்ளவர்கள் அதை மேலும் விரிவடையச் செய்வது சுலபமானது. ஒருவர் பற்றி மற்றவரிடம் காதில் ஊதுவது மூலம் இந்த முரண்பாடுகள் மேலும் வளர்க்கப்படலாம். இது போன்ற நிலை தான் பிரபாகரன் மாத்தயாவிற்கு இடையில் பொட்டம்மான் போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்டது என்று கருத முடியும். மாத்தயாவின் விரக்தியை தலைவருக்கு எதிரான சதித்திட்டமிடலாக பெரிது படுத்துவது சுலபம். தலைவரும் மாத்தயாவுடன் நேரடியாகப் பேசாத நிலையில் இவ்வாறான 'கிசுகிசுக்களை' நம்பக் கூடிய சாத்தியங்கள் உண்டு.

இந்த மோதல் தான் மாத்தயா, பொட்டம்மான் இருவருக்கும் இடையில் நடைபெற்ற மோதல்கள். கோப்பாயில் ஜீப்பிற்கு குண்டுவீச்சு, யாழ். வைத்தியசாலையில் குண்டுவெடிப்பு என்பன இரண்டு பேருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் பின்னணியே. எனவே மாத்தயா–பிரபாகரன் பனிப்போரை தனக்கு சாதகமாக மாற்ற பொட்டம்மான் முயற்சித்திருக்கக் கூடும். இந்த விடயத்தில் தலைவரின் நடவடிக்கைகள் ஒரு தவறான வழிநடத்தலின் பின்னணியிலானவை என்றே கருத வேண்டும்.

மாத்தயா ஒதுக்கப்பட்ட பின்னர் இதைச் சாதகமாக வைத்து இந்திய உளவுப்படை அவரது ஆதரவாளர்கள் மூலமாக மாத்தயாவை அணுகியிருக்கவும் கூடும். ஆனால் பிரச்சனை உண்டு, புலிகளின் தலைமையை அழித்த பின்னர் மாத்தயா தலைவராவதை புலிகளின் ஆதரவாளர்கள் ஏற்றிருப்பார்களா? புலிகள் இயக்கத்தில் போராட்டத்திற்கு விசுவாசமாக இருப்பதை விட

**புலிகளின் தலைமையை அழித்த பின்னர் மாத்தயா தலைவராவதை புலிகளின் ஆதரவாளர்கள் ஏற்றிருப்பார்களா? புலிகள் இயக்கத்தில் போராட்டத்திற்கு விசுவாசமாக இருப்பதை விட தலைவருக்கு விசுவாசமானவர்கள் அதிகம். தான் ஒதுக்கப்பட்ட நிலையில், பலம் அற்ற நிலையில் இவ்வாறான ஒரு சதியினால் மாத்தயா எதையும் சாதித்திருக்க முடியாது.**

தலைவருக்கு விசுவாசமானவர்கள் அதிகம். தான் ஒதுக்கப்பட்ட நிலையில், பலம் அற்ற நிலையில் இவ்வாறான ஒரு சதியினால் மாத்தயா எதையும் சாதித்திருக்க முடியாது. மாத்தயா ஒதுக்கப்பட முன்னைய நிலையில் என்றால் வெற்றியடைந்திருக்கக் கூடும். மாத்தயா ஒதுக்கப்பட்டது இயக்க கீழ் மட்டங்களுக்கு இடையில் கூட தெரிந்த நிலையில் திடீரென்று மாத்தயா அனைவரையும் கொன்று விட்டு நானே தலைவர் என்று அறிவிக்க முடியுமா?

ஒதுக்கப்பட்ட நிலையில் மாத்தயா கிட்டத்தட்ட வீட்டுக்காவல் என்ற நிலையில் கண்காணிப்புக்குள் தான் இருந்தார். இந்த கண்காணிப்பையும் மீறி அவரால் சதி முயற்சிக்கு முடிந்திருக்குமா? விரக்தியினால் தான் எந்த பதில் தாக்குதலிலும் ஈடுபட வேண்டாம் என்று மெய்காப்பாளர்களிடம் கேட்டிருக்கிறார். உண்மையான சதி முயற்சிக்கு தயாரானவர் என்றால் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் பதில் தாக்குதலுக்கு கூட தயாராகியிருக்கக் கூடும்.

இப்போது மாத்தயா தவறை ஒத்துக் கொண்டு சாட்சியமளிப்பதாகவும் அது வீடியோவில் படமாக்கப் படுவதாகவும் அவரது குடும்பத்தினரைப் பார்வையிட அனுமதித்திருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. ஒப்புதல் வாக்குமூலம் என்பது இந்த சதி வழக்குகளில் வழமையான விடயம். உதாரணத்திற்கு மாத்தயா நடத்திய மரண தண்டனையையே எடுத்துக் கொள்வோம். தாண்டிக்குளத்தில் சிலர் மரண தண்டனை விதிக்கப் பட்ட போது தாங்கள் போராட்டத்திற்கு துரோகம் செய்து விட்டதாகக் கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க இருவர் மட்டும் தாங்கள் சித்திரவதையினால் தான் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக சத்தமிட்டபோது அவர்கள் அனைவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறானது தான் ஒப்புதல் வாக்குமூலம். தான் செய்த அதே வழியில் மாத்தயா தண்டிக்கப்படுகிறார். ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் தண்டனை குறைக்கப்படும் என்ற பொய்யான உறுதி மொழிகளை நம்பியும் குடும்பத்தினரைப் பாதுகாக்கவும் சதி முயற்சிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் இவ்வாறான ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பது வழமையான நிகழ்வு. தொலைக்காட்சியில் கைகள் முறிக்கப்பட்ட நிலையில் பேட்டி கொடுத்த விஜேவீர சுட்டுக் கொல்லப்பட்டு உடனடியாக எரிக்கப்பட்டது இவ்வாறு தான். இது வீடியோவில் எடுப்பது என்பது மட்டும் அதற்கு நம்பகத்தன்மையை அளித்து விடாது. குடும்பத்தினரைப் பார்க்க அனுமதித்திருப்பது கூட உளவியல் ரீதியான மிரட்டலே. குழந்தைகளைப் பார்க்கும்போது அவர்களைப் பாதுகாக்க வேண்டி, இயக்கத்தின் மிரட்டல்களுக்கு பணிய வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவர்களுக்கு பங்கம் விளைவிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனையுடன் மாத்தயா ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கக் கூடும்.

ஆனால் ஒரு விடயம் இங்கு அவதானிக்கப்பட வேண்டும். மற்ற இயக்கத்தலைவர்கள் கொல்லப்பட்ட போது விடுதலையின் பேரால் அதை நியாயப்படுத்தினார்கள். மக்களும் ஏற்றுக் கொண்டார்கள். பத்திரிகையாளர்கள், கவிஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட போது அதைப் பற்றி புலிகளின் ஆதரவாளர்கள் எதுவுமே பேசவில்லை. இன்று மாத்தயா விடயத்தை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. தலைமை செய்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் இவர்கள் இன்று அதில் சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அதை நிவர்த்திக்கத் தான் புலிகளும் வீடியோவில் பதிவு செய்யும் நிலை வந்திருக்கிறது. முன்பு எந்த தண்டனை, விசாரணைகளுக்கு புலிகள் வீடியோவில் பதிவு செய்து உலகம் பூராவும் அனுப்ப முயன்றார்கள்? இது கூட புலிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் இடையிலான விரிசலின் முதல் கட்டம் தான். புலிகளின் நடவடிக்கைகளை அவர்களின் ஆதரவாளர்களே ஏற்றுக் கொள்ள முடியாமல் குமுற ஆரம்பித்து விட்டார்கள்.

தங்களின் நடவடிக்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற சந்தேகம் தான் புலிகளை இவ்வளவு கரிசனை எடுத்து அதை நியாயப்படுத்த வைத்திருக்கிறது. இதில் புலிகள் வெற்றி கொள்வார்களா என்பது சந்தேகமே. மாத்தயாவும் தலைவரும் ஒரே ஊரவர்கள் என்பதால் புலிகளுக்கு இதில் இன்னொரு சிக்கலும் உண்டு. ஊர்காரர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்ளப் போகிறோமே என்ற பயமும் கூட.

இதில் புலிகள் தப்பித்துக் கொள்ள இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று மாத்தயாவை பகிரங்கமான, நியாயமான விசாரணைக்குட்படுத்துவது. இது புலிகளைப் பொறுத்தவரை சாத்தியமற்றது. பகிரங்க விசாரணை நடுநிலை ஜூரர்கள் முன்னிலையில் நடக்குமாயின் புலிகளின் பல உள்விவகாரங்கள் வெளியில் வரலாம். இது புலிகளுக்கே ஆபத்தாக முடியும். (உதாரணத்திற்கு ராஜீவ் கொலை) மாத்தயா மீது இந்த குற்றச்சாட்டு சோடிக்கப்படுவதும் வெளியில் வர முடியும்.

மற்றது மாத்தயாவுக்கு மன்னிப்பளித்து நாட்டை விட்டு வெளியேற்றுவது. இதன் மூலம் தலைவர் தனது பெருந்தன்மையைக் காட்டுவதுடன் மாத்தயாவின் ஆபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். மாத்தயாவை எந்த நாடு தஞ்சமளித்து காக்கும் என்பது இன்னொரு பிரச்சனை தான்! நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் மாத்தயா தனக்கு எந்த ஆதரவுப் பின்னணியும் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது.

இல்லை, துரோகத்திற்கு மரண தண்டனை தான் முடிவு என்றால் அது புலிகளின் முடிவுக்கான முதலாவது ஆணியாகத் தான் இருக்கும்.

**இலக்ய சித்திராபிஷேகம்**

# திருவின் தரிசனமும் திருமதியின் தலையீடும்

**ஜெயந்தீஸன்**

**(மூன்று வாரங்களுக்கான ஓர் இலக்ய சித்திரம் இது)**

நம்ம தமிழன்கள் புத்தகம் பேப்பர் அடிக்கிற வேகத்தைப் பார்த்ததும் எனக்கும் கூட ஒரு புத்தகம் அடிக்க வேணுமெண்ட ஆசை...... வந்துவிட்டது எண்டு நினைச்சிடாதையுங்கோ. அவங்கள் என்னத்தையெண்டாலும் அடிச்சுத் தள்ளட்டும்... நாம நம்ம சோலியளைக் கவனிச்சுக் கொண்டிருக்க வேணுமெண்டதுதான் என்ரை எண்ணம். உந்தப் பேப்பர் புத்தகம் அடிக்கிறவங்களுக்கெல்லாம் லெவலெண்ட லெவல், ஏதோ இலக்கியம் வளர்க்கிருங்களாம் இலக்கியம், கூட்டம் அது இது எண்டு போட்டு தங்களைப் பற்றி நேரம் காலம் தெரியாமைக் கதைச்சிட்டு இலக்கியத்தை வளர்த்திட்டம் எண்டு கதை விடுருங்கள். எனக்கெண்டா உவங்கடை கண்ணிலை முழிக்கவே விருப்பமுமும் இல்லை, பயமும் வேறை, தட்டித்தவறி ஆப்பிட்டாப் போதும் அறு அறு எண்டு அறுப்பாங்கள். அவை எழுதிக் கிழிச்சதுகளுக்கு விமர்சனப் பூழலும் கேப்பினம், எல்லாருக்கும் தாங்கள் என்னவோ எமிலி ஸோலா, பால்ஸாக் எண்ட நினைப்பு. நானும் முசுப்பாத்திக்கு ரெண்டு மூண்டு கவிதை எழுதினன். உடனை என்னையும் பிடிச்சு இலக்கியவாதியாக்கிப் போட்டாங்கள். போன கிழமை ஒரு கோஷ்டி தாங்கள் கவியரங்கம் நடத்திறதாகவும், அதுக்கு என்னைத் தலைவராகப் போட்டிருக்கிறதாகவும் சொல்லி நோட்டீஸ் ஒண்டை நீட்ட நான் ஏங்கிப் போனன். அறுவாங்கள், என்னைக் கேட்காமலேயே என்ரை பெயரை கொட்டை எழுத்திலை பிறின்ட் பண்ணியிருக்கிருங்கள். என்ன இருந்தாலும் உது எளிய வேலையெல்லலோ. கவியரங்கம் நடக்கிற அண்டைக்கு நைஸா ஜேர்மனிக்குப் போய் ஒழிச்சிருந்திட்டு வரலாம் எனத் தீர்மானிச்சிட்டு றூமுக்குப் போக போன் அடிச்சது. அந்த ரெலிபோன் கோதாரியைப் பூட்டிஞப் பிறகு இருந்த நிம்மதியும் இல்லாமல் போயிட்டுது. திருமதி O.C அடிக்கடி அடிச்சபடி. எப்ப அடிச்சாலும் திரு.O.C ஐத் தாக்கிறதுதான் அவவின்ரை வேலை. பிரமச்சாரியாக இருக்கிறதாலைதான் உந்தப் பிரச்சனையெல்லாம். எப்பிடியாவது கலியாணம் முடிக்காத ஒரு பெட்டையைச் சுழட்டி நமக்கு கால்கட்டுப் போட்டா எல்லாம் றிமோட் கொண்ட்ரோலுக்கை வரும். ஒரு பெட்டை இப்ப என்னைப் பார்த்து அடிக்கடி கண் சிமிட்டுது. பிரச்சனை என்னெண்டா அது கலியாணம் முடிச்சிட்டுதோ எண்டதுதான் எனக்குத் தெரியாது. உதுகளுக்கெல்லாம் போய் பெண்ணிலை வாதியளிட்டை உதவி கேக்கேலாது. ரெலிபோன் அடிச்சதெண்டெல்லே சொன்னனுன். அடிச்சுக்கொண்டே இருக்குது. எடுக்கிறன். கொம்யூனிக்கோஷனிலை என்ன போகுதாம் எண்டைதைக் கேளுங்களேன்.

"Bonjour ஜெயந்தீஸ், தந்த புறமிஸை மறந்திட்டீரோ?"

"பூங்கொடி, நான் புறமிஸை மறக்கேல்லை. எப்பிடியும் ரெண்டு கிழமையிலை உமக்கு அந்த பீரோக் கிளீனீங் வேலை சரிவரும்....."

"விமர்சிக்கிறன் எண்டு குறை நினைக்காதையும்... மூண்டு மாதமாக நீர் ரெண்டு கிழமை ரெண்டு கிழமையெண்டுநான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்...."

"பூங்கொடி .. நான் உம்மை ஏமாத்திறன் எண்டு நினைக்கிறீரோ?"

"நந்தினி (திருமதி O.C) கேட்டா உடனை எதையும் செய்திடுவீர். நான் கேட்டாத்தான். ஓம் ஓம் எண்டிட்டு ஒண்டுமே செய்யமாட்டீர்..."

"அவ முன்னம் வேலை செய்தவா.. சேட்டிபிக்கட் வேறை இருக்கு. அவவுக்கு வேலை எடுக்கிறது ஈஸி. . உம்மிட்டை ஒரு சேட்டிபிக்கட்டும் இல்லை. பாஷை படிக்க வாரும், வேலை எடுக்க ஈஸியா இருக்குமெண்டு உம்மிட்டை எத்தினை தரம் சொன்னனுன். நீர் கேட்டாத்தான்...."

பூங்கொடிக்கு நான் இப்படிச் சொன்னது பிடிக்கவில்லை டக்கெனப் போனை வைத்துவிட்டாள்.

மீண்டும் போன் அடிக்கின்றது. இன்னொரு கொம்யூனிக்கேஷன் போலும் என்றபடி எடுக்கின்றேன்.

"கவியரங்குக்குத் தலைமை தாங்கிறீராம் எண்டு நோட்டீஸிலை பாத்தனுன். இது மெய்யே?" சற்றே மிரட்டும் பாணியில்தான் திருமதி O.C என்னிடம் கேட்டா.

"ஏன் தலைமை தாங்கக் கூடாதோ?"என எரிச்சலோடு கேட்டேன்.

"நானும் கவிதையள் எழுதிறனுன். என்னையும் கவிஞர்கள் பட்டியலிலை போட உமக்கு மனம் வரேல்லையோ? உமக்குக் கல்மனம்

"ஏன் என்னை இப்படியெல்லாம் திட்டிறீர்? என்னைக் கேக்காமல்தான் தலைவர் எண்டு போட்டவங்கள். நான் கவிஞன் இல்லையெண்டது உமக்குத் தெரியும்தானே..."

"கவிஞன் இல்லை. ஆனு ஆட்டக்காறி அனீஷாவை நினைச்சு உருகி உருகி நீர் எழுதின கவிதையளை தாயகத்திலை வாசிக்கேல்லை எண்டு நினைச்சிட்டீரோ? உம்மடை கற்பனைச் சிறகை விரியப் பண்ணிற அளவிற்கு என்னிட்டை ஒண்டுமில்லைப் போலும்" என்றபடி விக்கத் தொடங்கினு. அவ விக்கினு

# மரபும் மாற்றமும்

தொடர் 3

சி.சிவசேகரம்

இந்திய சமுதாயத்தின் அத்திவார மாக்க் கருதக்கூடிய நால் வருண முறை இந்தியாவின் பலவேறு கலாச்சாரங்களையும் ஊடுருவிச் சாதிய சமுதாயங்களை தோற்றுவித் தது. சமுதாய உற்பத்தி உறவு களின் அடிப்படையிற் தன்னை நியாயப்படுத்திய சாதி முறை அந்த உறவுகளின் மாற்றத்தினூடு சுரண்டற் சமுதாய அமைப்பைத் தொடரவும். ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்தவும் ஒரு கருவியாகச் செயற்படுகிறது அடிப்படையிற், சாதியம் நால்வருண முறையி னின்றுபெறப்பட்ட ஒரு மரபையே தனது ஆதாரமாகக் கொண்டு விருத்தியடைந்தது. சாதியமைப்பு களும் ஏற்றத் தாழ்வுகளும் சமுதாய விருத்தியுடன் தமக்குள் மாறி வந்துள்ள போதும் சாதி அடிப்படை யிலான சமூக உறவுகளைத் தொடர்வதற்கு இதுவரை மரபு என்ற ஒன்று எப்போதுமே பயன்பட்டு வந்துள்ளது. சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் உரிய இடத்தை வகுக்கவும் சமுதாயத்தில் மனிதரிடையிலான உறவையும் தனிமனித நடத்தை யையும் வரையறுக்கவும் மரபு பலவேறு மட்டங்களிலும் செயற்பட்டு வந்துள்ளது. பாலடிப் படையிலான ஒடுக்குமுறையும் மரபின் பேராலேயே இன்னமுந் தொடர்கிறது. இத்தகைய மரபுகளைப் பொறுத்த வரை சம நீதிக்கான ஒரு புதிய சமுதாயம் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க முடியும்? சில மரபுவாதிகள் சீர்திருத்தவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்வார்கள். இவர்களது சீர்த்திருத்தம் மாற்றங்களது தவிர்க்கவியலாத நிகழ்வின் பின்பு ஏற்படுவது. இவர்களுட் சிலர் மரபின் வரலாற்றுப் பண்பை மறந்து நலிந்து போகும் மரபை அழகுபடுத்தி அக்காலத்துமுரிய ஒன்ருக நீடிக்க முனைவார்கள். ஆயினும் இவர்கள் அழகுபடுத்திப் புதிதாகக் காட்ட முனையும் சாதிய மரபின் நடைமுறையோ சமுதாய த்தில் மேலும் நெருக்கடிகட்கே இட்டுச் செல்கிறது. அதில் ஏற்படும் மாற்றங்கள் அதன் நெருக்கடியைத் தவிர்க்க முடிவதில்லை.

சமுதாய மரபு, தொடர்ந்தும் மாற்றத்திற்குள்ளாகிற ஒன்றேயா யினும், மனிதர் மீது மரபின் பிடிப்பு மிகவும் வலியது. ஏனெனில் மனிதரது சமுதாயச்செயற்பாட்டிற் கணிசமான பகுதி மரபின் அடிப்படையிலேயே அமைந்து ள்ளது. எனவே மரபுடனுன முறிவுகள் மிகுந்த சிரமத்துடனும் தயக்கத்துடனுமே நிகழ்கின்றன. மனிதரது தேவைகளே மரபில் மாற்றத்தை ஏற்படுத்துகிறபோதும், சமுதாய அளவில் மாற்றங்களைப் புகுத்துவதற்குப் பாதகமாகப் பல விஷயங்கள் உள்ளன. சில சமயங்களில் ஒரு புதிய

---

**ஜெயந்தீஸன்...**

நிற்காது, விக்கிக் கொண்டே இருக்கும்.

"நீங்கள் பெண்ணிலைவாதி, உங்களை வருணிச்சு எழுதினு என்னை ஆணுதிக்கம்கொண்டவன் எண்டு நினைச்சுப் போடுவியளோ எண்டு பயந்துதான் உங்களை வைச்சு நான் கவிதையள் ஒண்டும் எழுதேல்லை.." எனும்போது கதவு தட்டப்பட்டது. "லைனிலை நில்லும்.. யாரோ கதைவைத் தட்டினம்.. பாத்திட்டு வாறன்" என்று விட்டுக் கதவைத் திறந்தால் அங்கே திரு O.C உடல் நடுங்கியது. ஓடிப்போய் போனை எடுத்து "தம்பி நாளைக்கு 12 மணிக்கு EUROPE மெத்ரோவிலை நில்லும். நீர் தந்த ட்ரான்ஸிலேஷன் வேலையைக் கட்டாயம் கொண்டு வருவன்" என்று போனைக் கட் பண்ணினேன்.

"என்ன திடீரென்றுவிஜயம்..." திரு O.C இடம் கேட்டேன்.

"ஒரு பேப்பர் விடலாமெண்டு யோசினை... உம்மிட்டை ஆலோசனை கேட்கலாம் எண்டு வந்தனுன்..."

"பேப்பர் விடுகிற ஆக்களுக்கு ஆலோசனை குடுக்கிறதிலை எக்ஸ்பேட் கியூறியஸ் ஜி தான். கனடாவிலை இருக்கிருர். அடிச்சுக் கதையுமன்..."

"அவன் தாயகத்திலை எழுதிறவன். ஆரிட்டை ஆலோசனை கேட்டாலும் அவனிட்டை மட்டும் ஆலோசனை கேக்க மாட்டன். கேட்டதெண்டா தெரிஞ்சாலே, வந்து நொருக்கித் தள்ளிப் போடுவாங்கள்....."

"நீர்தான் அவங்கடை பக்கமில்லையெண்டிறீர். பிறகென்னத்துக்கும் பயம்...."

"எப்பவும், நாங்கள் ஓடும் புளியம்பழமுமா இருந்திட்ட மெண்டா பிரச்சனையுமில்லை.. இலக்கியத்துக்கும் சேவை செய்த மாதிரியிருக்கும்."

"இலக்கியத்துக்குச் சேவை செய்ய ஓடும் புளியம்பழமுமா இருக்கிறது தான் இப்ப கனபேற்ர ஸ்டைலாப் போயிட்டுது. அதை விட்டிட்டு இலக்கிய உலகத்திலை நடந்த கடைசிச் செய்தி என்னெண்டு சொல்லுமன்?"

போன் அடிக்கின்றது. எடுக்கின்றேன்.

"அவர் போயிட்டாரே? " மீண்டும் திருமதி O.C.

"தம்பி, நாளைக்கு EUROPE மெத்ரோவிலை கொண்டுவந்து தாறதெண்டு சொன்னனுன். பிறகேன் நெடுகையும் அடிச்சுக் கொண்டு...." என்றபடி கட் பண்ணினேன்.

"பேப்பர் அடிக்கிறதைப் பற்றி பிறகு ஆறுதலாகக் கதைப்பம். கவியரங்கை நல்ல எழுப்பமாக நடத்திக் காட்டுவம்" என்றபோது தான், எனக்குக் கீழேயுள்ள கவிஞர் பட்டியலில் திரு O.C இருப்பதும் தெரியவந்தது. திருவைத் திருமதியாக ஆக்கினுல் என்ன என்று ஒரு திட்டம் போட்டேன்.

(திட்டம் பலித்ததா? அடுத்த வாரம் காத்திருங்கள்)

பரம்பரையின் பின்னரே மாற்றங்கள் சமுதாயத்தில் நிலைபெறுகின்றன. மரபின் வலிமைக்கு இன்னுமொரு முக்கிய காரணம், அது, தன் பல வேறு குறைபாடுகளின் மத்தியிலும், நீண்ட கால மனித அனுபவத்தைத் தன்னுட் கொண்டுள்ளது. என்பதாகும். இவ்விடத்திற்றான் ஒட்டுமொத்தமாக மரபை நிராகரிப்போர் தவறுகிறார்கள். அவர்களது நிராகரிப்பு மரபினது நிராகரிப்பாக மட்டுமன்றி மரபுடன் சேர்ந்துள்ள மனித சமுதாய நடைமுறையின் அனுபவத்தினதும் நிராகரிப்பாகி விடுகிறது மரபுக்கெதிரான போராட்டம் அவற்றை அடையாளங் கண்டு அவற்றை முறியடிக்க முனையும ளவில் முற்போக்கான பணியை யாற்றுகிறது. மரபில் மாற்றங்களை ஏற்படுத்துவது சமுதாய ரீதியான செயல். எனவே குருட்டுத்தனமாக மரபுடன் மோதுவது குறுகிய காலத்திலும், மரபுவாதிகளை பலப்படுத்தும்.

மனிதரது அன்றாட வாழ்வுடன் மரபு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள அளவில் மரபு சமுதாய மாற்றத்தையொட்டி மாறியே தீரும் என்பதிற் பரவலாக அதிகம் கருத்து வேறுபாடு இடமிராது. மனித சமுதாயத் தினின்று மனிதத் தேவைகட்காக எழுந்த போதும், வசதிக்காக வேனும், தனித்துக் கருதப்படக் கூடிய கலை இலக்கியங்கள் தொடர்பாக மரபு பற்றிய பிரச்சனை வேறு விதமாக எழுகிறது. இங்கே மரபு என்ற சொல் சில சமயங்களில் பொதுவான நடைமுறையைக் குறிக்கவும் சில சமயங்களில் விரைவிலக்கணப் பாங்காகவும் பயன்படுகிறது. தமிழ் இலக்கிய மரபு பற்றியோ சீன ஓவிய மரபு பற்றியோ சமஸ்கிருதக் காவிய மரபு பற்றியோ பேசும்போது பரவலான ஒரு நடைமுறையின் காலமும் சூழலும் உருவாக்கிய சில பொதுவான பண்புகளைக் கருத்திற் கொள்கிறோம். வடமோடிக் கூத்து மரபு, பரத நாட்டிய மரபு, கர்நாடக இசை மரபு எனப் பேசும் போது மேலுந் தெளிவாக வரையறுக்கப் பட்ட நடைமுறைகளைக் கருத்திற் கொள்கிறோம். இவ்வாறு வரைவிலக்கணப்படுத்தக் கூடிய மரபுகட்குள்ளும் அகவேறுபாடு களையுடைய உள் மரபுகள் இருக்கலாம். வியாக்கியா னங்களில் ஏற்படும் வேறுபாடுகள் புதிய மரபுகளைத் தோற்றுவிக் கலாம். எனினும், ஒரு கூத்தோ, நடனமோ, இசையோ குறிப்பிட்ட வரம்புகட்குட் செயற்படும்போது மட்டுமே அது அந்த மரபுக்குட்பட்டதாகக் கருதப்படு கிறது. இந்த வரம்புகளின் பண்பும் பரிமாணமும் காலத்துடன் விருத்தி பெற்றவை என்பதும் மேலும் மாற்றத்திற்கு உட்படக் கூடும் என்பதும் உண்மையேயாயினும் சில அடிப்படையான இயல்புகள் மிக நீண்ட கால அளவிற் தொடர்ந்து நிலைக்கின்றன. இவ் விஷயங்களில் மாற்றங்கள் நிகழும் போது புதிய, மரபு சாராத கலைவடிவங்கள் உருவாகின்றன.. தெளிவாக வரையறுக்கப்பட்ட கலைவடிவங்கட்குரிய மரபுகளில் ஏற்படும் மாற்றங்கள் அக் கலை வடிவங்கள் மாறிவருஞ் சமுதாயத்திற்கு எவ்வாறு முகங்கொடுக்கக்கூடுமென்ற தேவை சார்ந்தோ சமுதாயத்தின் உள்ளும் வெளியிலுமிருந்து உள்வாங்கிக்கொண்ட புதிய பண்புகளைச் சார்ந்தோ நேரலாம். புதிய தொழிற் கருவிகள், தொழில் நுட்பம் திரவியங்கள், புதிய சிந்தனைகள் போன்ற யாவுமே கலைஞனையும் கலையையும் பாதிக்கக் கூடும். சில சமயங்களில் ஒரு மரபுக் கலை வடிவம் தனது இருப்பைத் தொடர்வதற்காகத் தன் நடைமுறையைக் கணிசமாக மாற்ற நிர்பந்திக்கப்படக் கூடும் இங்கேயும் மரபு தொடர்பான வாதங்கள் எழுகின்றன. மரபு பேணலை இங்கு வலியுறுத்துவோர் சமுதாயப் பிரச்சனைகளில் மரபு பேணலை வலியுறுத்துவோர் அதன் அழகியற் பண்புகட்காக அழியாது பேணப்பட வேண்டும் என்ற வாதம் அக் கலைவடிவத்தின் அடிப்படை யிற் புதிய கலைவடிவங்கள் உருவாகலாம் என்ற நிலைப் பாட்டை மறுக்க அவசியமில்லை. புதியதை அது மரபுக்குப் புறப்பானதாகக் கொண்டாலும் இன்னொரு கலைவடிவமாக ஏற்க ஆயத்தமாக உள்ளளவில் அது சமுதாயம், மொழி, மதம், பண்பாடு என்பன சார்ந்த மரபுவாதங்க ளின்று தெளிவாகவே வேறுபடு கிறது.

கலை, இலக்கியங்கள் தொடர்பான பொதுவான மரபுவாதம் சமுதாய மாற்றங்களை மறுத்து நிற்கும் மரபுவாதத்துடன் பல ஒற்றுமை களையுடையது. அது புதுக் கவிதை கவிதையில்லை என்று வாதிக்கும், நவீன ஓவியம் ஓவியமேயல்ல என்று பிரகடனஞ் செய்யும், தன்னாற் சுவைக்க முடியாத பாடல் இசையல்ல என்று நிராகரிக்கும். புதியன என்ற வடிவிற் பம்மாத்துக்கள் பெருமளவில் வருவது உண்மை. ஆயினும், மரபுவாதம் அவற்றை நிராகரிக்கப் பயன்படுத்தும் அளவு கோல்கள் அழகியலை விட மரபையே, மரபு சார்ந்த அழகியல் என்ற பேரிலாயினும், வலியுறுத்துவன. பல சமயங்களில் மரபு சார்ந்த அழகியல் அடிப்படையிற் தேறுதனவாயினும் மரபு வடிவில் அமைந்த படைப்புக்களை மரபுவாதம் சிறந்த நவீனப் படைப்புகளை விட உயர்வாகக் கொள்கிறது.

ஒரு மரபுவாதி குறிப்பிட்ட ஒரு கவிதை தானறிந்த ஒரு செய்யுள் வடிவத்தினுள் அடங்காது எனும் போது அவர் சரியான ஒரு தகவலை நம்முன் வைக்கிறார். அவர் அது கவிதையல்ல எனும் போது கவிதைக்கான எந்த அளவுகோல் களைப் பயன்படுத்துகிறார் என்று நாம் கவனிக்க வேண்டும் மரபுக் கவிதைவடிவங்கட்கான யாப்பு விதிகளே அவரது அளவுகோல் களாயின் அவர் மதிப்பிடுவது மரபுடனான உடன்பாடேயன்றிக் கவிதையையல்ல. பிற நவீன கலை வடிவங்கள் தொடர்பான மரபுவாத மதிப்பீடுகளும் எவ்வாறாயினும் புதிய கலைவடிவங்கள் அழகியல் தொடர்பான தெளிவான

# உலகின் அடுத்த பதட்ட மையம் வடகொரியா

முன்னுள் யூகோஸ்லாவாக்கியா, சோமாலியா, ஹெய்தி போன்ற நாடுகளில் 1993 ம் ஆண்டில் அடுக்கடுக்காக தோல்விகளை சந்தித்த அமெரிக்க அரசின் வெளிவிவகாரக் கொள்கை இப்போது வடகொரியாவை சீண்ட ஆரம்பித்துள்ளது. விளைவு 1994இல் உலகின் பரபரப்பு அல்லது பதட்ட மையங்களில் வடகொரியாவும் ஒன்றாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

வடகொரியாவோடு ஒரு நேரடியான அல்லது மறைமுகமான யுத்தத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கா செய்ய முனைந்துள்ளது. வெளிநாடுகளில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்பட்டு வரும் தோல்விகளும் உள்நாட்டில் கிளின்ரனுக்கு எதிராக எழுந்துள்ள பாலியல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களும் ஒரு யுத்தத்தை மேற்கொள்ளுதல் மூலம் தமது செல்வாக்குகளை மீள வலுப்படுத்திக் கொள்ளும் அமெரிக்க முன்னுள் ஜனாதிபதிகளின் பாரம்பரியத்தை நோக்கி கிளின்ரனையும் தள்ளியுள்ளது.

இந்த அடிப்படையில் அமெரிக்க உளவு ஸ்தாபனமாகிய சி.ஐ.ஏ, வடகொரியா ஒன்று அல்லது இரண்டு அணுக்குண்டுகளை தயாரித்து வைத்திருப்பதாக அறிவித்துள்ளது. இதனை தாமும் உறுதிப்படுத்துவதாக அமெரிக்காவின் இதர நான்கு உளவு அமைப்புகளும் அறிவித்துள்ளன. ஆனுல் அமெரிக்க ராஜாங்க திணைக்களம் இந்த அறிக்கையிலிருந்து வேறுபடுகிறது. அதேசமயம் ஜனாதிபதி கிளின்ரனே வடகொரியா அணுக் குண்டுகளை செய்வதை எந்த வகையிலும் அனுமதிக்கமுடியாது என்றும் இதற்கெதிரான சகல நடவடிக்கைகளையும் தாம் எடுப்போம் என கூறியுள்ளார்.

ஏற்கணவே இப்பிரச்சனை தொடர்பாக வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பேச்சுவார்த்தைகள் நடந்துவருகின்ற போதிலும் இப்பிரச்சினையை தனக்கு சாதகமாகப பயன்படுத்திக்கொள்ள அமெரிக்கா முயல்கிறது. 40 வருடங்களுக்கு முன்னர் (1950-1953) நடந்த கொரிய யுத்தத்தின் பின்னர் சமீப காலங்களிலே வடகொரியா தென்கொரியா ஆகிய நாடுகளுக்கிடையே சிறிய அளவிலான புரிந்துணர்வும், பேச்சு வார்த்தைகளும், சுமுக உறவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனுல் அமெரிக்கா இதனை விரும்பவில்லை. தனது பிரித்தாளும் தந்திரம் தோல்வியடைந்து விடும் என்பது அமெரிக்காவின் அச்சத்திற்கான காரணம்.

அதனுல் வடகொரியா அணுகுண்டு தயாரிப்பது என்பது தென்கொரியாவுக்கெதிரான அபாய எச்சரிக்கை அதனுல் இதனை அனுமதிக்கக கூடாது என அமெரிக்கா அறிக்கை விட்டது. அதுமட்டுமல்ல தென் கொரியாவின் மீது போர் தொடுப்பது என்பது அமெரிக்காவோடு நேரடியாகப் போர் தொடுப்பதற்கொப்பானது அதனுல் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டால் வடகொரியாவோடு நாம் நேரடியான யுத்தத்தில் ஈடுபடுவோம் என்றும் அமெரிக்கா மிரட்டியது. மிக இரகசியமாக தான் கண்டுபிடித்த இராணுவ அறிக்கையை வெளியிடுவதுபோல 'வடகொரியா, தென்கொரியாவுக்கு எதிரான யுத்தம் ஒன்றிற்கு தயாராகி விட்டது என்றும் தற்போதைய நிலையில் வடகொரியத் துருப்புக்குள் ஒரு தரைமார்க்கமான யுத்தத்தில் தென்கொரிய துருப்புக்களை வென்று விடும் என்றும் எல்லையிலிருந்து 30 மைல் தொலைவிலுள்ள தென்கொரிய தலைநகரான சியோல் ஒன்று அல்லது இரண்டு கிழமைக்குள் வடகொரியாத் துருப்புக்கள் வசமாகிவிடும் என தென் கொரியாவை அச்சுறுத்தியுள்ளது.

இன்று வடகொரியா தென்கொரியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான 100 மைல் நீளமான இராணுவ சூன்ய பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் இரு தரப்பையும் சேர்ந்த இரண்டு மில்லியன் துருப்புக்கள் நிலைகொண்டுள்ளன. இதில் தென்கொரியாவின் சார்பில் நிலை கொண்டுள்ள 36 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்களும் அடக்கம். இந்த இரு நாடுகளின் எல்லைகளிலுள்ள படைகளைக் குறைக்கவும் இரு நாடுகளுக்கிடையும் வர்த்தக மற்றும் நட்புறவுகளை ஏற்படுத்தவும் முயற்சிகளை எடுக்கையில்.. தொடர்ந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகையில் அமெரிக்கா இவை அனைத்தையும் சீர்குலைக்கவே முயல்கிறது.

வடகொரியாவுக்கெதிரான இராணுவ அச்சுறுத்தல்களில் மாத்திரமல்ல அரசியல் நகர்வுகளிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. வடகொரியாவின் அணுஆயுத உற்பத்திப் பகுதிகளை பார்வையிட அனுமதிக்க வேண்டும் என 93இன் ஆரம்பத்திலேயே

## சுழலும் உலகம்



**தி. உமாகாந்தன்**

அமெரிக்கா ஐ.நா.வினூடாக வடகொரியாவை மிரட்டியது. ஆனால் வடகொரியா அதற்கு மறுத்துவிட்டது. தான் வடகொரியாவோடுபேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பூற்ரேஸ்-பூற்ரேஸ் காலியை வடகொரியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளச் செய்து இப்பிரச்சனையில் தான் மத்தியஸ்தம் செய்வதாக அவரைச் கூறச் செய்தது. ஆனால் வடகொரியாவின் வெளிவிவகார அமைச்சரான கிம் யொங் நாம், வடகொரியா அமெரிக்காவோடு நேரடியான ஒரு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இத்தகையதொரு மத்தியஸ்தம் தேவையில்லை என நிராகரித்து விட்டார். இதைத் தொடர்ந்து பூற்ரேஸ்-கார்லி "வடகொரியா இனிமேல் எதிர்காலத்தை நோக்கவேண்டுமேயொழிய 40 வருடங்களுக்கு முன் நடந்ததை நினைத்துப் பார்ப்பதில் அர்த்தமில்லை" எனக்கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து அமெரிக்கா, பாகிஸ்தான் பிரதமர் பெனுசிர் பூட்டோவையும்வடகொரியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ள அனுப்பியது. ஆனால் அந்த விஜயமும் பலனற்றுப் போய்விட்டது.

இத்தகைய நிலையில் வடகொரியாவுக்கு எதிரான சர்வதேச பொருளாதாரத் தடையொன்றை ஐ.நாவின் மூலம் அறிவிக்கவேண்டிவரும்நிலைவரும் என அமெரிக்கா எச்சரித்தது. ஆனால் வடகொரிய விஜயத்தைத் தொடர்ந்து பூற்ரேஸ் காலி சீனாவுக்கு சென்றபோது சீனப் பிரதமர் லீ பெங் "வடகொரியாவின் அணு ஆயுத பிரதேசங்களைப் பார்வையிட அனுமதிக்கவேண்டும் என்ற நிர்பந்தத்துக்காக விதிக்கப்படும்எந்தபொருளாதாரத் தடையையும் சீனா ஏற்றுக் கொள்ளாது! எதிர்க்கும்" எனக் கூறியுள்ளார். அமெரிக்காவைப் போலவே சீனாவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள உறுப்பினர் ஆகும். சீனாவின் ஆதரவு இல்லையேல் ஐ. நாவின் எந்தப் பொருளாதாரத் தடைமுயற்சியும் அர்த்தமற்றுப் போகும்.

இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால் வடகொரியா விடம் நியூக்கிளியர் குண்டு இருக்கிறதென்பதற்கு அமெரிக்கா விடம் அழுத்தமான எந்த ஆதாரமுமில்லை. இதனை உறுதிப்படுத்துவதற்காகசெயற்கை கோள்களினால் எடுக்கப்பட்ட படங்களோ அல்லது உளவாளிகளின் அறிக்கைகளோ அல்லது இலத்திரனியல் நுண்கருவிகள் மூலம் தடுத்தறிந்த செய்திகளோ கிடையாது. அதுமட்டுமல்ல சி.ஐ.ஏயின் அறிக்கையை அமெரிக்க இராஜங்க திணைக்களக்களம் நிராகரிக்கிறது. நியூயோர்க் ரைம்ஸ் குழந்தைத் தனமானது எனக் கூறுகிறது. யோங்பையோன் நகரில் உற்பத்தி செய்யப்பட்டபுளுட்டோனியத்தை வைத்து வடகொரியாவில் அணுக்குண்டு இருக்கிறது என்று எப்படி கூறமுடியும் என நியூயோர்க் ரைம்ஸ் கேள்வி எழுப்புகிறது.

இது மாத்திரமல்ல ஜப்பானிய உளவு துறை அதிகாரிகள் கூட வடகொரியா விடம் அணு குண்டுகளைத் தயாரிக்கவல்ல 5.4 கிலோ நிறையுள்ள புளுற்ரோனியம் இருந்தாலும் அணுக் குண்டுகள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர். ஆனால் சி.ஐ.ஏ. யோ இன்னும்ஒருபடிமேலேபோய் லிபியா ஈராக், ஈரான் ஆகிய நாடுகள் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன என கூறியுள்ளதிலிருந்து உண்மை நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். உலகின் பொலிஸ்காரன் தான் என்பதை நிலைநாட்ட அமெரிக்கா எந்த அனுபவத்தையும்பாடமாகஎடுத்து கொள்ள மறுத்தால் வடகொரியா அமெரிக்காவுக்கு அடுத்த பாடமாக அமையும்.

***மரபும்...***

வரையறைகளுடன் உருவாவதில்லை. அவை சில அழகியற் கோட்பாடுகளை மரபினின்று பெறுகின்றன. பிற அவற்றின் விருத்தியின் போக்கில் முடிவாகின்றன. எவ்வாறாயினும் நடைமுறையே இறுதித் தீர்வுகளை வழங்குகிறது.

மரபு சார்ந்த கலைவடிவங்கள் கண்டிப்பான மரபின் வரையறை கட்குட்படப் பேணப்பட வேண்டுமா என்பது முக்கியமான ஒரு பிரச்சனை. இங்கே மனிதரது படைப்பாற்றலின் வரலாற்று விருத்தியின் ஒரு உச்ச நிலையை எதிர்காலத்திற்காகப் பேணுகிற ஒரு தேவையையும் அக் கலைவடிவத்தை புதிய சமுதாயச் சூழலில் மனிதரது தேவைகளை எவ்வாறு நிறைவு செய்ய முடியும் என்பதையும்நாம்கணிப்பிலெடுக்க வேண்டும். முதலாளித்துவம் மரபு சார்ந்த கலை வடிவங்களைச் சந்தையின் தேவைகட்கேற்பவே கையாளுகிறது. வியாபார நோக்கம் அவற்றை மலினப்படுத்தி உருக்குலைக்கவும் முற்படுகிறது. முதலாளித்துவத்தின் கீழான மரபுக் கலைகளின் பேணல் மரபை ஒரு வியாபாரப் பொருளாக்குவதற்கு மேலாக எதையும்செய்ய மாட்டாது. மரபுக் கலைவடிவங்களை அழகியற் காரணங்கட்காகப் பேணுவது சமுதாய முழுமையினதும் தேவையையொட்டியது. தனியார் சிலரது நலன்களை முதன்மைப்படுத்தும் ஒரு சமுதாய அமைப்பால் அதைச் செய்ய முடியுமா என்பதுஐயத்துக்குரியது. எவ்வாறாயினும், விரிந்த பார்வையையுடைய ஒரு சமுதாயத்தில் மரபுசார்ந்த கலைகள் தமது பழைய வடிவிலும் அவற்றினின்று விருத்தி பெறும் வடிவங்களுடும் அவற்றின் பண்புகளை உள்வாங்கிக் கொள்ளும் பிற நவீன வடிவங்களுடும் மனிதருக்குத் தொடர்ந்தும் பயன்பட முடியும்.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ணன்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ. லோகநாதன்**

### 1988டிசம்பர் 19ம்திகதி ஜனாதிபதி தேர்தல்

ஆட்சி அதிகாரமும் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி குண்டர் குழுக்களையும் வைத்திருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கே இத் தேர்தல் கூடிய அளவு சாதகமாக அமைந்தது. ஜேவிபியின் பயங்கர நடவடிக்கைகள் உண்மையிலேயே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சிக்குமே தாக்கத்தை ஏற்படுத்தின. அதிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கே தாக்கம் அதிகமாகவிருந்தது. ஸ்ரீ லங்கா மக்கள் கட்சிக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனேகர் இருந்ததனால் அவர்கள் அனைவருக்கும் குறிப்பிடத்தக்க அளவு பாதுகாவலர்கள் இருந்தனர். இதனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் விட இவர்களால் தேர்தலின் போது செயல்படக் கூடியதாகவிருந்தது. ஜேவிபி யுடனான நட்பு முறிந்த பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதுமே செய்ய முடியாத அப்பாவி நிலமைக்கு தள்ளப்பட்டிருந்தது.

ஜேவிபியின் அச்சுறுத்தல்கள் அனைவரையும் விட யுஎன்பி யினருக்கே அதிகமாக இருந்தாலும் ஆட்சி அதிகாரமும், பாராளுமன்ற மகாகாணசபை உறுப்பினர்கள் அதிகமாகவிருந்ததால் இவர்களின் உத்தியோகபூர்வமான பாதுகாவலர்களது பலமும் அத்துடன் உத்தியோக பூவர்மற்ற முறையில் செயல்பட்ட ஆளும் கட்சியின் சட்டவிரோத கொலைக் குழுக்களது பலமும் யூஎன்பி யினருக்கு இருந்ததால் அவற்றைப் பயன்படுத்தி வெற்றிக்கு அவசியமான வாக்குகளைப் பெற இவர்களுக்கு அவகாசம் இருந்தது. அன்று நிலவிய இவ்வாறான பின்னணியின் கீழ் ஜேவிபியின் தேர்தல் விரோத நடவடிக்கைகளால் யூஎன்பிக்கும் பிரேமதாசவுக்குமே பூரணமாக நன்மை கிடைத்தது.

ஜனாதிபதி தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 55.32 வீத்தினரே வாக்களித்தனர். இது இதுவரை காலமும் நடைபெற்ற பாராளுமன்ற அல்லது ஜனாதிபதி தேர்தலின் போது அளிக்கப்பட்ட ஆகக் குறைந்த வாக்குகளாகும். 93,75,742 வாக்குகளில் 41,89,519 பேர் அதாவது 44.68 வீதத்தினர் வாக்களிக்கவில்லை. வேறுவிதமாக கூறுவதாயின் 25,69,199 வாக்களர்களது வாக்குகளைப் பெற்று அதாவது 27.40 வீதம் வாக்குகளை மட்டுமே பெற்று பிரேமதாச ஜனாதிபதியானார். இது எவ்வித்திலும் ஒரு பண்பான வெற்றி அல்ல. பிரேமதாசாவின் இப் பண்பற்ற வெற்றிக்கு ஜேவிபியின் நடவடிக்கைகளே பெரும் உதவியாகவிருந்தன. அவ்வாறாயினும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவிய பெலயீனமும் ஒழுங்கமைப்பு அற்ற தன்மைகளும் பிரேமதாசாவின் வெற்றிக்கு உதவியாக அமைந்தன எனக்குறிப்பிடவேண்டியதும் அத்தியாவசியமாகும்.

நாம் மேலே காட்டியவாறு ஜேவிபியின் உபாயமானது ஒழுக்க விழுமியங்கள் எதுமற்ற தேர்தலில் பிரேமதாச வெற்றிபெற்று மீண்டும் யூஎன்பி அதிகாரத்துக்கு வருவதால் உருவாகும் நிலமைகளைப் பயன்படுத்தி அரசாங்க விரோத சக்திகளை தமக்குப் பின்னால் அணி திரட்டி பிரேமதாசவை கவிழ்த்து ஆட்சியைக்கைப்பற்றுவதேயாகும். ஸ்ரீ மாவோ வெற்றிபெறுவதால் ஏற்படக்கூடிய நிலமை பற்றிய ஜேவிபியின் மதிப்பீடு தவறற்றதாக இருக்க இடமிருந்த போதிலும் பிரேமதாச வெற்றி பெறுவதால் ஏற்படக்கூடிய நிலமைகள் பற்றிய மதிப்பீடு கவலைக்கிடமான முறையில் பிழையாக அமைந்ததையே பின்னர் காண முடிந்தது.

ஜனாதிபதி தேர்தல் முடிவு வெளிவந்தவுடன் கூட்வே நாட்டின் பதட்ட நிலமை தணிந்தது. பிரேமதாசவின் ஆட்சியின் கீழ் கொஞ்சக் காலத்துக்காவது தம்மை நோக்கிய அடக்கு முறைகள் தளர்வு அடையலாம் என ஜேவிபி எண்ணியது. 1989ம் ஆண்டு ஜனவரி மாதம் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டது. தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 1500பேர் விடுதலை செய்யப்பட்டனர். ஜேவிபிக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டு படையினர். விடுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். அத்துடன் பேச்சு வார்த்தைக்கு வருமாறு ஜேவிபிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்தால் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டது. 1989 பெப்ரவரி 15ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை அமைதியாக நடத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அவசர காலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும் பயங்கர வாத தடைச் சட்டம் பொறுப்புகளிலிருந்து சட்ட விலக்குரிமை ஆகிய உட்பட ஏனைய அடக்கு முறைச் சட்டங்களும் கொலைக் குழுக்களும் ஒழிக்கப்படவில்லை. அவசரகாலச் சட்டம் இல்லாவிடினும் அவசரகால சட்டத்தின் கீழ் செயல்படுவது போல் செயல்பட அரசாங்கத்துக்கு இடமிருந்தது என்பதே இதன் அர்த்தமாகும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு மறுதினம் அதாவது டிசம்பர் 20 ம் திகதி மு. ப. 11.00மணிக்கு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்தன விடுத்த அறிக்கையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1989 பெப்ரவரி

15ம் திகதி பொதுத் தேர்தல் நடாத்தப்படல் வேண்டும் என பணிந்தார்.
1989ம் ஆண்டு ஜனவரி 1ம்திகதி ஜேவிபி விடுத்த அறிக்கையில் இப் போலித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பொது மக்களிடம்கோரியது. இத்தேர்தல் இந்திய ஏகாதிபத்தியத்தினதும் அவர்களது நேரடியான, மறைமுகமான தரகர்களதும் அவசியங்களுக்காக நடைபெறும் ஏமாற்றமே எனவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டது.
ஜனாதிபதி தேர்தலுடன் மிகவும் குறுகிய காலத்துக்கு நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பமாகிய வன்செயல்கள் பொதுத் தேர்தலுடன் மிகப் பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கின. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் குண்டு வீசுதல், வேட்பாளர்களை அவர்களது உதவியாளர்களை கொலை செய்தல், உளவாளிகளை தமது அரசியல் எதிராளிகளை கொலை செய்தல், பொலீஸ், இராணுவத்தை தாக்கி ஆயுதங்களைப் பறித்தல், தமது ஆணைகளுக்கு கீழ்படியாதவர்களை கொலை செய்தல் ஆதியவாறு இவ்வன்செயல்கள் சகல நாட்டின் பகுதிகளிலும் பரவின. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கழிந்த 7 வார காலத்துள் அரசியல் படுகொலைகள் மட்டும் 600க்கும் அதிகமாக இடம் பெற்றன. இவற்றில 60 பேர் கிராம சேவை உத்தியோகத்தர் உட்பட அரசாங்க ஊழியர்களாவர். தேர்தல் பிரச்சார வேலைகள் ஆரம்பமாகியவுடன் செங்கடகலை யூஎன்பி அலுவலகத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத் தாக்குதலால் 6 பேர் கொல்லப் பட்டனர். கண்டி நவசமசமாஜக் கட்சி வேட்பாளரான நிஸ்ஸங்க கருணாதிலக அவர்களின் வீடு தாக்கப்பட்டு அவரிடமிருந்த ஆயுதங்களைப் பறித்த கொலைகாரர்கள் வீட்டிலிருந்த 6 பேரை படுகொலை செய்தனர். வெலிகமயூஎன்பி அலுவலகம்மீது குண்டு வீசி அழித்ததோடு ஒருவர் கொல்லப்பட்டார். எவ்வாறுயினும் தேர்தல் வேலைகளின் போது கூடுதலாக தாக்குதல்களுக்கு உள்ளாகியது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியேயாகும்.
ஹிங்குரக்கொடையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முதலாவது பிரச்சாரக் கூட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக நூலிழையில் உயிர் தப்பினார். மாத்தறை உயன்வத்தையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கூட்டத்துக்கும் குண்டு வீசப்பட்டது. களுத்துறையில் இந்திரபால அபேவீர, மாத்தறையில் சரத் சேபால ரத்னயகவும் அபூபக்கர் முகம்மது ஹிசேன் அவர்களும் பதுளையில் ஞரத்னயக கேகாலையில் ஹெக்டர் அபேசிங்க ஆகியோர் உட்பட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச்சார்ந்த 9 வேட்பாளர்களும் ஐக்கிய சோஷலிச முன்னியைச் சார்ந்த வேட்பாளர்கள் 3 பேரும் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு வேட்பாளரும் படுகொலை செய்யப்பட்டனர். யூஎன்பியைச் சார்ந்த ஒரு வேட்பாளர் கூட கொல்லப்படாதது விசேட அம்சமாகும்.
பொதுத் தேர்தலுக்கு இரண்டு வாரகாலத்துக்கு முன்னர் 'தேசபக்த மக்கள் ஆயுதப் படையணியின் இணைந்த தலைமையகம் பொதுத்தேர்தலுக்கு தடைவிதித்தது. இத் தடை உத்தரவின் பின்னர் விசேடமாக தென்பகுதியில் கொலைகள் மும்முரமாக இடம்பெற்றன, பயங்கரமான நிலமை பரவியது. பெப்பரவரி முதல் இரு நாட்களில் மட்டும் தங்காலை, தெவிநுவர, காலி, கொஸ்கொடை ஆகிய பிரதேசங்களில் 35 பேர் கொல்லப்பட்டனர். தெற்கில் நிலமை மோசமடைந்ததால் ஆயுதப்படையைச் சார்ந்த உயர்மட்ட அதிகாரிகளின் உரையாடலின் பெறுபேருக தென்பகுதி மீண்டும் இராணுவத்தை அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.
தேர்தல் அண்மிக்கும்போது வன்செயல்கள் மேலும் துரிதகதியில் அதிகரிக்கத் தொடங்கின., எல்லா இடங்களிலும்வாக்குச்சீட்டுக்களை அபகரித்தல், பயமுறுத்தல், தீவைத்தல், குண்டு வீசுதல், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியன இடம் பெற்றன. தேர்தல் தினத்தன்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தேர்தலுக்கு முதல் நாள் திஸ்ஸமகராமையில் மூவர் கொல்லப்பட்டு அவர்களது உடல் பிரதான பாதையில் காட்சிக்கு வைக்கப்பட்டது. வாக்களிக்கச்செல்லும்முதலாவது ஐவருக்கு மரண தண்டனை எனக் குறிப்பிடும் போஸ்டர்கள் அனேக இடங்களில் ஒட்டப்பட்டன. வாக்களிப்புக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னரான காலத்துள் தனிநபர் படுகொலை சுமார் 150 இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. வாக்களிப்பு நிலையங்கள் மீது குண்டு வீசுதல், துப்பாக்கி பிரயோகம் பரவலாக இடம் பெற்றது. இவ்வாருன சம்பவங்கள் 150 இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

### ஜேவிபியின் பெயருள் மறைந்திருந்த கரும் பூனைகள் உடுகம்பொலவின் அம்பலப்படுத்தல்

கிடைக்கப் பெற்ற பல தகவல்களின்படி விசேடமாக பொதுத்தேர்தலுடன்தொடர்பான வன்செயல்கள் ஜேவிபி யால் மட்டும் செய்யப்பட்டவை அல்ல என்பதற்குசாட்சியங்கள் உள்ளன. இந்நாட்களில்ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக இடம்பெற்றவன் செயல்களில் அனேகமானவை ஜேவிபியின் பெயருள் மறைந்து கொண்டு அரசாங்கத்தாலேயே செய்யப்பட்டவை என கதைகள் அடிபட்டன. 'பச்சைப் புலி'யாலேயே இக் கொலைகள் செய்யப்பட்டதாக அக்காலத்தில் பேசப்பட்டது. இந்திரபால அபேவீர படுகொலை செய்யப்

ம.ப.பார்க்க...

**தீயினில்...**

செந்தில் குமுறினான்.

"எனக்கு ஒண்ணுமே பிடிக்கல்ல. செத்திடணும். பெட்ரலைத் தேகமெல்லாம் ஊத்தி கொழுத்திச் செத்திடணும்..."

"என்னய்யா நீ! புள்ளைக்குட்டிக்காரன் .. இந்த லட்சணத்தில ஒரு சின்னவீடு வேற சாகணும்னு சொல்றியே.. போ.. பேசாம தூங்கு..."

செந்தில் ஓவென்று அழுதான்.

"எனக்கு எதுவும் பிடிக்கல்ல தலைவா. எங்கிட்ட சும்மா 'டமாஸ்' பண்ணாத பாரு எனக்கு நீ ஒண்ணும் பண்ண வேணும்.. கொஞ்சம் பெட்ரல் குடு. நான் சாகணும் தீக்குளிச்சு சாகணும். எம்பேரு நாளைப் பேப்பர்ல வரணும்..."

வில்லவனின் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் செந்தில். வில்லவனின் மூளையில் என்னவோ பளீரென்று அறைந்தது. தலைவர் கண்களிலே கம்பீரமாக வந்தார். அவரின் நீதிமன்ற வார்த்தைகள் கணீரென்றுவில்லவனின் காதோடு கேட்டன. மீண்டும் மீண்டும் கேட்டன.

வில்லவன் அசையாமலே இருந்தார்.

"பெட்ரல் குடுங்க தலைவரே..."

செந்தில் அவரை உலுப்பினான்.

வில்லவன் செந்திலை மிகவும் நிதானமாக, ஒரு தீர்மானத்தோடு பார்த்தார்.

"செந்தில்.."

"சொல்லு தலைவா..."

"நம்ம தலைவர் உன்னை விசாரிச்சாரு..."

"ஆரு?" கூர்மையாக அவரைப் பார்த்தான் அவன்

வில்லவன் தலைவரின் பேரைச் சொன்னார்.

செந்திலின் கண்களில் ஆச்சரியம் பளபளத்தது.

"என்னை.. அவருக்கு.. எப்பிடி..."

தடுமாறிற்று அவனது குரல்.

வில்லவன் அடங்கிய குரலிலே கூறினார்.

"நம்ம 'ஷாப்'புக்கு வாறபோதெல்லாம் தலைவர் உன்னைப் பார்த்திருக்கார். உன்னோட உற்சாகமும் சுறுசுறுப்பும் அவருக்கு நல்லாப் பிடிச்சிருக்காப்பா. ரொம்பவும் சொன்னாரு..."

"அப்படியா?"

டின்னைக்கீழே வைத்தான் செந்தில்

"ஆறு இப்போ அவர் ரொம்பக் கஷ்டத்திலே இருக்கிறாரு. எதிர்க்கட்சிக்காரங்க சதிபண்ணி அவரை எம். எல்.ஏ பதவியிலே இருந்து இறக்க வழி பண்ணியிட்டாங்க..."

"என்ன?"

லேசான அதிர்ச்சியோடு கேட்டான் செந்தில்.

"தமிழ்நாடு கொந்தளிக்கப் போகுது. தீ பற்றி எரியப்போகுது. தொண்டர்கள் ஆளுக்காள் 'பெட்ரோல் டின்'னோட புறப்பட்டிட்டாங்க..."

"எதுக்கு? பஸ்சைக் கொழுத்தப் போறாங்களா?"

ஆர்வமாகக் கேட்டான் செந்தில்.

"இல்லை.."

"அப்புறம்?"

"தலைவருக்காக தீக்குளிக்கப் போறாங்க. அந்த லட்சிய வீரர்களை யார் தடுக்கமுடியும்?"

"நம்ம பரம்பரை" என்றான் மலர்ச்சியோடு செந்தில்.

"தலைவரே.." என்றான் செந்தில் கனிவாக. மறுகணமே.

"என்ன செந்தில்?"

"எனக்கு பெட்ரோல் குடு தலைவா."

"வேணும் செந்தில்..."

செந்தில் காலடியில் கிடந்த 'பெட்ரோல் டின்'னைத் தூக்கியவாறு, "நான் புறப்படறேன்" என்றவாறு புறப்பட்டான். வில்லவன் அவனது தோளில் கை வைத்தான். தணிந்த குரலில் அன்போடு கேட்டார்.

"எங்கே போறே?"

"தீக்குளிக்க..."

வில்லவன் செந்திலின் தோளிலே கை போட்டார். இறுக்கமாகப் பற்றிக் கொண்டார்.

"சரி..என்னோட வா செந்தில்"

செந்தில் உடலில் பெற்றோலை ஊற்றிக் கொண்டபோது மல்லிகாவும் அறிவழகனும், மோகினியும் அவனது கால்களைப் பற்றிக் கொண்டு அழுவதை உணர்ந்தான். திடுக்கிட்டான். மல்லிகா அன்பானவள்.. பொறுமையானவள். அவன் தாங்க முடியாத கஷ்டங்கள் கொடுத்த போதும் முகம் சுழிக்காமல் எல்லா சந்தோஷமும் அள்ளியள்ளித் தந்தவள். அந்தச் சிறிய குழந்தை அறிவழகன், 'அப்பா அப்பா' என்று அவனை வாஞ்சை பொங்க கூப்பிடுகின்றவன். அந்த மோகினி மட்டுமென்ன, "வேணய்யா குடியை விட்டிடையா ....சந்தோஷமா இருந்திடலாம்" என்று ஓயாமல் கெஞ்சுகிறவள்.

'வேண்டாம் தீக்குளிப்பு வேண்டாம்' மனம் அலறிற்று.

அவன் தனது தேகத்தில் பெட்ரோல் தெளிப்பதை நிறுத்தி விட்டு கூட்டத்தைப் பார்த்தான். தீர்மானமாகப் பார்த்தான்.

அவனையே பார்த்துக் கொண்டு நின்ற வில்லவன் உரத்த குரலில் முழங்கினார்.

"தலைவருக்காக தீக்குளிக்கும் தியாக

---

**ஜே.வி.பி...**

பட்டதும் ஹிங்குரக்கொடை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முதலாவது கூட்டத்தின் மீதான தாக்குதலும் அவ்வாறானவையாகவே சந்தேகிக்கப்பட்டன. பிரதிப் பொலீஸ் மா அதிபராகவிருந்த பிரேமதாச உடுகம்பொல பின்னர் அம்பலப் படுத்திய விடயங்களிலிருந்து இச் சந்தேகம் உறுதிப்படுத்தப் பட்டது. அவர் வெளிப்படுத்திய தகவலின்படி அரசாங்கத்தின் பிரதான மட்ட அரசியல் வாதிகளால் ஸ்தாபிக்கப்பட்ட 'கரும் பூனை' என்னும் பெயரால் அழைக்கப்பட்ட கொலைக்குழுவால் இக்காலகட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் ஜேவிபியினரைப் போல் வேடம் பூண்ட இக்கரும் புலிகளே அனேக இடங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரை அச்சுறுத்தியுள்ளனர். உடுகம்பொல தனது அம்பலப்படுத்தலில் இவற்றுக்கு உதாரணங்களையும் காண்பித்துள்ளார்.

தொடரும்

செந்தில் வாழ்க!தலைவர் புகழ் வாழ்க..."
"தலைவர் வாழ்க!"
"செந்தில் வாழ்க!"
"தியாகி செந்தில்"
"வாழ்க ....வாழ்க .."
பேரொலியாய் அந்தக் குரல்கள் எழுந்து சத்த அலைகளாய் பிரமாண்டமாய் பரவின.
டர்ரென்று சில எரிந்த தீக்குச்சிகள் செந்திலின் உடல் மீது விழுந்தன. குப்பென்று பற்றியது செந்தி. கொழுந்தாய் விகாசித்து எரிந்தது. சுழன்று பரவி தன் நாக்குகளை விரித்து விசாலமாக மேலுங் கீழுமாகப் பரவிற்று.
செந்தில் கால்களை உதைத்தான். உடலைக் குறுக்கி கைகளை விலுக் விலுக் கென்று எறிந்தான். நிலத்தில் புரண்டான். தீயிலிருந்து விடுபட நிலத்தில் விழுந்து உருண்டு புரண்டு கதறினான்..
"என்னைக காப்பாத்துங்க. காப்பாத்துங்க..... மல்லிகா.. அறிவு.. மோகினி என்னைக் காப்பாத்துங்க..." ஆனால் அவனது சத்தம் வெளியே வரவில்லை. தீயினுள்ளேயே அடங்கிக் கருகிப்போயிற்று.
"தலைவர் வாழ்க.."
"தியாகதீபம் செந்தில் வாழ்க..."
"தலைவர் வாழ்க.. நீடுழி வாழ்க..."
செந்திலின் உடல் கருகி, நிணம் மணக்க அவன் சுழன்று எலும்புகள் தளர நிலத்தில் சுருண்டு மடங்கி விழுந்தபோது ஒரே சீரில் குரல் முழங்கிற்று.
"தலைவர் வாழ்க.."
"செந்தில் வாழ்க"
புகைப்படக்காரர்கள் அந்தத் தீக்குளிப்பை எல்லாக் கோணங்களிலும் படமெடுத்த பெருமிதத்தில் அங்கிருந்து புறப்பட்டனர். இந்தச் செய்திதாள் இன்றைய புகைப்படங்களுடனை எட்டு 'கால' தலைப்புச் செய்தி.
"அண்ணி..." என்றவாறு கண்ணீருங் கம்பலையுமாக வீட்டு வாசலில் நின்றவர்களை பதைபதைப்போடு பார்த்தாள் மல்லிகா.
"என்னங்க ..நீங்க ஆரு?"
"அண்ணி, அண்ணனோட படம் இருந்தாக் காட்டுங்க! மாலை போடணும்..."
"என்ன சொல்றீங்க?"
"செந்தில் அண்ணை நம்ம கட்சிக்காறரு. அவரு தங்க கட்சிக்காரருன்னு மத்தவங்க பிராடு பண்ணுங்க. அதை மறந்திடுங்க அண்ணி. இனி நீங்க தான் நம்ம கட்சியை வழி நடத்தனும்..."
அப்போது இரண்டு கார்கள், மூன்று வேன்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் அங்கே வந்து நின்றன. வில்லவனும் தலைவரும் இறங்கி முன்னே நடந்து வந்தனர், அனுதாபம் வழியும் முகங்களோடு. மாலையோடு நின்றவர் கிசுகிசுத்தார். "அண்ணி அந்தா வர்ற ஆட்களை நம்பாதீங்க! திருட்டுப் பசங்க..."
மல்லிகா குழம்பிப் போய் நின்றாள். வில்லவன் மல்லிகாவுக்கு அருகே வந்தார்.
"அண்ணி, செந்தில் எமது தலைவருக்காக தீக்குளித்து உயிர்த்தியாகம் பண்ணிட்டாரு. அவருக்கு கட்சி நிதியில் இருந்து பத்தாயிரம் ரூபாவை தலைவர் தன் திருக் கரத்தாலே கொடுக்கிறதுக்கு வந்திருக்காரு.. நீங்க வாங்கணும்."
மல்லிகா ஓவென்று அலறினாள் தலைவர் வாழ்க என்ற சத்தத்துள் அவளது குரல் அடங்கிக் கரைந்து போயிற்று. அந்தக் கோஷங்கள் நீண்ட நேரம் கேட்டன.

## பென்சூரியனின் குட்டிக்கதைகள்

# ஊர்விட்டு ஊர் வந்து ஜொள்ளுக்கு அலைஞ்சாலே...

என் கூட்டாளி தேசிங்கராஜன் தன் பிள்ளைக்கு காது குத்து வைபவத்திற்காக என்னையும் கூப்பிட்டிருந்தான். தேசிங்கராஜன் ஏற்கனவே இருபதாயிரம் வரை 'வெளியில் நிற்பதாகவும்' அதை வசூலிக்கத் தான் இந்த காது குத்து வைபவத்தை ஏற்பாடு செய்ததாகவும் சொன்னான். 'பென் அண்ணை, கட்டாயம் வாங்கோ' என்று தேசிங்கராணியும் சொல்லி விட்டாள். போய் இறங்கினால்... டேய்! பென் சூரியா! சத்தம்கேட்டு திரும்பிப் பார்த்தால் அங்கே கியூரியஸ் ஒரு மூலையில் சிவனே என்றிருந்தான். டேய் நீயும் தேசிங்கனுக்கு சினேகமோ? என்று விசாரித்தால், இல்லையடா, அபித குஜாம்பாளும் தேசிங்கராணியும் ஒண்டாய் படிச்சவையாம், அதுதான் நாய் மாதிரி இழுபடுறன். .. என்றான்.
பார்ட்டி அல்லோல கல்லோலப்பட்டது. அங்கே தான் சிகாமணியைக் கண்டேன். இவன் ஒரு ஜொள்ளுப் பேர்வழி.. ஆளுக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் உண்டு. மனிசியை பெட்டகத்துக்குள்ள பூட்டி வைச்சிருக்கிற மாதிரி.. நான் ஒரு நாளும் மனிசியை வெளியில் கண்டதில்லை. ஆனால் இப்படியான பார்ட்டி என்றால் தவற விடமாட்டான். ஓசியில் கிடைக்கிறதே, இதை விட்டால் வேறு தருணம் கிடையாது என்று குடிக்கவும் யாராவது 'வெள்ளையளைக்' கண்டால் வழியவும் தான் இவன் பார்ட்டிகளுக்கு வருவதுண்டு. சொந்த மனிசியை வேறு யாரும் பிடித்து விடுவார்கள் என்று பயத்தில் பூட்டி வைத்துக்கொண்டு, இங்கேவந்து மற்றப் பெண்களுக்கு வழிவான். வலியப் போய் வெள்ளைப் பெண்கள் இருக்கின்ற மேசையில் போய் ஒட்டிக்கொண்டு தெரிந்த ஆங்கிலத்தில் விளாசுவான். வெள்ளைப் பெண்கள் என்றால் தான் கேட்டவுடனே படுக்க வந்து விடுவார்கள் என்ற மன்மதத் தனமான கற்பனை இவனுக்கு அதிகம்.
தேசிங்கராஜனும் தன்னோடு வேலை செய்த சில வெள்ளைகளை வீடியோவில் படம் பிடித்து ஊருக்கு அனுப்புவதற்காக அழைத்திருந்தான். ஊரில் உள்ளவர்களும் தேசிங்கனின்

பிள்ளையின் காதுகுத்தலுக்கு வெள்ளையள் வந்தது பற்றி புழுகிக் கொள்ளலாமே..

சிகாமணி இருந்த மேசைக்கு அருகில் இருந்த மேசையில் கொஞ்சநேரம் இருந்து காதை எறிந்தேன். சிகாமணி வெள்ளைகளுக்கு காது குத்து வைபவம் பற்றி விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தான். இப்படியான வைபவங்களுக்கு வெள்ளையர்களை அழைப்பவர்கள் எதற்கும் இது பற்றி விளக்கங்கள் தெரிந்த சிலரை அழைத்து அவர்களுடன் சேர்த்து விடுவது நல்லது. சிகாமணியும் 'யூ நோ, தே மேக் ஹோல் இன் த இயர்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

இடைக்கிடை அந்தப் பெண்களிடம் 'யூ காவ் போய் பிரண்ட்?' என்று சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டும் இருந்தான். அந்தப் பெண்களும் பதிலுக்கு கேட்ட போது 'யூ நோ, ஐ ஆம் சிங்கிள்' என்றுன். எனக்கு இரத்தம் கொதித்தது. போய் கியூறியஸ்க்கு இறுக்கினேன். 'இரு மச்சானைக் கவனிக்கிறன்' என்று கியூறியஸ் கறுவிக் கொண்டான்.

பார்ட்டி சூடு பிடித்து நடனம் ஆரம்பித்ததும் வெள்ளைகள் ஆடிக் கொண்டிருந்த இடைவெளிக்குள் தன்னை செருகிக் கொண்டு ஆட ஆரம்பித்தான் சிகாமணி. அந்தப் பெண்களும் அப்பால் தள்ளிச் செல்லவும் இவன் விடுவதாயில்லை.

'வா, மச்சான்' என்று என்னை இழுத்துக் கொண்டு போன கியூறியஸ் அப்போது தான் சிகாமணியைக் கண்டது போல ஆங்கிலத்தில் 'என்ன, பெண்சாதியையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வரேலையா' என்றுன் சத்தமாக. அந்தப் பெண்கள் சிகாமணியை கேள்விக்குறியோடு பார்க்க சிகாமணி அசடையும் ஜொள்ளையும் ஒன்றுக நிறைந்து வழித்தான்.

ஊர்விட்டு ஊர் வந்து ஜொள்ளுக்கு அலேஞ்சாலே...

●

## புலிக்கொடியும்...

வாவென்பாய் பிறகு சபையிலே சாவீட்டு செலவையும் பொறு என்பாய். மொத்தத்திலே நான் ஒரு எஞ்சினியர் ஒரு போக்கிரி குடும்பத்தில ஒண்டுமில்லாமல் பெண் எடுத்ததாய் முடியும். நான் என்ன முடம் முண்டமோ அல்லது தெருச்சுற்றுறனே? உறுதியாய் சொல்லுறன் நான் வரஇயலாது. சாவீட்டுசெலவும்பொறுக்கேலாது"

" ஐயோ அந்த அநியாயத்தை பாருங்கோவன் வாயலே சொன்னதுக்கு இப்ப வெக்கப்படாமல் மறுப்பு சொல்லுறதை. அம்மாவின்ரை முழுப்பொறுப்பும் நாங்கள் எண்டுதானே ஒப்பந்தம். பெரிய வெள்ளையிலே மாமி என்னுடை பொறுப்பு எனக்கு ஊர்முழுக்க தம்பட்டம் அடிச்சுப்போட்டு இப்ப மட்டும் கழுத்தறுக்கிறதை இப்படி மானங்கெட்ட காசும் மனுசருக்கு தேவையே?"

"ஓ... நான் செய்யிறது கழுத்தறுப்பு மானம் கெட்டது. நீங்கள் செய்யிறது. வெல்பெயர் எடுத்துக் கொண்டு வேலே செய்யிறதுமுதல் எல்லாமும் மானமுள்ளது. போங்கோடி உப்புகெட்டவயளே"

"கடைசியாய் கேட்கிறன் இப்ப என்ரை அம்மாவின்ரை, உங்கடை மாமியின்ரை செத்தவீட்டுக்கு வரப்போறியளோ இல்லேயோ?"

"நானும் முடிவாய் சொல்லுறன்.... நான் கட்டேக்கை ஐம்பதும் கொம்மாவும் எண்டுதான் சொல்லி கட்டினனீங்கள். இப்ப என்னடாவெண்டால் கட்டி இரண்டு மாசத்துக்குள்ள மனுசி போட்டுது. மாசம் அறுநூறுக்கு துண்டு விழுகுது. அதாலே கொப்பரை, கொக்காவையை விட்டுட்டு இங்க வந்து இருக்க சொல்லு அல்லது கொப்பர் இருக்கிறவரை மாசம் மாசம் அவற்றை வெல்பெயரை இங்க கொண்டுவந்து தரச் சொல்லு. ஓமெண்டால் இப்ப வாரன் செத்தவீட்டுக்கு.

## கனடாவில் கலாசார..

எல்லாரும் கிளாசிலே பகிடி பண்ணுகினம். என்ன எண்டு தெரியலே என்னிலே குறைபாடு எண்டுகூட கதைக்கினம். நீங்களே சொல்லுங்க அம்மா, என்ன செய்யலாம்?"

தமது தாயாரிடம் சொல்லி அழுது வேதனைப்பட்ட தமிழ்மாணவிகள் பலர் உண்டு. பெற்றேர்களுக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை. இயலாத் தறுவாயில் தமது பெண்ணே அகப்பட்ட பையனை நேசிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும் போல் இருக்கிறதே குழம்பிக் கொண்டிருக்கின்றனர். சில பெற்றேர் கலியாணம் பேசி வைத்து அப்பையனையே BOY FRIEND ஆக்க நினைத்து தமது பதினைந்து வயதுப் பெண் பிள்ளைகளின் படிப்பைப் பழாக்கிய நிகழ்வுகளும் உண்டு.

இங்கே அண்மையில் உயர் கல்லூரிகளிலே "கொண்டொம்" பாவனை பற்றிய அறிவுரைகளையும் அப்பொருளையும்பெற்றுக்கொண்ட சில தமிழ் மாணவ மாணவிகள் அதனை வீட்டுக்கு கொண்டுவந்த போது சில பெற்றேர்கள் நடந்து கொண்டுமுறை விசனிக்கத்தக்கது. இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ் பெற்றேர்கள் சூழ்நிலை பற்றி சற்று நிதானமாக சிந்தித்து நடந்து கொள்ள வேண்டும். சில விஷயங்கள் எமது கலாச்சாரத்தில் TABOO ஆக இருக்கலாம். ஆனால் அலாஸகாவுககு போகும் போதும் வெறும் வேட்டியுடன்தான் தெருவில் நடப்பேன் (அதுவும் "சண்டிக்கட்டு" உடன்) என அடம் பிடிப்பது போலத்தான் இதுவும். பெற்றேர்களே! உங்கள் பிள்ளைகள் கலாச்சர வேறுபாட்டால் தாம் நடமாடும் சூழலில் படும் அவஸ்தைகளை உணர்ந்து செயற்படுங்கள். அதற்காக சிலபல விட்டுக்கொடுப்புகளை மனதாரச் செய்யுங்கள். பிள்ளைகளே! உங்கள் பெற்றேர் வளர்ந்த பழக்கப்பட்ட முறைகள் நீங்கள் அறியாத ஒன்று. அவர்கள் மாறுவதற்கு மாற்றத்தை உணருவதற்கு சற்று அவகாசம் கொடுங்கள். அவசரப்படாதீர்கள்!

# இறை வழிபாடும் குறைவான விளக்கமும்

**வீரகேசரி மூர்த்தி**

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ்" என்று அன்று தமிழ் அரசியல்வாதிகள் மேடைகளில் முழங்கிய போது அது உண்மையா பொய்யா என்பதை உணராமல் ஏனையோருடன் இணைந்து நாங்களும் கரகோஷம் செய்த நாட்களுமுண்டு. அதை இன்று சிந்தித்தால் சிரிப்பு வருகிறது. சூரியனிலிருந்து அக்கினிப் பிளம்பாக ஒரு கல் ஒடிந்து வீழ்ந்தது. காலப் போக்கில் மழை வீழ்ச்சியினாலும், காற்றினாலும் அக்கல்லின் கனல் தணிந்தது. இரசாயன மாற்றங்களினாலும் தூசிகள் படிந்ததிலும் கல்லின் மேற்ப்பரப்பில் மண் தோன்றியது. அதன் பின்னரே அது பூமியாகியது. ஆராய்ச்சியாளர்களின் உண்மை இதுவாக இருக்கையில் அரசியல்வாதிகளின் கூற்றுப்படி கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்-எங்கே எவ்விடத்தில் தமிழ் மொழி தோன்றியிருக்கும்?

கல் தோன்றி, மண் தோன்றி, புல், புழுக்கள், விருட்சங்கள், விலங்குகள் அனைத்தும் தோன்றிய பின்னர் தான் மனிதன் தோன்றினான். மனித இனம் தோன்றும் போதே மொழியும் இணைந்து பிறக்கவில்லை. விலங்குகளோடு விலங்குகளாய் கை சைககளினாலும், வெறும் ஒலி சமிக்ஞைகளினாலும் தான் மனித இனம் தகவல் பரிமாற்றம் செய்தது. மனிதனுக்கு அறிவாகிய ஞானமே இல்லாத அக்காலம் அஞ்ஞான காலமாகும். உயிரினங்கள் தோன்று முன்னரே காற்று, நீர் எனக் கூறப்படுபவை இருந்திருக்க வேண்டும், ஆனால் அவற்றுக்கு 'காற்று' 'நீர்' என்ற பெயர்கள் இருந்திருக்க முடியாது. அக்கால கட்டத்தில் கடவுள், சிவன், அல்லா, ஆண்டவன் என்ற பெயர்களும் இருந்திருக்காது.

மனித வரலாறு ஆற்றோரங்களில் தான் ஆரம்பமாகியது எனக் கூறப்படுகிறது. விலங்கினங்கள் இலை தடிகளினால் கூடுகள் அமைப்பதைப் பார்த்து மனிதர்களும் அவற்றினால் ஆற்றோரங்களில் குடிசைகள் அமைத்து வசித்து வந்தனர். மாரி காலத்தில் ஆறு பெருக்கெடுத்து பேரலைகள் குடிசைக்குள் புகுந்து அழித்த போதும், பெருங் காற்றடித்து குடிசைகளை சாய்த்து வீழ்த்திய போதும் மனிதனுக்குப் பயம் தோன்றியது. காற்றும் நீரும் கொல்லும் வேங்கையைப் போன்று கொடியன எனவுணர்ந்து அவற்றுக்கு அஞ்சி நடந்தான். எதிர்பாராத விதமாக கல்லோடு கல்லை உரஞ்சும்போது அதிலிருந்து பொறி பறந்து சருகளில் பற்றி தீயாக மாறியதும் ஆச்சரியப்பட்டான். அதை தொட்டுப் பார்த்து கையில் சூடு பட்டதும் அதுவும் ஆபத்தானது எனப் பயந்தான். காலப் போக்கில் காற்று, நீர், நெருப்பு ஆகியவற்றுக்கு வெகுமதிப்புக் கொடுத்து அஞ்சி அடக்க ஒடுக்கமாக நடந்தான். ஈற்றில் பயமானது பக்தியாக மாறியதும் அவற்றை வழிபடத்தலைப்பட்டான்.

பல் நூற்றாண்டுகளின் பின் படிபடியாக ஞானம் வளரப் பெற்று மெய்ஞான யுகத்தை அடைந்தான். அப்போது காற்று, நீர், நெருப்பு ஆகியவற்றுக்கு மூலகாரணம் சூரியனே என உணர்ந்து அதனை வழிபடத் தலைப்பட்டான். அதற்கும் பல்லாண்டுகளின் பின்னரே மொழி தோன்றவில்லை. முதலில் மனிதன் கற்களிலும், களி மண்ணினால் செய்யப்பட்ட பாத்திரங்களிலும் ஓவியங்களை அதாவது குருவிகள், மிருகங்கள் ஆகியவற்றை வரைந்தான். சூரியனைக் கீறி அதன் வட்டத்தினுள் மனித முகத்தைப் போன்று கண், மூக்கு, காலப் போக்கில் கற்பனை வளமும், அறிவும் வளர எழுத்துக்களை கண்டறிந்தான். அதன் பின்னரே கடவுள் என்ற வார்த்தையே உருவாகியது. உருவமற்ற சக்தி வடிவாகிய இறைவன் முதலில் இவ்வுலகையும், உயிரினங்களையும் உருவாக்கினான். ஆனால் அந்த இறைவனுக்கு மனிதன் மொழியினையும், எழுத்தையும் கண்டறிந்த பின் தனது கற்பனைக்கு ஏற்ப உருவங்களையும், கட்டுக் கதைகளையும் படைத்தான்.

மனித முக வடிவிலிருந்த சூரியனுக்கு கை, கால், உடம்புகளையும் வரைந்து அது தான் கடவுள் என்றான், கடவுள் மனிதனிலும் பார்க்க கூடிய சக்திவாய்ந்தவர் என்பதை உணர்ந்து மனித உருவிலிருந்து மாறுபட்ட தோற்றமாக நான்கு கரங்களையும், நெற்றிக்கண்ணையும் வரைந்து அவர் தான் சிவன் என்றான். நான்கு கரங்களுடன் ஒரு பெண்ணைக் கீறி உமாதேவி எனப் பெயரிட்டு சிவனது மனைவி ஆக்கினான். ஆனை முகத்துடனும் மனித உடலுடனும் கூடிய உருவத்தைக் கீறி விநாயகர் என்றான். ஆறுமுகமும் பன்னிரு கரங்களும் கொண்ட உருவத்தைக் கீறி முருகன் என்றும், இருவரும் சிவனின் பிள்ளைகள் என்றும் கதை கட்டினான். இதில் விந்தை என்னவெனில் சிவனும் உமாதேவியும் போகம் பண்ணி இவர்களை பிள்ளைகளாகப் பெற்றெடுக்கவில்லையாம். உண்ணாமுலை உமையாள் என வர்ணிக்கப்படும் உமாதேவியாரின் முலையிலிருந்து எவருமே பால் குடிக்கவில்லையாம், பிள்ளையை பெற்றிருந்தால் தானே முலையில் பால் சுரக்கும். அப்படியிருக்க யாரோ பெற்ற பிள்ளையான திருஞான சம்பந்தருக்கு உமாதேவியார் தனது

முலேயிலிருந்த பாலே கிண்ணத்தில் கறந்தெடுத்து ஊட்டினுர் எனவும் கதை படைத்தார்கள். இதை உண்மைக்கதையென இன்றுவரை நம்மவர்கள் நம்பிக் கொண்டிருப்பது பகுத்தறிவுக்கு ஒக்குமா?

விநாயகனே வெவ்வினேயை வேறறுக்க வல்லான். வேலுண்டு வினே தீர்க்க, மயிலுண்டு எமைக் காக்கவெனக் கூறி கருங்கல்லுச் சிலேகளே கை கூப்பித் தொழுத தமிழ் மக்களின் வெவ்வினேயை அல்ல உயிரையே அறுத்துவிட்டார்கள். சிங்கள வர்கள் அவர்களது குலத்தில் அதாவது வேடுவ குலத்தில் பெண் எடுத்ததனுல் 'கதிரகம தெய்யோ' எனப் பெயர் பெற்ற கதிர்காமக் கந்தனும், அந்த வேடுவப் பெண்ணே இரண்டாந்தாரமாக அவருக்கு கூட்டிக் கொடுக்க உதவியதால், 'கண தெய்யோ' எனப் பெயர் பெற்ற விநாயகரும் அந்தப் பரம்பரைக்குத் தான் அனுக்கிரகங்கள் செய்கிருர்கள் போலிருக்கிறது.

'சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்ருெரு பழமொழி உண்டு. பிள்ளே இல்லாதவர்கள் கந்த சஷ்டியில் விரதமிருந்தால் அகப்பையான கருப்பையில் பிள்ளே வரும் என்பதுதான் அதன் அர்த்தம், ஆனுல் கந்த சஷ்டியின் கதாநாயகனை கந்தப் பெருமானுக்கு ஒன்றுக்கு இரண்டு மனேவியர்கள் இருந்தும் அவருக்கே பிள்ளேகள் இல்லே. அப்படி இருக்க கந்தப் பெருமானிடம் மகப்பேற்று வரம் வேண்டி விரதமிருப்பதால் ஆவதென்ன? பிள்ளேப்பேறு இல்லாதவர்கள் மாத்திரமல்ல பிள்ளே குட்டிகள் உள்ள ஆண் பெண்கள் கூட சந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கிருர்கள். ஏனென்று அவர்களுக்கே தெரியாது. ஆனுல் அவர்களுக்கு விரதமிருப்பதால் உடல் பருமனும், 'கொலஸ்ரரோலும்' குறையும் என்பது உண்மை.

காலேயில் குளித்து கடவுளே நினேந்து ஐம்புலன்களேயும் அடக்கி ஆழ்நிலேத் தியானம் செய்வதுதான் உண்மையான விரதம், ஆனுல் காலேயில் சாப்பிடாமல் இருப்பதும், பகல் சைவச் சாப்பாடு சாப்பிடுவதும் தான் விரதம் என்பது நம்மவரது இன்றைய கருத்து. அத்துடன் கந்த சஷ்டிவிரதம் அனுஷ்டிக்கும் போதே ஊரில் யாரிடமாவது கிடாய் விற்க நிற்குதோ என விசாரிப்பவர்களும் உண்டு. விரதம் முடிந்து மறுநாளே கிடாய் வெட்டி பங்கு போட்டு ஆக்கிச் சாப்பிடுவார்கள். கடவுளேப் பற்றி சிந்திக்காமல் சாப்பாட்டை பற்றியே சிந்திக்கும் இவர்களுக்கு ஏன் விரதம்? நம்மில் பலர் உயிர் வாழ்வதற்காக எதையாவது சாப்பிடுகிருர்கள். ஆனுல் மேலே கூறப்பட்ட சிலர் வாய்க் கொழுப்பாக சாப்பிடுவதற்காக உயிர் வாழ்பவர்கள். நான் முப்பது வருடங்களாக தொடர்ந்து கந்த சஷ்டி விரதம் பிடிக்கிறன் என்று பெருமையுடன் கூறிக் கொள்பவர்களுமுண்டு.

மின் விளக்கை எரியச் செய்யவும், இயந்திரங்களே ஓடச் செய்யவும் மின்சக்தி காரணமாக இருப்பதுபோன்று இவ்வுலகத்தின் இயக்கத்துக்கு இன்றியமையாத சக்தியாக விளங்குவது தான் இறைசக்தி, உருவமற்ற இச்சக்தியை நாம் உணர முடியுமே தவிர கண்ணினுல் காணமுடியாது. ஒருவன் பிறந்தால்தான் அவனுக்கு உருவம் இருக்க முடியும். பிறப்பவன் என்ருே ஒருநாள் இறப்பது நிச்சயம், ஆதி அந்தம் இல்லாத இறைவன் இறப்பு, பிறப்பு ஆகிய இரண்டுக்கும் அப்பாற்பட்டவன். எனவே பிறப்பு இல்லாத இறைவனுக்கு உருவமே இருக்க முடியாது. இதனுல் தான், "அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்ருய் பிரமமாய் நின்ற சோதி பிளம்பதோர் மேனியாகி... ..." எனவும் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" எனவும் தேவாரத்தில் பாடி வைத்தனர் சமயகுரவர்.

உண்மை இதுவாக இருக்கையில் ஓவியர்கள் சாமிப் படங்களே வரைந்து பல்லாயிரம் பிரதிகள் எடுத்து விற்கிருர்கள், சிற்பிகள் அநேக சிலேகளே செதுக்கி விற்கின்ருர்கள். பண்டாரம் பூமாலேகளே தொடுத்து விற்கின்ருன். அந்தணர் அர்த்தமே புரியாத அந்நிய பாசையான சமஸ்கிருத மந்திரங்களே மனப்பாடம் செய்து வைத்து திரும்பத் திரும்ப அதையே உச்சரித்து அர்ச்சனே செய்கின்றனர். இதெல்லாம் எதற்காக? அநியாயம் செய்த ஆன்மாக்கள் இவற்றினுல் ஆன்ம ஈடேற்றம் பெறட்டும் என்ற பெருநோக்கத்திற்காகவா? – இல்லவே இல்லே எல்லாம் தன் தன் வயிற்றுப்பாட்டுக்கான வியாபாரம் தான்.

"தனி இறைச்சி கிலோ– பத்து டாலர். முள்ளுடன் கூடிய இறைச்சி கிலோ – ஆறு டாலர் ஈரல் கிலோ–பதினேந்து டாலர்".

"கழுவி முடிவெட்ட பதினேந்து டாலர், கழுவாமல் வெட்ட–ப த்து டாலர். 'சயிட் கட்'டும் 'சேவும்'–ஐந்து டாலர்.

"சகஸ்ரநாம அர்ச்சனே –50 டாலர். பிரசாதத்துடன் கூடிய அர்ச்சனே– 20 டாலர். சாதாரண அர்ச்சனே 10 டாலர்.

இவை எல்லாம் என்னவென்று கேட்கிறீர்களா? – வெறும் வியாபாரப் பட்டியல்கள், இறைச்சியை தின்றவன் பலவானுகின்ருன். முடிவெட்டி யவன் அழகனுகின்ருன். ஆனுல் அர்ச்சனே செய்வன் பகவான் ஆகின்றனு? – இல்லே ஏமாளியாகி கைப்பணத்தையும், காலத்தையும் இழக்கின்ருன். அதே வேளேயில் அவனே ஏமாளியாக்கி அந்தணன் பணத்தை சுருட்டிக் கொண்டு சுகபோக வாழ்வு வாழ்கின்ருன்.

ஆண்டவன் அடியார் களாகிய உங்களிடமிருந்து அர்ச்சனேப் பொருட்கள் எதையுமே எதிர்பார்க்கவில்லே. கள்ளங் கபடமற்ற தூய்மையான

**32ம் பக்கம் பார்க்க..**

**எங்கள் வாடிக்கையாளர்களுக்கு**
**மனம் நிறைந்த**
**பொங்கல் வாழ்த்துக்கள்**

★ பால், பழங்கள்,
உடன் மரக்கறிகள்,
இறைச்சி மீன் வகைகள்
★ கனடிய உணவுப் பொருட்கள்
★ Frozen seafood

*அனைத்தும் மலிவு விலையில்....*

# A.R.K MARKET

## ஏ.ஆர்.கே மார்க்கட்

31-35 ST.DENNIS DR
(DON MILLS/EGLINTON)

**(416) 421 3429**

மூலப் பொருட்கள் உண்டா? எனவே இனங்களுக்கிடையேயான பிரச்சனைகள் பலமுள்ள சக்திகளால் உலகம் பூராவும் தங்களால் நுழைய முடிந்த இடங்களில் தூண்டி விடப் பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இலங்கையிலும் சிங்கள முஸ்லீம் தமிழ் மக்களுக்கிடையேயிருந்து வந்த முரண்பாடுகளை கூர்மையடைந்த போது எல்லா இனங்களுக்கும் தேசிய வெறி பொதுக கருத்தாக்கியது. சரியான தத்துவ அடிப்படையிலான இடதுசாரிகளின் வேலை இனங்களுக்கிடையேயான ஐக்கியத்தை வளர்க்க உதவும். அதே வேளை இடதுசாரிகளின் வளர்ச்சி ஒரு சம நிலையைத் தோற்றுவிப்பதுடன் தேசிய இன வெறிக்கான மாற்றீடாகவிருக்கும். இவைகள் நடைமுறைக்குச் சாத்தியமில்லையெனக் கருதுவோர் அழிவின் விழிம்புக்கு மக்களை இட்டுச் செல்வார்கள் இறுதியில் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் புதிய முகமூடிகளுடன் வெளியே வருவர். தெற்கில் ஜே.வீ.பீ யின் வளர்ச்சி காரணமாகப் போலி இடதுசாரித்துவம் பிரதான பாகத்தைவகிப்பதனுல் பிற்போக்கு தனமான அரசுக்கு இது ஒரு வகையில் சாதகமான அம்சமாகவிருக்கிறது.

தமிழ் இயக்கங்களுள் பலவும் 1983ம் ஆண்டின் பின் இடதுசாரிகளின் வேலையை தாங்களே எடுத்துக் கொண்டனர். பெரிய இயக்கங்களான அடையாளம் காணப்பட்ட பலவும் இடதுசாரிக் கருத்துக்களைத் தாங்கிப் பத்திரிகைகளை விட்டன. ஆனுல் யாழ்ப்பாணத்தில் இடதுசாரிகளாகவிருந்த விஜயானந்தன், அண்ணுமலை ஆகிய இருவரைச் சுட்டுக் கொன்றன. இத்தகைய சம்பவங்களால் ஏனைய இடதுசாரிகளாக வேலைசெய்தவர்கள் எல்லாம் பாதுகாப்பின் நிமித்தம் புலம்பெயர்ந்தனர். இடதுசாரிகள் அப்புறப்படுத்தப்பட்டதும் தேசிய இனப் போராட்டம் அதிகளவில் தேசிய வெறியை வளர்த்தது.

நெல்லியடியைச் சேர்ந்த விசுவானந்தத்தேவன் என்ற பொறியியலாளர் (சூடுகுகூ) பாக்கு நீரிணையில் நீரில் அமிழ்ந்தி மரணமானுர். இது சக இயக்கங்களினுல் நடத்தப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. 1967லிருந்து பல வருடங்களாக இவருடன் அரசியல் பற்றி விவாதிக்கக் கிடைத்தது. ஆனுல் அவர் என்று தமிழ் தேசியம் என்ற வட்டத்துள் சென்ருரோ அதுவே அவருக்கு இறுதியாகவும் அமைந்தது. தேசிய வாதத்தின் செயற்பாடுகளின் தன்மையை இடதுசாரிகள் இதிலிருந்தாவது படித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து இன்னெரு முக்கிய விடயம் பற்றிய விஞவுக்கு விடை காண முடியாமலுள்ளது. என்னவெனில் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தலைமைகள் கம்யூனிஸம் வந்தால் சர்வாதிகாரம் வந்துவிடும் ஜனநாயக சுதந்திரங்களை மக்கள் இழக்க வேண்டிவரும் கோவில்களை இடித்து மக்கள் இழக்க வேண்டிவரும் கோவில்களை இடித்து விடுங்கள். இன்னும் ஒருபடி கீழிறங்கி "மனைவிமார் கூடப் பொது உடமைதான்" எனப் பிரச்சாரித்துத் தமிழ் மக்களை இடதுசாரிகள் பற்றிக் கிலி கொள்ள வைத்தார்கள் அந்த நேரத்தில் ரஷ்யாவில் ஸ்ராலின் பற்றிய கதைகள், இரும்புத்திரை நாடென்ற அறிவிப்புக்கள் மக்களை ஓரளவு நம்பச் செய்திருக்க முடியும். ஆனுல் இன்று நடப்பதென்ன? இன்று நடப்பதை எப்படி ஏற்றுக் கொள்கிருர்கள்.

இன்று கம்யூனிச வாதிகளை விடவும்தேசிய இனவாதிகள்வெறி பிடித்தவர்கள், மனித நேயமற்றவர்கள் தத்துவ வழிகாட்டலில்லாக் காட்டுமிராண்டிச் செயற்பாடுகளைக் கொண்டவர்கள் ஜனநாயக சுதந்திரங்களின் எதிரிகள் என இப்படியாக அடுக்கிக் கொண்டே போகக் கூடிய குற்றச்சாட்டுக்கள் எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர் என்பதை நிருபித்து விட்டார்கள். இவ்விடத்தில் நாம் உண்மைகளை உண்மையான படி விமர்சனத்துக்குட் படுத்துவதா அல்லது இன்னமும் தேசிய இன எழுச்சி பற்றிய ஆழ்ந்த கருதுகோள் காரணமாக எல்லா விமர்சனங்களையும் ஒதுக்கி விட்டு தேசிய இன விடுதலைக்காக மனிதகுலம் தாம் விரும்பிய எல்லா வித அரசியல் நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என உலகம் பூராவும் பிரகடனப்படுத்துவதா? இடதுசாரிகள் தேசிய இன விடுதலை வாதிகள் நிற விடுதலை வாதிகள் என எத்தகைய விடுதலைப் போரிலும் மனித குலம் பாரம்பரியமாகப் பேணிப் பாதுகாத்துவரும் நீதி நெறிமுறைகள் மிகக் கவனமாகப் பின் பற்றப்படல் வேண்டும்.

சர்வதேச இடதுசாரித்துவம் தவறுகள் இழைத்தபோது முதலாளித்துவ வாதிகளை விட இடதுசாரிகளே அத்தகைய தவறுகளை அம்பலப்படுத்தி விமர்சனத்துக்கு உட்படுத்தினுர்கள். அது போன்றே தேசிய இன விடுதலைப் போராட்டங்களின் தவருன போக்கு எல்லாவற்றையும் அச்சமின்றி விமர்சனத்துக்குட்படுத்த வேண்டியது எல்லா இடதுசாரி, இடது ஆதரவாளர்களதும் வேலையாகும்.

இந்த வகையில் தமிழ் ஈழ தேசிய விடுதலையின் கறை படிந்த அம்சங்கள் சகலவும் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டு நெறிப்படுத்தப்பட வேண்டும். இயக்களுக்குள் சேர்ந்து அவற்றின் இடது சாரித்துவத்தின் போலித்தன்மைகளில் கேள்வி எழுப்பிய பல இளைஞர்கள் உயிர் தப்பி இன்று வெளி நாடுகளில் வாழ்ந்துகுறிப்பிடக்கூடிய தரமான சஞ்சிகைகள் மூலம் தமது கருத்துக்களை முன் வைக்கிருர்கள். ஆனுல் முற்று முழுதான" மாக்ஸிய தத்துவ ஒப்புக் கொடுப்பு" அல்ல இன்றுள்ள தேவை. அத்தகைய கட்டுரைகள் ஆய்வுகளுக்குத்

தேவையாக இருக்கின்றபோதும் வெளி நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து தமது காலே ஊன்ற முன் தத்துவ ரீதியாக வழி நடத்த முற்படுவது எமது இனம் பற்றிய கணிப்பீட்டை மாற்றிவிடும்.

இன்றுள்ள தேவை புலம் பெயர்ந்து வெளி நாடுகளுக்கு வந்த தமிழர் மத்தியில் ஓர் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து தலாகும். இது ஒரு முக்கியமானதும் கூட ஏனெனில் ஆங்கிலேயேரிடம் சுதந்திரமடைந்தபின் லண்டனுக்குப் படையெடுத்து வந்த "அந்தஸ்து" மிக்க தமிழர்கள் தான் இலங்கை அரசியலில் புகுந்து விளையாடி விபரீதங்களே உண்டாக்கினுர்கள். இவர்களுக்குப் பக்க பலமாகக் கொழும்பு வாழ் தமிழர் இருந்தனர். இதே நடைமுறை தொடரக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உண்டு. ஆகவே வெளி நாட்டிலுள்ள தமிழர்கள் மத்தியில் ஒரு அறிவியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பி அவர்கள் சக்தியை எமது மண்ணின் தேவைக்கேற்ப உதவுவதற்காக இங்கு இடதுசாரிகள் அல்லது ஆதரவாளர்கள் தான் நிறைய வேலே செய்ய வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்தில் கா.சிவதம்பி, முருகையன், புதுவை இரத்தினதுரை ஆகிய இலக்கியத்துறை இடதுசாரிகள் புலிகளுடன் இணைந்திருக்கின்றனர். ஆனுல் இவர்களுடைய தற்போதைய இயக்கங்கள் தேசியவாதத்தைத் தூக்கிப் பிடிப்பது போல் இருக்கின்றன. அதனுல் இவர்கள் இப்போதும் இடதுசாரிகளா என்பது விமர்சனத்துக்குரியது. சிவத்தம்பி அவர்களுடைய "யாழ்ப்பாணச் சமுகத்தை விளங்கிக் கொள்ளல்" அவருடைய இடதுசாரி அனுபவத்தின் பிரதிபலிப்பே எனலாம்.

இறுதியாக, தமிழ் மண்ணுக்கு இடதுசாரிகளின் பிரசன்னம் மீண்டும், மீண்டும் தேவையென்பதுடன் தற்போது எல்லாச் செயற்பாடுகளும் ஸ்தம்பித்துள்ளன. எனலாம். இவ்வத்தியாயம் முற்றும் அடுத்ததாக "ஈழப்பிரிவினையில் இந்தியாவின் பங்கு" எனும் அத்தியாயம் தொடரும்.

ஒரு சிறுகதை

1994 செப்ரம்பர் காலப்பகுதியில் இலங்கைச் ஜனுதிபதி தேர்தலும் அதைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற விருப்பதனுல் சமகால அரசியல் விவகாரங்கள் ... ....... பற்றி எழுத வேண்டியுள்ளது. அதனுல் ஒன்று விட்ட ஒரு வாரம் இத் தொடரை தொடரும் எண்ணமுண்டு. அபிப்பிராயங்களே அறிய ஆவல்

# விமானப்படைக்கு ஹெலிகொப்டர்கள்

விமானப்படை தற்போது சோவியத் தயாரிப்பு போக்குவரத்து ஹெலிகொப்டர்களே வாங்க உள்ளது. மி 17 ரக ஹெலிகொப்டர்களில் மூன்று வாங்கப்பட உள்ளன. ஏற்கனவே துருப்புகளேயும் ஆயுதங்களேயும் கொண்டு செல்ல விமானப்படையிடம் மூன்று இதே ரக ஹெலிகொப்டர்கள் உள்ளன. இவை ஏற்கனவே 45 லட்சம் டொலர்களுக்கு வாங்கப்பட்டன. தற்போது வாங்கப்பட இருப்பவை குறைந்த விலேக்கு வாங்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுககு மன்னிப்பு

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கத் தயாராக இருப்பதாக புதிய இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிருர். லெப்டினனட் ஜெனரல் ஜெரி டிசில்வா இதுவரையும் வெளியேறியுள்ள 12 ஆயிரம் இராணுவத்தினருக்கும் பொதுமன்னிப்பு அளிக்க தாம் தயார் ஏனறு கூறியுள்ளார். இந்த பன்னிரண்டாயிரம் பேரில் பெரும்பாலானவர்கள் சென்ற வருடம் தப்பியோடியவர்கள் ஆவர்.

# விமானப்படையில் மாற்றங்கள்

விமானப்படையின் அதிகார பீடத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பிரதம இராணுவ அதிகாரியான ஒலிவர் ரணசிங்க விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்படுகிருர். எயர் வைஸ் மார்ஷல் தரத்திலிருந்து இவர் எயர் மார்ஷல் தரத்திற்கு பதவி உயர்வும் பெறுகிருர்.

தற்போதைய தளபதி குணவர்த்தன பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ஓய்வு பெறுகிருர். விமானப்படை செயற்பாடுகளுக்கான இயக்குனர் அன்சலேம் பீரிஸ் தற்போது புதிய பிரதம இராணுவ அதிகாரியாக நியமனம் பெறுகிருர். அவரது இடத்திற்கு தற்போது வடக்கிற்கு பொறுப்பாக உள்ள ஜெயலத் வீரக்கொடி நியமனம் பெறுகிருர்.

தற்போது விமானப படையில் 14 ஆயிரம் பேர் உள்ளனர்.

# பால் இறக்குமதி பற்றி விசாரணை

கதிரியக்க பாதிப்புள்ள பால் மாவை இறக்குமதி செய்தது தொடர்பாக தற்போது விசாரிப்பதற்காக விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் சுங்கப்பகுதி இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவில் கதிரியக்கம் காணப்பட்டதால் அதை தடுத்து நிறுத்தியிருந்தது. தற்போது இந்த இறக்குமதி விடயங்களில் உள்ள விதிமுறைகள், பரிசோதனைகள், பொதுமக்களின் பாவனைக்காக பால் பொருட்களே விற்பனைக்கு விடும் போது செய்ய வேண்டிய வழிவகைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கலாநிதி சிறிவர்த்தன கேட்கப்பட்டுள்ளார். இவர் முன்னுள் விலங்கு உற்பத்திக்கான இயக்குனராவர்.

## இறைவழிபாடும்...

அன்பினையே எதிர்பார்ப்பவர்கள் அந்தணர்களே.

"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமது லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீரமைய வாட்டி
பூசனை ஈசனுர்க்கு போற்று விக்காட்டினேமே."

இப்பாடலில் இறைவன் என்ருல் என்ன, வழிபாடு என்ருல் என்ன, பூசனைக்கு வேண்டிய பொருட்கள் என்னவென தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது உடம்பே கோயில், மனமே சிவலிங்கம் எமது மனத்தை ஆண்டவனுக்கு அடிமையாக்கி, கள்ளங் கபடமற்ற சிந்தையுடன், உண்மையான அன்பினையே பாலாகவும், நெய்யாகவும் கொண்டு அபிஷேகம் செய்து ஆண்டவனை பூஜிப்பதே உண்மையான இறை வணக்கம் என்பதை இப்பாடல் எவ்வளவு தெட்டத் தெளிவாகக் கூறுகிறது. இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டும் நாம் கண்ணிருந்தும் குருடர்கள் போல் நடந்து கொள்ளலாமா?

அந்தணர்கள் எவ்வளவு அவாவும், வாஞ்சையும் கொண்டவர்கள் என்பதை கம்பராமயாண சுந்தர காண்டத்தின் காட்சிப் படலத்தில உள்ள பின்வரும் பாடல் துல்லியமாக படம் பிடித்துக் காட்டுகிறது.

பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள்
அருத்தி வேதியருக்கு ஆன் குலமீய்ந்து அவன்
கருத்தி ஞசை கரையின்மை கண்டு இறை
சிரித்த செய்கை நினைந்தழும் செய்கையாள்.

தனது செல்வமாகிய முடியாட்சியை துறந்து இராம பிரான் வனவாசம் செய்யப் புகுமுன் தன்னிடத்திலிருந்த ஏனைய செல்வங்களை மக்களுக்கு அன்பளிப்புச் செய்யும் போது தானம் பெறுவதில் வாஞ்சையுடைய அந்தணன் ஒருவன் வந்து தனக்கும் ஏதாவது கொடுக்குமாறு வேண்டினன். தன்னிடம் எஞ்சியிருந்த பெரும் பசுக் கூட்டங்களையே இராமபிரான் அந்தணருக்கு கொடுத்தாரம் அந்தணர் அவ்வளவோடு திருப்திப் படாமல் இன்னும் ஏதாவது தரமாட்டாரா என்றுஅவாவுற்று நின்ற போது அவனைப் பார்த்து அவனது அளவு கடந்த வாஞ்சையைப் பார்த்து இரமர் சிரித்த சம்பவத்தை சீதை சிறையில் இருக்கும் போது நினைத்து அழுதாளாம்.

நாம் நம்முற்பிறப்பில் செய்த கர்மவினைகளுக்கேற்ப நமக்கு பிறவியையும், விதி என்று சொல்லப்படுகின்ற வாழ்க்கை முறை, பெயர், நட்சத்திரம் எல்லாவற்றையும் கணித்து படைத்த கடவுளுக்கு புரோக்கர்களான புரோகிதர்கள் நமது பெயரையும், நட்சத்திரத்தையம் சொல்லித் தான் தெரிய வேண்டுமா? அதற்கு புரோக்கர் பீஸ்—இல்லை தட்டிச் சுத்துவதற்கான தட்சனை வேறு கொடுக்க வேண்டுமா? பாத்திரமறிந்து பிச்சை கொடு என்பார்கள் நீங்கள் செய்த கர்மவினை நீங்கப் பெறவேணடுமாயின ஒரு வேளை உணவுக்கே வசதியற்றுத் தவிப்போரை தேடி உணவளியுங்கள். ஏழைகளுக்கு உடை முதலியவற்றை வழங்கி உங்களால் இயன்ற பிற உதவிகளையும் செய்யுங்கள். இத்தகைய தர்மமே உங்கள் தலையைக் காக்கும். அதைவிடுத்து ஆண்டவனுக்கு கொடுப்பதாக நினைத்துக்கொண்டு அந்தணருக்கு கொடுத்து ஏமாருதீர்கள்.

சிற்பியானவன் கற்பாறையின் மேல் ஏறியிருந்து உளி கொண்டு குத்திச் செதுக்கும் போது ஒரு துளி கண்ணீரோ, இரத்தமோ சொட்டாத— மொத்தத்தில் தனக்கேற்பட்ட வேதனை எதையுமே உணரும் உணர்வற்ற— வெறும் சடப்பொருளான கற்சிலைக்கு முன் நின்று காதைப் பிடித்து நீங்கள் தோப்புக் கரணம் போட்டாலும், கதறி அழுதாலும் காசைக் கொட்டி அபிஷேகம் செய்தாலும் பயன் என்ன? சிலை சிலை தான் அதற்கு சிந்திக்கும் ஆற்றலோ, உங்களுக்காக இரங்கி அனுக்கிரகம் செய்யும் சக்தியோ அல்லது அதற்கு உருவேற்றும் சக்தியோ அந்தணருக்கும் இல்லை. சிந்தனு சக்தி படைத்த சிருஷ்டிகளே சிந்தித்துப் பாருங்கள். ஏமாளிகள் விழிப்படையும் வரை ஏமாற்றும் கும்பல்கள் சுரண்டிக் கொண்டே இருக்கும். எம்மை மாத்திரமா சுரண்டுகிருர்கள்? மதத்தின் பேரால் அந்நிய நாட்டு அரசாங்கங்களையும் அல்லவா சுரண்டுகிருர்கள் இந்து மதத்தின் பேரால் பொலிஸ் நிலையங்களுக்கும், நீதி மன்றங்களுக்கும் போய்க் கொண்டிருந்தால் இந்து மதத்தினை வேற்று மதத்தினர் எள்ளி நகையாடமாட்டார்களா? இதற்கு நாம் இடமளிக்கலாமா?

ஜடமான பாவைப் பிள்ளையை உண்மையான குழந்தையெனக் கருதி குளிப்பாட்டி, ஆடை அணிவித்து, பாலூட்டு குழந்தைகளின் அறியாமைக் கண்டு எள்ளி நகையாடும் அறிவாளிகளே! ஜடமான கற்சிலைகளையும், ஓவியங்களையும் கடவுளெனப் போற்றி கரணமிடும் உங்களின் அறியாமையைக் கண்டு ஞானிகள் சிரிப்பது ஞாயமாகத் தெரியவில்லையா? உங்களுக்கு உங்கள் ஆயுட்காலம் வீணே அழிந்து விடுவதற்கிடையில் உண்மையான இறைவனை உணர்ந்து தியானம் செய்து உயர்ச்சி அடையுங்கள்.

சிந்தித்து பாருங்கள்— உங்களுக்கே சிரிப்பு வரும் அந்தச் சிரிப்பினை பரம்பொருளை உணர்ந்த பேரின்பச் சிரிப்பாக மாற்றுங்கள்.

# புலுடா! புலுடா!

## என்னவோ சேதி
## மனம் பேச எண்ணும் பேசாது

### அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூரியஸ் ஜி

கியூரியஸ் ஜி ஒரு தீர்க்கதரிசியோ? இல்லே, கருமேட்டுக் கருவாயனோ? என்னவோ சொன்னால் ஏதாவது நடந்து விடுகிறது என்றேனே.. மறுபிரசுரம் செய்து மூலம் குறிப்பிடாமல் வெளியிடுகின்ற 'அனுபவம் வாய்ந்த பத்திரிகை யாளரால்' நடத்தப்படுகின்ற 'தமிழ் கூறு நல்லுலகின் தமிழ் பத்திரிகை' ஒன்று பற்றி குறிப்பிட்டேன். இம்முறை பார்த்தால் புலியூர் பாலு எழுதிய சோதிட பலன் புத்தகத்தை அப்படியே மறுபிரசுரம் செய்து விட்டு ஆஸ்தான சோதிடர் எழுதியது மாதிரி முடித்தாயிற்று. முன்பு அர்த்தமுள்ள இந்து மதம்.. மஞ்சரி என்ற பெயரே பொருத்தமானது தான். ரீடர்ஸ் டைஜஸ்ட் இப்படித் தான்.. வெவ்வேறு மூலங்களில் வந்ததை தொகுத்தும் சுருக்கியும் மாதம் ஒரு புத்தகம் வெளியிட்டது. அதைப் பார்த்து இந்தியாவில் கலைமகள் வெளியீட்டாளர்கள் 'மஞ்சரி'யை வெளியிட்டார்கள். இவர்களின் பெயரே அதைப் பார்த்த மறுபிரசுரம் தான். இதற்குள் உள் விடயங்கள் மட்டும் சொந்தமானதாகவா இருந்துவிடப் போகிறது?

முன்பு காவிய நாயகன் கிட்டு பற்றிய தொடர் இடையில் நின்றது. தமிழனின் கதையும் அப்படியே.. இப்போது மாத்தயா பற்றிய தொடரும் இப்படித் தான். குற்றுயிராய் இடையில் நின்று விடப் போகிறது.

★ ★ ★

முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது சம்பந்தமான ஆட்சேபக் கூட்டத்தில் பொதிகைக்கு இருந்த துணிச்சல் பரிமாணத்துக்கு இருக்கவில்லை என்றேன். இம்முறை பார்த்தால் பொதிகை மாவீரர் சிறப்பு மலர் வெளியிட்டிருக்கிறது, இலவசமாக. என்ன செய்ய? அள்ளிக் கட்டு, சபரி மலைக்கு, கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை.. சாமியே ஐயப்பா, சாமி சரணம் புலியே சரணம். இலக்கிய உலகிலும் ஒரு கல்வெட்டு அவசியம் தானே. தொடர்க திருப்பணி.

'கோவில் திறப்பதற்கு ஈடான திருப்பணியாக' பத்திரிகை வெளியிடுதலை ஒப்பிட்டு விமர்சிக்கும் ஒரு சஞ்சிகை பத்திரிகைகளுக்கு புத்திமதி சொல்கிறது. 'தமக்கு தமக்கு புகழும் பெருமையும் சேர்ப்பதை மட்டுமே குறிக்கோளாக கொள்வதை விடுத்து நமக்கும் நமது மொழிக்கும் நமது சமூகத்துக்கும் ஏன் முழு மானிடத்திற்கும் செழுமையும் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்' என்று சொல்கிறது. நல்லது. அதற்கு முன்மாதிரியாக தாங்களே இருக்கலாமே. He who can does, He who can't teaches. (முடிந்தவன் செய்கிறான், முடியாதவன் மற்றவர்களுக்கு படிப்பிக்கிறான்)

★ ★ ★

ஈழநாடு கனடா ஈழநாடாக வந்து கொஞ்ச நாள் நின்று போனது. பின்னர் தமிழ் ஈழநாடாக வந்தது. (இதுவரையும் சிங்கள ஈழநாடா வெளிவந்தது என்ற பலர் கேட்டார்கள்) இப்போது இரண்டுமே போய் வெறும் ஈழநாடு வருகிறது. வெளியே பார்த்தால் தமிழோசை போலவும் உள்ளே பார்த்தால் ஈழநாடு போலவும் இருக்கிறது. புதிய கிண்ணத்தில் பழைய இரசம்?

★ ★ ★

மாத்தயா விடயத்திலும் தனது குடும்பத்தினரைக் காப்பதற்காக தனது குற்றங்களை ஒத்துக் கொண்டு மரண தண்டனைக்கு மாத்தயா தயாராகக் கூடும் என்று எழுதியிருந்தேன். இப்போது வீடியோவில் அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது, தமிழர்களுக்கு காண்பிக்கப்படும், குடும்பத்தினர் பார்க்க அனுமதித்திருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. (எழிலோனின் கட்டுரை பார்க்க)

தாயகத்தில் சிவதாசன், எழிலோன் எழுதியது புலிகள் பலரால் கூட சிலாகிக்கப்பட்டதாம். குரல் வெளியே வராமல் யார் நசுக்கப்படுகிறார்களோ அவர்களுக்காக குரல் கொடுப்பது தாயகமே.

வீடியோவில் படம் பிடித்தால் மட்டும் உண்மையாகி விடாது. இந்த வீடியோ விவகாரம் பற்றி... வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தலைவர் அளித்த பேட்டியில்... ராஜீவ் காந்தி கொலை பற்றிக் கேட்ட போது தாங்கள் செய்யவில்லை என்று கூறி விட்டு கமெராவில் கண்வீச்சுக்கு அப்பால் நிற்கின்ற யாரிடமோ.. சரியா என்று கேட்பார். இதை என்ன என்பது? இதே மாதிரித் தான் மாத்தயாவும் வீடியோவில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறாராம். இந்தியாவுடன் சேர்ந்து சதி செய்ததாக சொல்லி விட்டு அங்காலே நிற்கின்ற பொட்டம்மானிடம் சரியா என்று கேட்பாரோ என்னவோ? Facts, lies and videotape!

★ ★ ★

சதி விடயங்களில் சமீபத்தில் லிபியாவிலும் ஈராக்கிலும் கடாபியையும் சதாமையும் கொல்ல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்




## அறு(சு)வை

பட்டதாக சில செய்திகள் வந்தன. இவற்றில் சில ஊகங்களாக இருக்கலாம். ஈராக்கில் சதி முயற்சியில் முக்கிய தலைவர்கள் குற்றம் சாட்டப்பட்டு சில தளபதிகளும் சுட்டுக் கொல்லப் பட்டதாக செய்தி. உலகுக்கு வழிகாட்டியவர்கள் நாம். (பாவம் யோகி.. வழியைக் காட்டி விட்டு வழி தெரியாமல் அலைகிறார்)

சதாம் சென்ற வண்டித் தொடர் பாதையில் ட்ராக்டர் ஒன்றில் குண்டு வெடித்தது. அதற்கு முன்னர் இரண்டு பொலிஸ் உடை அணிந்தவர்கள் காணப்பட்டி ருக்கிறார்கள். சதாம் செல்லவிருந்த அந்த இரகசியக் கூட்டம் பற்றிய விடயம் ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. இதனால் அவர்களில் பலர் விசாரிக்கப பட்டனர். சில முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சதாமைக் கொல்வதற்கு சதி செய்யும்படியும்தாம் புதிய அரசுக்கு ஒத்துழைப்பதாகவும் புஷ் காலத்திலிருந்தே அமெரிக்கா பகிரங்கமாக கூறி வருகிறது. சதாமுக்கோ இந்த பயத்தினால் அருகில் இருப்பவர்கள் மீதே சந்தேகம். உளவுத் துறைத் தலைவர் சதாமின் மகன். (ஈராக்கிய பொட்டம்மான்?) பொலிஸ் தலைவர் சதாமின் மைத்துனர் (மாத்தயா?). மைத்துனருக்கும் மகனுக்கும் இடையில் மோதல். இப்போது குண்டுவெடிப்பு. மைத்துனர் மீது விசாரணை.

ராறிக் அசிஸ் யுத்த காலத்தில் வெளிநாட்டமைச்சர். (பாலசிங்கம்?) அவர் மீதும் விசாரணை. மரண பயத்தில் வாழ்கின்ற தலைவர்களுக்கு முக்கியமாய் இருப்பது சந்தேகம். யாரையும் நம்ப மாட்டார்கள். உளவுத்துறை தலைவரான மகன் கூட மைத்துனருக்கு எதிராய் சதி செய்யும் நோக்குடன் குண்டுவெடிப்பு நாடகத்தை நடத்தியிருக்கக் கூடும்.

இவர்கள் பற்றிய விசாரணையில் வீடியோ எடுக்கப்பட்டதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. எதற்கும் அரபு கூறும் நல்லுலகத்தில் வெளிவரும் 'மஞ்சரி'களை பாருங்கள்.

★ ★ ★

பொட்டம்மான் இப்போது பிரபலமாகிறார். தலைவருக்கு பதிலாக விருது பெறுகிறார். பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார். கொஞ்ச நாள் செல்ல பொட்டம்மான் மக்களுடன் நெருக்கமாக... செல்வாக்கு கூடும். செல்வாக்கு தந்த சொகுசினால் பொட்டம்மான் கொஞ்சம் பந்தா காட்டுவார்... தலைவர் என்ன? நான் தானே எல்லாம் என்ற எண்ணமும் வரும். நான் இருப்பதால் தானே தலைவர் உயிர் தப்பியிருக்கிறார் என்ற நினைக்கத் தோன்றும். தலைவருக்கு சந்தேகம் வரும். பிறகென்ன? பொட்டம்மானைத் தட்டம்மான்.

இப்படி ஆடியடங்கும் வாழ்க்கையடா என்ற கிட்டு, மாத்தயாவும் அடக்கப்பட்டார்கள். வேறு பலர் மாவீரரானார்கள். வேறு சிலர் விலாசம் தெரியாமல் மறைந்தார்கள். (பானு?) இப்போது பொட்டம்மான்.. ஆனால் பொட்டம்மான் விடயத்தில் இது இலகுவாய் இருக்காது.

★ ★ ★

விடுதலைப் போராட்டத்தை தேசியத் தலைவர் பிரபாகரனால் அன்றி வேறு எவராலும் வெற்றியின் இலக்கை நோக்கி இட்டுச் செல்ல முடியாது என்று உலகத்தமிழரில் ஒருவர் விளாசியிருக்கிறார். ஈழநாட்டைப் பார்த்தால் உலகத்தமிழர்களின் தலைவர் அண்ணா, கருணாநிதி என்றது போய் பிரபாகரன் என்று வந்து விட்டது என்று ஒருவர் முழங்கியிருக்கிறார். பத்துக் கோடி தமிழர்கள் முப்பத்து மூன்று நாடுகளில் என்று கூட்டணி முன்பு சுத்தியது. முப்பது முக்கோடி தேவர்கள் என்பது இந்த தமிழர்களைத் தானோ என்னவோ? இந்த தேவர்களுக்கு எல்லாம் தலைவர் இவர். இவரது வாழ்வுக்காலத்திற்குள்ளேயே விடுதலையைக் காண முடியாவிட்டால் என்ன செய்வதாம்? அவர் இல்லாவிட்டால் தமிழினம் என்ன தற்கொலையா செய்யப் போகிறது? போகிற போக்கில் எதிரிகளிடமிருந்தல்ல, இவர் போன்றவர்களிடம் இருந்து தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் போலிருக்கிறது. ஆட்டைக் கடித்து மாத்தை(யாவை)க் கடித்து. இறுதியில் யாரையோ?

பத்துக் கோடி பேரைக் கொண்ட இனம் தன் தலைவிதியை ஒரு தனிமனிதனிடம் ஒப்படைத்து அவர் இல்லாவிட்டால் தங்களுக்கு மீட்சி இல்லை என்றால்... அந்த இனத்திற்கு வாழ்வதற்கு அருகதை இல்லை. முன்பு கூட்டணிக்கும் இப்படித் தான் சொன்னார்கள். என்ன நடந்தது? பத்துக் கோடி ஏன்? எண்பது கோடி சீனர்களுக்கே தலைவரான மாவோ காலமானவுடன் சீனா அழிந்து விட்டதா? நேரு குடும்பம் போன பின்னர் இந்தியா அழிந்து விட்டதா? பிரேமதாசா இறந்த பின்னர் யூ.என்.பி சிதறி விட்டதா?

ஐயன்மீர், Institutions live longer than the individuals. தனிமனிதர்களை விட அமைப்புகள் நீண்ட காலம் வாழும். தமிழன் தலைகுனிந்தும் வாழுவான். சோழன் இறந்த ஆயிரம் ஆண்டுகளின் பின்னரும் தமிழன் வாழ்கிறான். அழியவில்லை. போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று ஐந்து நூற்றாண்டுகளாக அன்னியர்கள் ஆண்ட போதும் தமிழன் அழிந்து போகவில்லை. அடங்கி வாழ்ந்தான். இப்போ மட்டும் ஒரு தனிமனிதன் இல்லாது போனால் இனம் அழிந்து விடும் என்கிறீர்களே? வெட்கமாயில்லை. திரும்பவும் சிங்கள இராணுவம் பிடித்துக் கொண்டால் இந்த தமிழர்கள் விழுந்தடித்துக் கொண்டு சிங்களம் படிப்பார்கள்.

★ ★ ★

எங்கள் விடுதலை எங்களை எந்த விதத்திலும் முன்னே கொண்டு செல்லவில்லை. புலிகளின் ஆதிக்கம் தொடங்கிய 83 திருநெல்வேலிக் குண்டுவெடிப்பின் பின்னர் நாங்கள் பின்னோக்கித் தான். இந்த திருநெல்வேலிக் குண்டுவெடிப்பு

நல்லதொரு குறியீடுதான். வீட்டுக்குள்ளால் மதில் போகின்றது போல இன்னொரு குறியீடும் உண்டு. குண்டு வைக்கப்பட்ட இடம் தபால் பெட்டியடி என்று அழைக்கப்படுவது. குண்டு வைத்தது தொலைபேசி கேபிள்களைப் பொருத்துவதற்காக தோண்டப்பட்ட கிடங்கில்.

முன்னூறு கோடி ரூபா செலவில் இலங்கையில் தொலைபேசி சேவையை நவீனமயப்படுத்துவதன் மூலம் உலகின் எப்பகுதிக்கும் உடனுக்குடன் தொடர்பு கொள்ள இந்த அபிவிருத்தித் திட்டம் வந்தது. வோக்கர்ஸ் நிறுவனம் நடத்திய இந்த திட்டத்தில் நூற்றுக்கணக்கானோருக்கு வேலை. . கிளறிக்கல் வேலை தான். அருகில் உள்ள தபால் பெட்டியில் தபால் போட்டால் வெளிநாட்டுக்கு போக கிழமைக்கணக்கில் செல்லும். தொலைபேசி தொடர்பினால் உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடியும். தெற்கு வளர்கிறது, வடக்கு தேய்கிறது என்றவர்கள் இந்த திட்டம் வடக்கையும் உள்ளடக்கியது என்பதை மறந்து போனார்கள்.

கல் தோண்டி மண் தோண்டிய இனத்திற்கு பொறுக்கவில்லை. குண்டு வெடித்தது. தொலைபேசி திட்டம் கைவிடப்பட்டது. தபால் பெட்டி இருக்கிறது. ஆங்கிலேயா காலத்தைப் போல யாழ்ப்பாணத்தில் போடும் தபால் கொழும்பு வர ஒரு மாதத்திற்கு மேலாகிறது. ஆக, முன்னேக்கிய அபிவிருத்தி திட்டம் போய் உடனுக்குடன் செய்திப் பரிவர்த்தனை போய் இப்போது குதிரை வண்டியில் தபால் வினியோகம் செய்த வேகத்தில் செய்திப் பரிவர்த்தனை.

வெளிநாட்டுக்கு செய்தி அனுப்புவதற்கு பதிலாக ஏஜன்சிக்காரர்கள் தமிழர்களையே பிடித்து அனுப்பி விட்டார்கள்.

★ ★ ★

யாழ்ப்பாணம் சுருட்டுவதில் தான் முன்னிற்குமே தவிர உழைப்பதில் அல்ல. இவ்வாறான ஒரு அபிவிருத்தித் திட்டம் வந்தால் யாழ்ப்பாணம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கும். வந்த வெளிநாட்டுப் பணமும் நல்ல முதலீடுகளில் பயன்பட்டிருக்கலாம். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது மனிதர்களும் பொருட்களும் செய்திகளும் வேகமாக செல்வதுதான். போக்குவரத்தும் தொலைத் தொடர்பும் தான் வளர்ச்சியின் உயிர்நாடிகள். யாழ்ப்பாணத் தோட்டங்களில் உருளைக் கிழங்கைக்கட்டிக் கொண்டு நாலாம் குறுக்குத் தெருவில் சந்தை விலை அறிய தபால் கந்தோருக்கு போய் போன் எடுக்க புக் பண்ணி காவல் நிற்பதற்கிடையில் கொழும்பில் விலை பல தடவை ஏறி இறங்கி விடும். கட்டி அனுப்புவதற்கிடையில் அழுகிப் போய் விடும் வெங்காயம். இங்கே போக்குவரத்து வேகமாய் இருப்பதற்காக அதிவேக விமானங்கள், அதிவேக புகையிரதங்கள்.. ஆங்கிலக் கால்வாய்க்கு கீழாக சுரங்கப் பாதை... (இதை நினைத்தால் தமிழனுக்கு தோன்றுவது அடே.. சீட்டுக்கு கீழ படுத்து லண்டனுக்கு போகலாம் என்பது தான்).. தொலைத்தொடர்பு வேகமாய் இருக்க செய்மதிகள்... உலகம் வளர்கிறது. நாங்கள்... யாழ்ப்பாணத்தில் பஸ் இல்லை. மாட்டு வண்டில் பிரயாணம்.. நோயாளிகளுக்கு அம்புலன்ஸ் மாட்டு வண்டில். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா போக பத்து நாள். ஐயாயிரம் ரூபா செலவு. தபால் போட்டால் கொழும்பு போக மாதக்கணக்கில். தொலைபேசி வயர்கள் அறுத்து போராட்டத்திற்கு பயன்படுத்தியாயிற்று.

வெள்ளைக்காரன் நீராவியில கப்பல் விடுறான், ரெயின் விடுறான்.. தமிழ் நாட்டில புட்டு அவிக்கிறான் நிலைமை தான்.

★ ★ ★

யாழ்ப்பாணத்திற்கும் தமிழினத்திற்கும் கூட்டணி முதல் இயக்கங்கள் வரை செய்ததை விட, துரோகிகள் என்று கூறப்பட்ட பொன்னம்பலமும் துரையப்பாவும் செய்தது தான் அதிகம். அவர்கள் சுருட்டியிருக்கலாம். ஆனால் மக்கள் பெரிதும் பயன்பட்டது உண்மை. காங்கேசன் சீமெந்து, பரந்தன் இரசாயனம், வாழைச்சேனை காகிதம் என்று கொண்டு வந்து சேர்த்தது பொன்னம்பலம். ஆயிரக்கணக்கில் யாழ்ப்பாணம் வேலை செய்தது. பொருளாதாரம் வளர்ந்தது.

யாழ்ப்பாண நகரத்தை கட்டியெழுப்பியது துரையப்பா.. நவீனசந்தை, ஸ்டேடியம், திறந்தவெளி அரங்கு, நூலகம் என்று பல.. கூட்டணியும் இயக்கங்களும் பொருளாதார மேம்பாட்டிற்கு என்ன செய்தன என்றால்... ஆளுக்கொரு ஏ.கே, வீட்டுக்கொரு மாவீரன், தெருவுக்கொரு உளவாளி.. ஊருக்கொரு சிற்றூரவை..

★ ★ ★

நான் இப்போது நினைத்தாலும் பரிதாபப்படுவது இந்த ரோட்டுக்கரையில் காணி வாங்கி வீடுகட்ட துடியாய் துடித்தவர்களை. . கொஞ்சக் காலம் காணி பூமி மலிவாய் இருந்தது. வெளிநாட்டுப் பணம்துள்ளி விளையாட.. இவர்கள் கேட்ட கேள்வியில் காணி பூமி விலை உயர்ந்தது. காசுத்திமிரினால் உள்ளூரில் பணம் உழைத்தவர்களையும் விட அதிகமாக் கேட்டு வாங்கி... வீடு கட்டினாலும் தெருவோரம் கட்டி, நாலு பேர் பார்க்க வேண்டும் என்பதில் அக்கறை.. இப்போது முதலில் நொருக்கப்பட்டவை இவைதான். காணியும் போ.. காசும் போ.. இப்போது வீடு வாங்குவதென்றால் ஒதுக்குப் புறமாகத் தான் தேடுவார்கள்.

★ ★ ★

சமீபத்தில் வந்த ஒருவரிடம் பேசினேன். சுவர்களுக்கு காதிருக்கிறது என்றார். எதையும் இரகசியமாகவே செய்துகொள்ளப் பழகி விட்டார்களாம் புலிகள்.

கைது செய்து கொண்டு செல்கிறவர்கள் பற்றி எதுவுமே பேசாதிருந்து விட்டு ஓரிரு வருடங்களின் பின்னர் வீட்டே வந்து 'வந்து மரண அத்தாட்சிப் பத்திரத்தை வாங்கிக் கொண்டு போங்கோ' என்கிறார்களாம். தனக்கு தெரிந்தவர்களில் ஒரு நிருபரும் அடக்கம் என்றார். என்ன கொடுமை.. இதைப் போன்ற ஒரு குணம் புலிகளைத் தவிர வேறு யாருக்கு வரும்?

★ ★ ★

நீண்ட காலத்தின் பின் திரையில் படம்பார்த்தேன். திருடா! திருடா!!. ஸ்ரீவள்ளி பார்த்த மாதிரி இருந்தது. நின்றால் பாட்டு, இருந்தால் பாட்டு. இந்தியானு ஜோன்ஸ் பார்த்த மாதிரி இருந்தது கதையைப் பார்த்தால். மணி ரத்தினத்துக்கும் ஸ்ரீராமுக்கும் 'இருட்டடி' போட்டால் நல்லாயிருக்கும் போல தோன்றியது. இதே ரேட்டில் போனால் ரகுமான் காற்றேடு கலப்பார் போலிருக்கிறது. திருடா, திருடா அல்ல, புலுடா, புலுடா... முத்து காமிக்ஸ் வாசித்தது போல..

எனக்குப் பிடித்தது ஒன்றே தான். அதுதான் நாயகி ஹீரா! முதுகுப் பக்கம் எதையும் காணாத உடைகள். யாரப்பா ஆடை அலங்காரம்? கண்டேன் காதல் கொண்டேன்! பானுப்பிரியா கோவிந்தா! ஹீரா! நான் தானே ஹீரோ!

# மரணம் பொங்க...!

தை பிறந்தால் வழி பிறக்குமென்ற
தமிழனின் கூற்று
இன்னொரு முறை பொய்த்துப் போனது!
தை பிறக்க வழி பிறக்குமென்ற
நம்பிக்கைகள் நசிந்து
வ'தை'யும் உ'தை'யும் படுவதே
வாடிக்கையானது!
மங்கலம் பொங்க, மகிழ்ச்சி பொங்க
என்றெல்லாம் எழுதி எழுதியே
என் பேனாவின்
இறுதித் துளி மையும் தீர்ந்து போனது!
இனியும் வேண்டாம்..
வழி பிறக்க வழி செய்யும் தை
பிறக்கவே வேண்டாம்!
மரணம் பொங்க, பட்டினி பொங்க
என்றே இனி
வாழ்த்துக்கள் ஆரம்பிக்கட்டும்!
எந்த நம்பிக்கையும் ஏற்படுத்த வேண்டாம்!
இந்த இருளே போதும்!
விடியலும் தேவையில்லை!
விளக்குகளும் தேவையில்லை.

நிலா குகதாசன்

*This newspaper is published by*
***Georgicka communications.***
*A member of Ethnic Press Council Of Canada.*

*Editor: George R.Ckrhushchev*

*P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.*

*Tel: (416) 920 9081*
*Fax: 963 5738*
**E mail:71650.3216 @Compuserve.com**
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.
ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள்
ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

## மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

# SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

# P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்


ABCDEFGHIJ KLMNO PQRSTUVWXYZ